YARL OSAI

# யாழ் ஓசை

வார இதழ்

Regested No. QD/130/News/2011

ஓசை : 01 | நாதம் : 23 | வெள்ளிக்கிழமை 08.04.2011 | வார இதழ் | விலை ரூபா: 15.00

# இலங்கையில் எந்தவித மனித உரிமை மீறலும் இடம்பெறவில்லை

## அமைச்சர் அநுர பிரியதர்ஷனயாப்பா கூறுகிறார்

### சோனியாவின் கருத்து குறித்து ஆராய்வு 50 களிலும் அவசரகால சட்டவிதிகள் இருந்தன

சர்வதேசமட்டத்தில் சில தரப்பினர் கூறுவது போன்று இலங்கையில் எந்தவிதமான மனித உரிமை மீறலும் இடம்பெறவில்லை. அதாவது சர்வதேச சட்டத்தை மீறும் வகையில் எந்த உரிமை மீறலும் இடம்பெறவில்லை. எமது சட்டத்துக்கு உட்பட்டு நாட்டின் இறைமையை பா்துகாக்கும் வகையில் பயங்கரவாதத்தை தோற்கடித்து மக்களுக்கு புதிய சுதந்திரத்தையும் சமாதானத்தையும் நிம்மதியையும் பெற்றுக்கொடுத்துள்ளோம் (6ஆம் பக்கம் பார்க்க)



அரியாலை கிழக்குப் பகுதியில் அண்மையில் மீளக்குடியமர்த்தப்பட்ட மக்கள் அடிப்படை வசதிகள் எதுவு மற்ற நிலையில் தறப்பாள் கொட்டகையினுள் இருப்பதைப் படத்தில் காணலாம்.

(படம்- வண்ணார்பண்ணை)

## வடக்கில் உதவி அரச அதிபர் பிரிவுகளை பிரதேச செயலக பிரிவுகளாக தரமுயர்த்த அமைச்சரவை அங்கீகாரம்

வடக்கில் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் பலவற்றை பிரதேச செயலக பிரிவுகளாக தரமுயர்த்த அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. அதன்படி யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களில் பல உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் பிரதேச செயலக பிரிவுகளாக தரமுயர்த்தப்படவுள்ளன என்று பதில் அமைச்சரவை (6ஆம் பக்கம் பார்க்க)

## இருவேறு விபத்துச் சம்பவங்களில் இராணுவ வீரர் பலி; இருவர் காயம்

வண்ணார்பண்ணை,

யாழ்ப்பாணம், கிளிநொச்சிப் பகுதிகளில் இடம்பெற்ற இருவேறு சம்பவங்களில் இராணுவ வீரர் ஒருவர் பலியானதுடன், இருவர் காயமடைந்துள்ளனர். பலாலி இராணுவத் தலைமையகத்தை அண்டிய பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தவறுதலான குண்டுவெடிப்புச் சம்பவமொன்றில் இராணுவ வீரர் ஒருவர் காயமடைந்துள்ளார். இச் சம்பவத்தில் டபிள்யூ.ஈ.எஸ். சம்பத் (வயது 19) என்பவரே காயமடைந்துள்ளவராவார். (6ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். பல்கலை பொறியியல் பீடத்தை கிளிநொச்சியில் நிறுவுவதற்கு முயற்சி

### - பல்கலைக்கழக மூதவை முடிவு

யாழ். பல்கலைக்கழக பொறியியல் பீடத்தை கிளிநொச்சியில் விவசாய பீடத்துக்கு அருகில் ஆரம்பிப்பதற்கு யாழ். பல்கலைக்கழக மூதவையும் பேரவையும் தீர்க் (6ஆம் பக்கம் பார்க்க)

## கொடிகாமம் பகுதியில் சிசுவின் சடலம் மீட்பு

வண்ணார்பண்ணை,

கொடிகாமம் - பாலாவிப் பகுதியில் பற்றைக்குள் இருந்து சிசுவின் சடலம் ஒன்று பொலிஸாரால் (6ஆம் பக்கம் பார்க்க)



# திருகோணமலைக் கடலில் கூட்டுப் பயிற்சிக்கு தயாராகும் இந்திய - இலங்கை கடற்படைகள்

இந்திய - இலங்கை கடற்படைகள் பெருமெடுப்பிலான கூட்டுப் பயிற்சி ஒன்றை எதிர்வரும் ஒக்டோபர் மாத்தில் நடத்தத் திட்டமிட்டுள்ளதாக இந்திய செய்தி நிறுவனம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

சிறிய மற்றும் அதிவேகத் தாக்குதல் படகுகளைக் கொண்டு - பெருமெடுப்பில் நடத்தப்படக் கூடிய தாக்குதல்களை முறிடியப்பதற்கான தந்திரோபாயங்களை உள்ளடக்கியதாக இந்தக் கூட்டுப்பயிற்சி அமையவுள்ளது.

இந்திய - இலங்கை கடற்படைகள் இந்த தந்திரோபாயப் பயிற்சியை மேற்கொள்வது இதுவே முதல்முறையாகும்.

சிறிய மற்றும் அதிவேகத் தாக்குதல் படகுகளைப் பயன்படுத்தி தீவிரவாதத் தாக்குதல்கள் மும்பை போன்ற இந்தியாவின் கரையோர நகரங்கள் மீது நடத்தப்பட்டால் அவற்றை முறியடிப்பது எவ்வாறு என்பதை அடிப்படையாக வைத்தே இந்தப் பயிற்சி இடம்பெறவுள்ளது.

'Slinex2011' -2011' என்ற பெயரில் இந்தக் கூட்டுப் பயிற்சி எதிர்வரும் ஒக்டோபர் மாதமளவில் திருகோணமலைக் கடற்பரப்பில் நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சியில் இரு நாடுகளினது கடற்படைகளின் சார்பிலும் தலா நான்கு அல்லது ஐந்து நாசகாரிப் போர்க்கப்பல்கள் கலந்து கொள்ளவுள்ளன.

புதிய தந்திரோபாயங்களை உள்ளடக்கியதாக இந்தக் கூட்டு கடற்பயிற்சி இடம்பெறும் என்று அந்த செய்தி ஊடகம் மேலும் தகவல் வெளியிட்டுள்ளது.

# பொலிஸாருக்கெதிராக அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல்

தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞனொருவர் பொலிசாருக்கெதிராக அடிப்படை உரிமை மீறல் மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

பொலிசாரினால் கைது செய்யப்பட்டு பாதுகாப்பு அமைச்சின் தடுப்புக் காவல் உத்தரவின் பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள் இளைஞரே பிரஸ்தாப அடிப்படை உரிமை மீறல் மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

கடந்த மார்ச் மாதம் 10 ஆம் திகதி தனக்குக் கிடைத்த தொலைபேசி அழைப்பொன்றினையடுத்து தான் கொட்டாஞ்சேனையிலுள்ள விடுதியொன்றுக்குச் சென்றிருந்த வேளையில் இரகசியப் பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ள அவர், எதுவித காரணமுமற்ற நிலையில் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளமையானது தனது அடிப்படை உரிமையை மீறும் செயலாகும் என்று தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

அவரது மனு பிரதம நீதியரசர் அசோக டி சில்வா உள்ளிட்ட நீதியரசர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, மேலதிக விசாரணைகள் எதிர்வரும் 27ஆம் திகதி வரை தள்ளி வைக்கப்பட்டுள்ளன.

# இந்த ஆண்டுக்கான சமுர்த்தி நிவாரணம் வழங்கப்படவில்லை

**- தமிழரசுக் கட்சி சுட்டிக்காட்டு**

சமுர்த்தி நிவாரணப் பயனாளிகளுக்கு கடந்த ஜனவரி, பெப்ரவரி, மார்ச் மாதங்களுக்குரிய நிவாரணப்பொருட்கள் வழங்கப்படவில்லையென தமிழரசுக் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

இவ்விடயத்தினைச் சுட்டிக்காட்டி யாழ். அரச அதிபருக்கு இலங்கை தமிழரசுக் கட்சி கடிதமொன்றை அனுப்பியுள்ளது.

அதில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:-

வழமையாக எழுபத்தைந்து வீதம் கட்டுப்பண முற்பண வழங்கலின் அடிப்படையிலேயே சங்கங்கள் விநியோகங்களை மேற்கொள்கின்றன. எனினும், மேற்குறிப்பிட்ட மூன்று மாதங்களுக்கான கட்டுப்பணம் விடுவிக்கப்படாத நிலையில் இரண்டு மாத பட்டியல் மட்டும் அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

நிதி வசதியுள்ள ஒன்று அல்லது இரண்டு சங்கங்கள் மீளளிப்பை எதிர்பார்த்து நிவாரணப்பொருட்கள் விநியோகத்தை மேற்கொள்கின்ற அதேவேளை, பெரும்பான்மையான சங்கங்கள் விநியோகத்தை மேற்கொள்ளவில்லை.

வறுமைக்கோட்டின் கீழ் வாழும் சமுர்த்திப் பயனாளிகளின் நிலைமையை மனிதாபிமானத்தோடு கருத்திற்கெடுத்து 2011 ஜனவரி, பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களுக்கான சமுர்த்தி நிவாரணப் பொருட்களை உடன் வழங்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு வேண்டுகிறோம்.

# ஸ்ரீ சத்திய சாய் பாபாவின் இரத்த அழுத்தம் சீராகவுள்ளது

புட்டபர்த்தி:

புட்டபர்த்தி மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வரும் பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் அரத்த அழுத்தம் சீராக இருப்பதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து நேற்று முன்தினம் வெளியிடப்பட்ட மருத்துவ அறிக்கையில், சத்திய சாயி பாபாவின் உடல்நிலை தொடர்ந்து சீராக இருந்து வருகிறது. அவருடைய இரத்த அழுத்தம், சுவாச நிலை ஆகியவை திருப்திகரமாக உள்ளது. தற்போது அவர் எளிதாக சுவாசிக்கிறார். செயற்கை சிறுநீரக சிகிச்சை நேரம் குறைக்கப்பட்டுள்ளது.

சுய நினைவு அளவும் அதிகரித்து வருகிறது. அவருக்கு சிகிச்சை அளித்து வரும் வைத்தியர்கள், சாயி பாபாவின் உடல்நிலை குறித்து தீவிரமாக கண்காணித்து வருகின்றனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# அடிப்படை உதவிகள் கிடைக்காது அல்லல்படும் மீள்குடியேறிய மக்கள்

வண்ணார்பண்ணை,

மீள்குடியேறிய மக்கள் எவ்வித அடிப்படை உதவிகளும் இன்றி அநாதைகளாக்கப்பட்டுள்ளதாக விசனம் தெரிவிக்கின்றனர். அரியாலை கிழக்கு மற்றும் பூம்புகார் பகுதியில் மீளக்குடியேற அனுமதி வழங்கப்பட்ட போதும் மீள்குடியேறிய மக்களுக்கு அடிப்படை வசதிகள் எதுவும் செய்துகொடுக்கப்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகின்றது.

அரியாலை கிழக்கில் மீளக்குடியமர்ந்த 75 குடும்பங்களுக்கு மாத்திரமே தகரங்கள் வழங்கப்பட்டுள்ளன. பூம்புகார் பகுதி மக்களுக்கு எதுவித உதவிகளும் இது வரை வழங்கப்படவில்லை.

மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்ட பகுதிகளில் இராணுவ முகாம்கள் இன்னமும் அகற்றப்படாது இருப்பதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது என்றிப் திட்டத்தின் மூலம் அப்பகுதியில் மண் அணை அகற்றப்பட்டு வருவதுடன், நல்லூர் பிரதேச செயலகத்தால் அப்பகுதியிலுள்ள கிணறுகளும் சுத்தமாக்கப்பட்டு வருகின்றன.

எனினும், இப்பணிகள் மந்தகதியிலேயே இடம்பெற்று வருவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, தமக்கான எந்தவித அடிப்படை உதவிகளும் அரசாங்கத்தால் வழங்கப்படவில்லையெனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

# பண்டிகைக் காலத்தை முன்னிட்டு விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள்

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு நாட்டின் சகல பகுதிகளிலும் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

மலரும் தமிழ் சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு நகரங்களுக்குச் செல்லும் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் அறிவித்துள்ளனர்.

மக்களின் பொருட்கள் மற்றும் பணம் ஆகியவற்றை பாதுகாப்பதற்காக விசேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சீருடை அணிந்த பொலிஸாருக்கு மேலதிகமாக சிவில் உடையணிந்த பொலிஸாரும் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் பிரசாந்த ஜயகொடி தெரிவித்துள்ளார்.

சன நெரிசல் மிக்க பிரதேசங்களுக்குச் செல்லும் மக்கள் தமது பொருட்கள் மற்றும் பணம் தொடர்பில் விழிப்புடன் செயற்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

# கிழக்கு மாகாணத்தில் பாலியல் துன்புறுத்தல் சம்பவங்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

கிழக்கு மாகாணத்தில் பாலியல் துன்புறுத்தல் சம்பவங்களின் எண்ணிக்கை உயர்வடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகளவான பாலியல் துன்புறுத்தல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை அறிவித்துள்ளது.

கடந்த மூன்று மாத காலப்பகுதியில் பாலியல் துன்புறுத்தல்கள் தொடர்பில் 33 சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

மட்டக்களப்பில் அண்மைக்காலமாக அதிகளவான பெண்களும் சிறுவர்களும் பாலியல் துன்புறுத்தல்களினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

2010 ஆம் ஆண்டில் மொத்தமாக 154 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றதாகவும், இந்த ஆண்டின் முதல் மூன்று மாதங்களிலேயே 33 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது

# ஈரான் கடற்பரப்பில் எண்ணெய் திருடிய இலங்கையர் கைது

ஈரான் கடற்பரப்பில் எண்ணெய் திருடிய இலங்கையர் உள்ளிட்ட வெளிநாட்டவர் பலர் கைது செய்யப்பட்டுள்ளதாக ஈரான் அராசாங்கம் அறிவித்துள்ளது.

ஈரானின் கடற்பரப்பில் எண்ணெய்த் திருட்டை மேற்கொள்ளும் வெளிநாட்டுக் கப்பல்களில் பணியாற்றும் இலங்கையரே ஈரானில் கைது செய்யப்பட்டுள்ளதாக இலங்கை வர்த்தக கப்பல் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது. இவ்வாறான செயற்பாடுகளுடன் தொடர்புடைய வெளிநாட்டவர்கள் பலருடன் இலங்கையரும் கணிசமான அளவில் கைது செய்யப்பட்டிருப்பதாக வர்த்தக கப்பற் கூட்டுத்தாபனம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

அதன் காரணமாக இனி வரும் காலங்களில் வளைகுடா கடற்பரப்பில் கப்பல்களில் பணிக்குச் செல்லும் போது இலங்கையர்கள் வெகு அவதானமாக நடந்து கொள்ள வேண்டும் என்றும் கூட்டுத்தாபனம் அறிவுறுத்தியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். திருமறைக் கலாமன்றத்தின் 'கடவுள் வடித்த கண்ணீர்' ஆற்றுகை

## பிரமாண்டமான மேடை அமைப்பு

யாழ். திருமறைக் கலாமன்றம் தயாரித்து வழங்கும் தவக்கால ஆற்றுகையான 'கடவுள் வடித்த கண்ணீர்' என்னும் திருப்பாடுகளின் காட்சி எதிர்வரும் 12ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 6.45 மணிக்கு திருமறைக் கலாமன்ற அரங்கில் ஆரம்பமாகவுள்ளது. இந் நிகழ்வு தொடர்ந்து 17 ஆம் திகதி வரை ஐந்து நாட்களுக்கு நடைபெறவுள்ளது.

தினமும் மாலை 6.45 மணிக்கு ஆரம்பமாகவுள்ள திருப்பாடுகளின் காட்சி வெள்ளிக்கிழமை மட்டும் மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும். 14 ஆம் திகதி சித்திரைப் புத்தாண்டு தினமானதால் அன்றைய தினம் ஆற்றுகை இடம்பெறாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நூற்றுக்கும் அதிகமான கலைஞர்கள் பங்கேற்று நடிக்கின்ற இவ்வாற்றுகைக்காக கடந்த ஆண்டுகளைப் போல் இம்முறையும் 150 அடி நீளமான விசேட மேடை அ[illegible]க்கப்பட்டு வருகின்றது.

திருமறைக் கலாமன்ற இயக்குநர் நீ. மரியசேவியர் அடிகளாரின் எழுத்துருவில் உருவாகிய இவ்வாற்றுகைக்கு திருமறைக் கலாமன்ற பிரதி இயக்குநர் யோ. யோன்சன் ராஜ்குமார் மீள்வடிவம் கொடுத்து நெறியாள்கை செய்கின்றார். இதற்கான இசையமைப்பை இசைத்தென்றல் ம.யேசுதாசன் வழங்குகின்றார்.

திருமறைக்கலாமன்றம் 1963 ஆம் ஆண்டு முதல் திருப்பாடுகளின் காட்சியை மேடையேற்றி வருகின்றது. இயேசுவின் திருப்பாடுகளின் வரலாற்றினை ஒவ்வொரு ஆண்டும் அக்காலத்தின் சமூகச் சூழல்களுடன் இணைத்து தயாரிப்பதால் இவ்வாற்றுகை ஆழ்ந்த அர்த்தம் பொதிந்ததாக அமைவதுடன் மக்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பைப் பெறுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.



சிறுப்பிட்டி ஜனசக்தி கிராம மீள் எழுச்சி வேலைத்திட்டத்தின் கீழ் புனரமைப்பு செய்யப்பட்ட சிறுப்பிட்டி அ.த.க.பாடசாலை வீதியை கிராமிய மகளிர் குழு மற்றும் பொதுமக்கள் புனரமைப்பு செய்வதைப் படத்தில் காணலாம். (படம்:- அச்சுவேலி நிருபர்)

## முதல் பருவத்திற்கான பெறுபேறுகள் வெளியீடு

தெல்லிப்பழை,

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உயர் பட்டப் படிப்புக்கள் பீடத்தினால் நடத்தப்படும் பொதுநிர்வாக முதுகலைமாணி கற்கை நெறியின் முதல் பருவத்திற்கான பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன.

இப்பரீட்சைப் பெறுபேறுகள் உயர் பட்டப் படிப்புகள் பீட விளம்பரப் பலகையி[illegible] பார்வையிடமுடியும் என உயர் பட்[illegible]டிப்புக்கள் பீட பீடாதிபதி பேராசிரியர் கே. சத்தியசீலன் தெரிவித்துள்ளார்.

# நகர்ப்புறப் பாடசாலைகளுக்கு இணையாக கிராமப்புற பாடசாலைகளை வளர்க்க வேண்டும்

## இ. இளங்கோவன் தெரிவிப்பு

தெல்லிப்பழை,

அரசின் நிகழ்ச்சித்திட்டங்கள் நகர்ப்புறப் பாடசாலைகளோடு மட்டும் நிற்காது கிராமப்புறப் பாடசாலைகளிலும் மேற்கொள்ளப்படுகின்றன. நகர்ப்புறப் பாடசாலைகளைப் போன்று கிராமப்புறப் பாடசாலைகளுக்கும் சமமான வசதிவாய்ப்புக்களை வழங்கி அவற்றை வளர்த்தெடுக்க வேண்டும். இதனடிப்படையில், இன்றைய'நாம் பயிரிடுவோம் நாளை அறுவடை செய்வோம்' எனும் மரம்நடுகைத் திட்ட நிகழ்வானது பண்டத்தரிப்பு - இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது என வட மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இ. இளங்கோவன் தெரிவித்தார்.

வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி தலைமையில் பண்டத்தரிப்பு - இந்துக் கல்லூரியில் நடைபெற்ற மரக்கன்று நடுகை மற்றும் விதை உள்ளீடுகள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

வீட்டுத்தோட்டங்கள், பாடசாலைத் தோட்டங்கள் என்பவற்றோடு அரச காணிகளிலும் இச் செயற்பாடு மேற்கொள்ளப்படவேண்டும். இதனூடாக உள்ளூருக்குத் தேவையான உணவுப்பொருட்களைப் பெற்று ஆரோக்கியமான சமூகத்தை வளர்க்கும் திட்டத்திற்கு இச் செயற்பாடு அடிப்படையாக அமையும் .

இச் செயற்பாடானது பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஷில் ராஜபக்ஷவின் நிர்வாக ஒழுங்குகளின் அடிப்படையில் கல்வி அமைச்சு ஊடாக சகல பாடசாலைகளிலும் செயற்படுத்தப்படுகின்றது.

வீட்டுத்தோட்ட செயற்பாட்டில் ஈடுபடுவதனூடாக ஆரோக்கியமான உணவுப் பொருட்களையும் இவற்றுக்கு ஒதுக்குகின்ற செலவீனங்களையும் குறைத்துக்கொள்ளலாம். பாடசாலைத் தோட்டம் சிறந்த பங்களிப்பை வழங்குமாகவிருந்தால் மதிய உணவினை சிறப்பாக வழங்க முடியும். ஆரோக்கியமான மனித உற்பத்தியினூடாக 8 வீதமான பொருளாதார வளர்ச்சியை எட்டமுடியும். இதனூடாக இலங்கையை உலக பொருளாதார மட்டத்தில் வளர்ச்சியடையச் செய்யமுடியும்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சிந்தனையின் அடிப்படையில் உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்க வேண்டும். இதனூடாக உறுதியான போஷாக்குள்ள உணவு வகைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

விவசாயத் தோட்டச் செயற்பாடுகளில் ஈடுபடும் பாடசாலைகளுக்கு இணையாக ஏனைய பாடசாலைகளும் ஈடுபட வேண்டும்; வளர வேண்டும்.

கல்வி மாணவனுக்கு உற்சாகமான வரவேற்பைத் தருவதோடு மாணவர்கள் இவ்வாறான இணைச்செயற்பாட்டில் ஈடுபடுவதனூடாக வளப்பற்றாக்குறையை நிவர்த்தி செய்துகொள்ள முடியும்.

பண்டத்தரிப்பு - இந்துக் கல்லூரியின் பாடசாலை தோட்டச் செயற்பாடு சிறப்பாக உள்ளது. மூலிகைத் தோட்ட பராமரிப்பு சிறந்த முறையிலுள்ளது. இதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

பாடசாலைகளில் விவசாயக் கல்வி ஊக்குவிக்கப்பட வேண்டும். இதனூடாக தன்னிறைவான விவசாய செயற்பாட்டின் ஊடாக தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியும். இதனால், உள்ளூர் உற்பத்தி அபிவிருத்தி செய்யப்படும் எனத் தெரிவித்தார்.



கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகத்திற்கு அருகில் உள்ள கண்ணன் ஆலய பிரதான வீதி கடந்த 4 ஆம் திகதி முதல் மக்கள் பாவனைக்காகத் திறந்துவிடப்பட்டுள்ளதை படத்தில் காணலாம். (படம்:- கிளிநொச்சி நிருபர்)

# திருக்குடும்பக் கன்னியர் மட பாடசாலை முத்தமிழ் விழா

தெல்லிப்பழை,

யாழ்ப்பாணம் - திருக்குடும்ப கன்னியர் மட தேசியப் பாடசாலையின் முத்தமிழ் விழா கல்லூரி அதிபர் அருட்சகோதரி நெவிஸ் லடிஸ்லஸ் தலைமையில் இன்று 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. முத்தமிழ் விழா நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வட மாகாண கலாசார திணைக்களப் பணிப்பாளர் திருமதி ந. சிறிதேவியும், சிறப்பு விருந்தினராக மன்னார் தமிழ்ச் சங்கத் தலைவர் அருட்திரு. தமிழ்நேசன் அடிகளாரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Yarl Osai
# யாழ் ஓசை
2011 ஏப்ரல் 08 ஆம் திகதி வெள்ளிக்கிழமை
இல.117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 021-2222730, Fax: 0212222730
E-mail-jaffna@virakesari.lk

# நெடுந்தீவுக்கான படகு சேவையை சீர் செய்வது அவசியம்

யுத்தம் முடிவடைந்துள்ள நிலையில் வடக்கு பகுதி மக்களின் அன்றாட வாழ்க்கை முறைமைகள் வாழ்வாதார விடயங்கள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிலைமைகள் என்பனவற்றில் உரிய கவனம் செலுத்தப்படவேண்டும் என்று அடிக்கடி பல்வேறு தரப்பினராலும் வலியுறுத்தப்பட்டுவருகின்றது.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கள் தொழில்களை தங்கு தடையின்றி மேற்கொள்ளவும் பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளை இடையூறுகள் இன்றி முன்னெடுக்கவும் ஏனைய தமது அன்றாட வாழ்வாதார செயற்பாடுகளை கொண்டு நடத்தவும் தேவையான உட்கட்மைப்பு வசதிகள் செய்துகொடுக்கப்படவேண்டியது சம்பந்தப்பட்ட தரப்பினரின் பொறுப்பாகும்.

முக்கியமாக போக்குவரத்து வசதிகள், மின்சாரம், சுகாதார சேவைகள், கல்வி வசதிகள் உள்ளிட்ட மக்களின் அடிப்படை தேவைகள் குறித்து கவனம் செலுத்தப்படவேண்டும் என்று வலியுறுத்தப்படுகின்றது. இவற்றில் முக்கியமாக போக்குவரத்து சேவை சரியான முறையில் இயங்காவிடின் குறித்த பிரதேசம் ஒன்றின் அனைத்து துறைகளிலும் பாதிப்புகள் ஏற்படும் நிலைமை காணப்படுகின்றது. காரணம் போக்குவரத்து துறையில்தான் ஏனைய அனைத்து துறைகளினதும் செயற்பாடுகள் தங்கியுள்ளன.

இந்நிலையில் நெடுந்தீவு பகுதிக்கான படகுச் சேவை சரியான முறையில் இயங்காமையை கண்டித்து வீதி அபிவிருத்தி .அதிகாரசபைக்கு முன்பாக மறியல் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக மக்கள் தெரிவித்துள்ளனர். . நெடுந்தீவுக்கு படகு சேவையின் ஊடாகவே போக்குவரத்தில் ஈடுபடவேண்டிய தேவை உள்ளமை அனைவருக்கும் தெரிந்த விடயமாகும்.

நெடுந்தீவில் உள்ள மக்கள் தமது தொழில்கள், பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகள் ஏனைய தமது அன்றாட வாழ்வாதார செயற்பாடுகளை முன்னெடுக்கவும் படகு சேவை என்பது மிகவும் இன்றியமையாததாகும். இந்நிலையில் நெடுந்தீவுக்கு சேவையில் ஈடுபடும் அரச படகான குமுதினி கடந்த ஐந்து மாதங்களாக சேவையில் ஈடுபடாத நிலையில் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். அத்துடன் புதிய படகும் துறைமுகம் ஆழமில்லை என்று கூறி குறிகட்டுவானில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

திருத்தியமைக்கப்பட்டு மீண்டும் சேவைக்கு வந்த குமுதினி உடன் பழுதடைந்து தற்போது போக்குவரத்து சேவை பாதிக்கப்பட்டுள்ள நிலையில் இது தொடர்பில் உரிய விசாரணை நடத்தப்பட்டு போக்குவரத்து சேவை இடம்பெறவேண்டும் என்று மக்கள் கூறுகின்றனர்.

அதாவது நெடுந்தீவு மக்கள் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு முன்பாக மறியல் போராட்டம் செய்யுமளவுக்கு தயாராகியுள்ளனர் என்றால் அம்மக்கள் எந்தளவுக்கு பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதனை புரிந்து கொள்ள முடிகின்றது. உண்மையில் குறித்த பிரதேசம் ஒன்றின் பல்வேறு துறைகளையும் செயற்பாடுகளையும் இணைக்கும் வகையிலேயே போக்குவரத்துத்துறை காணப்படுகின்றது.

இந்நிலையில் நெடுந்தீவு பகுதிக்கான போக்குவரத்து சேவை தொடர்பில் உரிய தரப்பினர் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு முன்வருவதுடன் சிரமங்களை எதிர்நோக்கும் மக்களுக்கு ஆறுதலை அளிப்பது அவசியமாகும்.

யுத்தம் முடிவுற்றுள்ள நிலையில் இதுவரை காலமும் துன்பங்களை அனுபவித்து வந்த மக்கள் தற்போதுதான் நிம்மதி பெருமூச்சுடன் வாழ்க்கையை சுதந்திரமாகவும் நிம்மதியாகவும் வாழ்வதற்கு ஆரம்பித்துள்ளனர். இந்த சந்தர்ப்பத்தில் அந்த மக்களின் தேவைகள் தொடர்பில் கவனம் செலுத்தவேண்டியது அவசியமாகும்.

# தமிழ் மக்களின் அரசியல் ஸ்திரத்தை குலைக்கும் ஏகத்தலைமைப் பிடிவாதம்

(சென்றவாரத் தொடர்ச்சி)

என்ற கருத்தை தெரிவித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

புலிகள் அதிகாரத்தில் இருந்த காலத்தில், தமிழ் மிதவாதத் தலைமைகள் அவர்களது முதன்மையான இருப்பை மனமில்லாமல் ஏற்றுக் கொண்டிருந்தன. இந்தக் காலத்தில் அரசியலில் அனைத்தையும் தீர்மானிப்பவர்களாக புலிகள் இருந்ததால், சூழ்நிலையின் கைதிகளான தமிழ் மிதவாதத் ததைலமைகள் புலிகளைஆதரிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டன.

செப்டம்பர் 11 தாக்குதலையடுத்து ஏற்பட்ட நெருக்கடிகளால் 'பயங்கரவாதம்' என்னும் சொல் உலகளவில் வெறுப்புக்குரியதொரு சொல்லாகப் பார்க்கப்பட்டது.

ஏற்கனவே அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளின் பயங்கரவாத பட்டியலில் இணைக்கப்பட்டிருந்த புலிகள் தாங்கள் ஜனநாயகத்திற்கு எதிரானவர்கள் அல்லர். அத்துடன், தங்களது நிலைப்பாட்டில்தான் அனைத்து மக்களுமே ஒன்றித்திருக்கின்றனர் என்பதை அனைத்துலகத்திற்கு நிரூபிக்கும் நோக்கிலேயே அதுவரை எதிரணியில் இருந்த பல்வேறு கட்சிகளை தங்களின் பிடியில் கொண்டு வந்தனர்.

புலிகள் இராணுவரீதியில் பாரிய வளர்ச்சியைக் கொண்டிருந்ததால் கூட்டமைப்பில் இருந்த முன்னாள் எதிரணியினரை அவர்கள் ஒரு பிரச்சினையாகப் பார்க்கவில்லை. ஆனால், புலிகள் கூட்டமைப்பு சுயாதீனமாக இயங்குவதில் அக்கறை கொண்டிருக்கவில்லை. பிறிதொரு வகையில் கூட்டமைப்பின் செயற்பாடுகளை கண்காணிக்கும் வகையிலேயே தங்களுச் கு நெருக்கமானவர்களையும் அதில் இணைத்தனர்.

2009 மே மாதத்துடன் புலிகளின் எதிர்பாராத அழிவுடன், அதுவரையில் புலிகள் ஈழத் தமிழர் அரசியிலில் பேணி வந்த மேலாதிக்கமும் முடிவுக்கு வந்தது.

ஒருவகையில் ஈழத் தமிழர்கள் ஓர் அரசியல் வெறுமைக்குள் தள்ளப்பட்டனர். இந்த சந்தர்ப்பத்தில்தான் த.தே.கூட்டமைப்பு தமிழ் மக்களுக்கான அரசியல் தலைமைத்துவத்தை வழங்க வேண்டிய பொறுப்பை ஏற்றுக் கொள்கிறது. சம்பந்தர் தலைமையில் கூட்டமைப்பு இயங்கத் தொடங்கிய முதல் சந்தர்ப்பத்திலேயே கூட்டமைப்பில் ஓர் அங்கமாக இருந்த, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் அணி முரண்பட்டு விலகியது. கொள்கை ரீதியான முரண்பாடே இதற்கு காரணம் என்று கூறப்பட்டது.

இந்தச் சூழலில் கூட்டமைப்பின் எதிர்காலம் குறித்த சந்தேகங்களுக்கு பதிலிறுக்கும் வகையில் அதனை ஒரு கட்சியாக பதிவு செய்யவுள்ளதாகவே அப்போது கூறப்பட்டது. ஆனால், தமிழரசுக் கட்சியின் அறிக்கையுடன் அது ஒருபோதுமே சாத்தியப்படப் போவதில்லை என்பது இப்போது வெள்ளிப்படையாகியுள்ளது. அரசியல் உரிமைக்காக போராடும் ஒவ்வொரு இனமும் தங்களது இலக்கில் ஒன்றுபட்டு செயற்பட்டாலன்றி ஒரு போதுமே தங்களது அரசியல் கோரிக்கையை அரசிடமோ அல்லது அனைத்துலக சமூகத்திடமோ ஆணித்தரமாக முன்வைக்க முடியாது.

புலிகள் இராணுவ வலிமையில் நம்பிக்கையுள்ள அமைப்பாக இருந்த போதும் ஜனநாயக ரீதியாக மக்களால் தெரிவு செய்யப்பட்ட அமைப்புக்களின் ஆதரவும் தங்களுக்குத் தேவை என்பதை உணர்ந்தே கூட்டமைப்பை பலப்படுத்தினர். பேச்சுக்குச் செல்லும் முன்னர் தங்களது நிலைப்பாடும் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்களின் நிலைப்பாடும் ஒன்றென்பதை நிரூபிக்கும் ஒரு தந்திரோபாயமாகவே இதனைக் கையாண்டனர். ஆனால், இன்று முழுமையானதோர் அரசியல் வீழ்ச்சிக்கு பின்னர் தட்[illegible] தடுமாறி எழுந்து நிற்க முயலும் சூழலில், இருக்கும் அரசியல் கூட்டையும் சிதைக்கும் வகையில் நமது தலைமைகள் செயற்படுவதை எந்த அடிப்படையில் விளக்குவது. இது அடிப்படையிலேயே கடைந்தெடுத்த சுயநலமாகும் என்பதையே இந்தக் கட்டுரை மக்கள் முன்வைக்க விழைகிறது.

இன்று ஆளும் கட்சி, அதனை நோக்கியெழும் அனைத்து சவால்களையும் தனது வலிமையான அரசியல் கூட்டின் மூலமே தோற்கடித்து வருகிறது. மறுபுறத்தில் ஐக்கிய தேசியக் கட்சியும் சரத்பொன்சேகா அணியை தங்களுடன் இணைத்துக் கொள்ளும் வகையில் செயற்படுகிறது.

ஆனால், நமது சூழலில் இருக்கின்ற கூட்டையும் எவ்வாறு உடைக்கலாம் என்று விவாதிக்கப்படுகிறது. இப்படியா[illegible]ட்டாள்தனமானவர்கள் தமிழர்களின் தலைவராக இருந்தால் எவ்வாறு நம்மால் முன்நோக்கி நகர முடியும்? இதிலிருந்து எவ்வாறு மீண்டெழுவது என்பதற்காக சிந்திக்கும் பொறுப்பு நம் ஒவ்வொருவருக்கும் உண்டு என்பதையே இந்தக் கட்டுரை தீர்வாக முன்வைக்கிறது.

யார் தலைவராக இருப்பது என்பதில் காட்டப்படும் அக்கறையில் இம்மியளவும் மக்களின் எதிர்காலத்தின் மீது காண்பிக்கப்படவில்லை.

**நந்தன் அரியரட்ணம்**

இந்த நிலையில் நாம் எவ்வாறு அரசியலில் முன்னோக்கி நகர இயலும். அரசுடன் ஆக்க பூர்வமாக பேச முடியும். இது குறித்து தமிழ் சமூகத்தில் இயங்கிவரும் அரசியல் குடிமக்கள் சமூகம் தனது கவனத்தைக் குவிப்பது உடனடித் தேவையாகும். கூட்டமைப்பின் பதிவை வலியுறுத்தி அழுத்தங்களை பிரயோகிப்பது அவசியமாகும். ஒன்றுபட்ட அரசியல் முன்னெடுப்புக்களுக்கு எவர் தடையாக இருக்கின்றனரோ அவர்கள் மக்கள் மத்தியில் அம்பலப்படுத்தப்பட வேண்டும். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மத்திய, மாநில அரசுகளின் ரோந்துப் படகுகள் எத்தகைய பாதுகாப்பை வழங்கியிருக்கின்றன?

## கருணாநிதி வீட்டுக்காகவே போராடுகிறார் என்கிறார் விஜயகாந்த்

திருவாரூர் :

மத்திய, மாநில அரசுகளின் ரோந்துப் படகுகள் தமிழக மீனவர்களுக்கு எத்தகைய பாதுகாப்பை வழங்கியிருக்கின்றன என்பதை எமக்கு தெரியப்படுத்த வேண்டும் என்கிறார் தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த்.

திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி தொகுதியில் பிரசாரம் செய்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் பேசியதாவது:

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் கொல்லப்படுவது தமக்கு துக்கம் அளிப்பதாக சோனியா கூறுகிறார். அடிக்கடி சுடப்படுவதும், கொல்லப்படுவதும் மன வேதனையாக உள்ளது என்று கருணாநிதி கூறுகிறார். இதை சொல்வதற்காகவா தமிழக மக்கள் உங்களை ஆட்சியில் உட்கார வைத்தனர்? மாறாக மத்திய, மாநில அரசு ரோந்துப் படகுகள், மீனவர்களுக்கு என்ன பாதுகாப்பை வழங்கின என்று நீங்கள் சொல்ல வேண்டும்.

> சுமார் 40 கோடி ரூபா சொத்தைக் கொண்டுள்ள முதல்வரின் மனைவி எவ்வகையில் இந்த சொத்துக்களை பெற்றுக்கொண்டார். அவர் ஏதேனும் சினிமா படத்தில் நடித்தாரா?

தமிழக மீனவர்கள் தாக்கப்படுவது குறித்து டில்லிக்கு கடிதம் எழுதினேன். அதனால், நிருபமா ராவ் வேகமாக இலங்கைக்குச் சென்று, தமிழர் பிரச்சினை பற்றி பேசுவார் என்று கூறும் நபர், அவர் என்ன பேசினார் என்பதை மட்டும் சொல்லவே மாட்டார்கள்.

கருணாநிதி வீட்டிற்காக போராடுபவர். உங்களுக்கு வீட்டுக்காக போராடுபவர் வேண்டுமா... தமிழ்நாட்டுக்காக போராடுபவர் வேண்டுமா... திருவாரூர் கூட்டுறவு வங்கியில் 1,000 ரூபாய் செலுத்த முடியாதவர் இன்று தனக்கு 5 கோடியும், துணைவியாருக்கு 40 கோடியும் சொத்து இருப்பதாக பட்டியல் கொடுத்துள்ளார். இவராவது சினிமாவுக்கு கதை, வசனம் எழுதினார். துணைவியார் எங்கே வேலைக்கு போனார். சினிமா படம் நடித்தார்களா... 40 கோடியை சம்பாதிக்க என்ன வேலை செய்தனர்.

மேலும் ஸ்பெக்ட்ரம் ஊழலில் ஒருவர் உள்ளே இருக்கிறார், ஒருவர் தூக்கில் தொங்கிவிட்டார். ஒருவர் வீட்டில் சாப்பிட்டுக் கொண்டு இருக்கிறார்.

கலைஞர் 'டிவி'க்கும், கலைஞருக்கும் சம்பந்தமில்லை என்கிறார். அனைத்தும் விரைவில் சி.பி.ஐ. விசாரணையில் வெளிவரும் என்றார்.

# ராகுல் காந்தியின் முன்னிலையில் தங்கபாலுவை எதிர்த்த காங்கிரஸார்





ஈரோட்டில் நேற்றுமுன்தினம் தேர்தல் பிரசாரத்திற்கு வந்திருந்த ராகுல் காந்தி, தன் முன்னிலையிலே காங்கிரஸார் தங்கபாலுவை எதிர்த்ததால் அதிர்ச்சியடைந்தார்.

ஈரோடு மாவட்ட தி.மு.க., காங்கிரஸ் மற்றும் கூட்டணிக் கட்சிகளின் வேட்பாளர்களை ஆதரித்து நேற்று முன்தினம் வேளாளர் பொறியியல் கல்லூரியில் பிரசாரக் கூட்டம் நடந்தது. அதில் ராகுல் காந்தி கலந்து கொண்டு பேசினார்.

அப்போது தங்கபாலு பேச வந்தார். இதையடுத்து கட்சியினர் பெரும் திரளாக எழுந்து தங்கபாலுவே பேசாதே என்று கத்தி கூச்சலிட்டு எதிர்ப்பு தெரிவித்தனர். இதனால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது. இதை ராகுல் காந்தி அதிர்ச்சி கலந்த முகத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார்.

இதனால் பேச ஆரம்பித்த தங்கபாலு சற்று நேரத்தில் பேச்சை நிறுத்தி விட்டு தனது இருக்கையில் போய் அமர்ந்து கொண்டார்.

காங்கிரஸ் வேட்பாளர் தேர்வு தொடர்பாக தங்கபாலு மீது காங்கிரஸார் அதிருப்தியில் உள்ளனர். பெரும் குழப்பத்திற்குப் பின்னர் மயிலாப்பூர் தொகுதியில் தங்கபாலுவே வேட்பாளராக அதிரடியாக மாறியதைத் தொடர்ந்து தங்கபாலு மீதான எதிர்ப்பலை அதிகமாகவே உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# நடிகர் செந்தில் பிரசாரத்தில் தி.மு.க.வினர் கல்வீச்சு



அருப்புக்கோட்டையில் நடிகர் செந்தில் பிரசாரம் செய்யும் போது தி.மு.க.வினர் கற்களை வீசி தாக்கியுள்ளனர்.

அருப்புக்கோட்டை வெள்ளக்கோட்டை காமராஜர் சிலை அருகே நடிகர் செந்தில் பிரசாரம் செய்தார். அப்போது, தி.மு.க.வை சேர்ந்த இருவர் கூட்டத்தை நோக்கி கற்களை வீசி தாக்குதல் நடத்தினர். இதனைத்தொடர்ந்து அவர்களில் ஒருவரை பிடித்த பொலிஸார் அவரிடம் விசாரணை மேற்கொண்டு வருகிறார்கள்.

# பிரணாப் மகனுக்கு ரு.58 இலட்சம் சொத்து

ராம்பூர்ஹாத் :

மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜியின் மகன் அபிஜித் முகர்ஜி தன் சொத்து மதிப்பு, 58 இலட்சம் ரூபாய் என வேட்பு மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய அமைச்சர் பிரணாப் முகர்ஜியின் மகன், மேற்கு வங்க சட்டசபை தேர்தலில், காங்கிரஸ் சார்பில் போட்டியிடுகிறார். 'ஸ்டீல் அத்தாரிட்டி ஆப் இந்தியா' நிறுவனத்தின் பொது மேலாளராக இருந்த அபிஜித், தேர்தலில் போட்டியிடுவதற்காக, இப்பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

தன் மூதாதையரின் சொந்த ஊரான பிர்பும் மாவட்டம் நல்ஹாத்தி தொகுதியில் இவர் போட்டியிடுகிறார். பட்டதாரியான அபிஜித் தனக்கு வீடு, நிலம், நகை, வாகனம் என அனைத்து சொத்துக்களின் மதிப்பு 58 இலட்ச ரூபாய் என மனுவில் தெரிவித்துள்ளார்.

# அ.தி.மு.க. தொண்டர் கடையில் தேநீர் வாங்கி அருந்திய ஸ்டாலின்



குமாரபாளையம்,

நாமக்கல் மாவட்டத்தில் தேர்தல் பிரசாரம் செய்த மு.க.ஸ்டாலின் அ.தி.மு.க. பெண் தொண்டர் ஒருவரின் தேநீர் கடையில் தேநீர் வாங்கி அருந்திய சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

தமிழக துணை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தமிழகம் முழுவதும் ஒவ்வொரு மாவட்டங்களாகச் சென்று தி.மு.க. கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து பிரசாரம் செய்து வருகிறார்.

அதன்படி பிரசார கூட்டம் ஒன்றிற்கு புறப்பட்டு சென்ற ஸ்டாலினின் வாகனம் மேட்டுக்காடு என்ற கிராமத்தினருகே சென்று நின்றது.

இந்நிலையில் வாகனத்திலிருந்து இறங்கிய ஸ்டாலின் அங்கு வீதியோரத்தில் இருந்த ஓலைக்குடிசையினால் வேயப்பட்ட தேநீர் கடைக்குச் சென்றார்.

பின்னர் தனக்கு தேநீர் தருமாறு கேட்டார். இதனால் இன்ப அதிர்ச்சியடைந்த தேநீர் விடுதியின் உரிமையாளர் தனலட்சுமியிடம், உடனே தேநீரொன்றை தயாரித்து அவரிடம் கொடுக்க அதை ருசித்த அவரும் தனலட்சுமியிடம், வியாபாரம் எப்படி போகிறது? என்று கேட்டதோடு தேநீருக்கு பணம் எவ்வளவு என்று கேட்டார்.

ஆனால் அவரோ பணம் வேண்டாம் என்று கூறினார். இதனிடையே குறித்த கடைக்குள் எட்டிப்பார்த்த ஸ்டாலின் உள்ளே அ.தி.மு.க. நாட்காட்டியொன்று தொங்கிக்கொண்டிருந்ததைக் கண்டு நீங்கள் அ.தி.மு.க.வை சேர்ந்தவரா? என்று கேட்டார். அதற்கு அவர், ஆமாம் என்றார். இதனைத்தொடர்ந்து ஸ்டாலின் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றார்.

# அ.தி.மு.க.வினால் கச்சத்தீவு மீட்கப்படும்: கிருஷ்ணசாமி

கோவை:

ஜெயலலிதா ஆட்சிக்கு வந்தால்தான் கச்சத்தீவு மீட்கப்படும் என, புதிய தமிழகம் கட்சித் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி தெரிவித்தார்.

அ.தி.மு.க. கூட்டணி கட்சித் தலைவர்கள் பங்கேற்ற பொதுக்கூட்டம் கோவையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் கலந்து கொண்டு பேசும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது,

முதலில் இருளில் மூழ்கிக் கிடக்கும் தமிழகத்தை மீட்கவேண்டும். அதன் முதல் கட்டமாக விஷம் போல் ஏறியிருக்கும் விலைவாசி உயர்வை குறைக்க வேண்டும்.

மேலும் தமிழக மீனவர்களுக்கு விடுதலைவேண்டும் என்று சொன்னால், கச்சதீவு மீட்கப்பட வேண்டும். ஆனால் கச்சதீவு தி.மு.க.வால் மீட்கப்படாது. ஜெயலலிதா ஆட்சிக்கு வந்தால்தான் அது மீட்கப்படும் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓடும் பேருந்தில் புத்தக வெளியீடு

வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் செல்லும் பேருந்துக்குள் முதன் முறையாக புத்தக வெளியீட்டு விழா எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

நெடுந்தீவு முகிலனின் ''பயணிகள் கவனத்திற்கு'' என்ற கவிதை நூலே வெளியிடப்படவுள்ளது.

வவுனியா நகர சபை முன்றலில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் செல்லும் பேருந்திலேயே இந்த வெளியீட்டு விழா நடைபெறவுள்ளது.

**இருவேறு...**(தொடர்ச்சி)

இவர் பலாலி இராணுவ வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, கிளிநொச்சி, ஏ-9 வீதி - இரணைமடுச் சந்தி அருகாமையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் - டிப்பர் வாகன விபத்தில் மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்ற இராணுவச் சிப்பாய் சம்பவ இடத்திலேயே பலியானதுடன், பின்னால் அமர்ந்து வந்த மற்றுமொரு சிப்பாய் படுகாயமடைந்து கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

**யாழ். பல்கலை...**(தொடர்ச்சி)

கமான முடிவை எடுத்துள்ளன.

இது தொடர்பாக யாழ். பல்லைக்கழகப் பதிவாளரினால் உத்தியோகபூர்வமாக செய்தியறிக்கை ஒன்றும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அச் செய்தியறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ். பல்கலைக்கழகத்தின் மூதவையும் பேரவையும் பொறியியல் பீடம் ஒன்றை கிளிநொச்சியில் ஸ்தாபிப்பது என்றும் அதற்கான ஆரம்ப வேலைகளை இயன்றளவு விரைவில் தொடங்குவது என்றும் தீர்மானித்துள்ளன.

போர் முடிவுற்ற நிலையில் யாழ். பல்கலைக்கழகத்தின் மூதவையும் பேரவையும் தமது சமூகக்கடமையை நிறைவேற்றும் நோக்குடனும் பொறியியல் பீடத்தை அமைப்பதற்கு ஏற்படக் கூடிய செலவீனங்களைக் குறைக்கும் நோக்குடனும் பொதுவான செலவினங்களை விவசாய பீடத்துடன் பங்கிடக் கூடிய வாய்ப்பையும் முன்னைய குழுக்களின் பரிந்துரைகளையும் கருத்திற்கொண்டு பொறியியல் பீடத்தை மிகவிரைவில் கிளிநொச்சியில் விவசாய பீடத்துக்கு அருகில் தொடங்குவதற்கான முடிவை எடுத்துள்ளதுடன், அதற்கான விபர அறிக்கையை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் அனுமதிக்கு ஓரிரு வாரங்களில் சமர்ப்பிப்பதென முடிவுசெய்துள்ளது என தெரிவித்துள்ளது.

**கொடிகாமம்...**(தொடர்ச்சி)

மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

புதன்கிழமை பாலாவிப் பகுதியில் பற்றைக்குள் துணியால் சுற்றிய நிலையில் சடலம் ஒன்று இருப்பதாக பொது மக்கள் வழங்கிய தகவலையடுத்து கொடிகாமம் பொலிஸார் சிசுவின் சடலத்தை மீட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய சிசுவின் தாயைத் தேடிவரும் பொலிஸார் சாவகச்சேரி - கொடிகாமம் பகுதியிலுள்ள குடும்பநல மாதுவைத் தொடர்புகொண்டு அவரின் உதவியுடன் மேற்படி சிசுக்கொலையுடன் தொடர்புடைய தாயைக் கைதுசெய்து சட்டத்தின் முன் நிறுத்துவதற்கான நடவடிக்கையில் தீவிரமாக இறங்கியுள்ளனர்.

**வடக்கில்...**(தொடர்ச்சி)

பேச்சாளரும் அமைச்சருமான அனுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் கல்நதுகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அமைச்சர் இந்த மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அமைச்சர் மேலும் கூறியதாவது

வடக்கில் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் பலவற்றை பிரதேச செயலக பிரிவுகளாக தரமுயர்த்த அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. அந்த வகையில் ஊர்காவற்துறை, நெடுந்தீவு, காரைநகர், வடமராட்சி கிழக்கு, கண்டாவளை,, கரைச்சி, பச்சிளைப்பள்ளி, பூநகரி, மடு, மாந்தை மேற்கு, வவுனியா வடக்கு, மாந்தை கிழக்கு, புதுக்குடியிருப்பு, துணுக்காய், ஒட்டுச்சுட்டான் ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் பிரதேச செயலக பிரிவுகளாக தரமுயர்த்தப்படவுள்ளன. பொது நிர்வாக அமைச்சு இந்த அமைச்சரவை பத்திரத்தை சமர்ப்பித்தது.

மேலும் சில அமைச்சரவை முடிவுகள் வருமாறு

நாடளாவிய ரீதியில் அமைக்கப்படவுள்ள 1000 இரண்டாம் நிலை பாடசாலைகளுக்கு சகல வசதிகளையும் பெற்றுக்கொடுக்க அமைச்சரவை அனுமதியளித்துள்ளது. அந்த வகையில் கணணி கூடம் நவீன வசதிகளைக்கொண்ட நூலகம் உள்ளிட்ட பல வசதிகள் செய்துகொடுக்கப்படும்.

அடுத்த வருடத்துக்கான பாடசாலை சீருடை துணியில் 50 வீதத்தை இலங்கையிலேயே பெற்றுக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதில் எஞ்சிய 50 வீதத்திலும் எவ்வளவு உள்நாட்டிலேயே பெற முடியும் என்று ஆராயப்படும்.

இலங்கைக்கும் ஐக்கிய இராச்சியத்துக்கும் இடையில் விமான சேவை தொடர்பில் உடனபடிக்கை ஒன்று கைச்சாத்திடப்படும். அததனடிப்படையில் தற்போது வாரத்துக்கு 14 விமான சேவைகள் இடம்பெறுவதுடன் குளிர்காலத்தில் அவை 21 ஆக அதிகரிக்கப்படும்.

2600 ஆண்டு புத்த ஜயந்தியை முன்னிட்டு கொழும்பு நூதன சாலையில் பௌத்த கண்காட்சி ஒன்று மே மாதம் 21 ஆம் திகதியிலிருந்து ஒரு வாரத்துக்கு நடத்தப்படும்.

1988 ஆம் ஆண்டு 30 ஆம் இலக்க வங்கி சட்டமூலத்தில் திருத்தங்கள் செய்யப்படவுள்ளன.

**இலங்கையில்...**(தொடர்ச்சி)

என்று பதில் அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான

அனுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார்.

இலங்கை விவகாரம் தொடர்பில் இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியா காந்தி தெரிவித்துள்ள கருத்துக்கள் தொடர்பில் அரசாங்கம் ஆராய்ந்துவருகின்றது. இந்த விடயம் தொடர்பில் வெளிவிவகார அமைச்சு தொடர்ந்து ஆராயும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் கல்நதுகொண்ட அமைச்சர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இலங்கையில் சகல இன மக்களும் சமத்துவமாக வாழும் வகையில் அரசியலமைப்பு திருத்தங்களை மேற்கொள்வதாக இலங்கை அரசு தமக்கு உறுதியளித்துள்ளதாகவும் இது தொடர்பில் அழுத்தங்களை கொடுக்கவுள்ளதாகவும் சோனியா காந்தி தெரிவித்துள்ளமை தொடர்பில் அரசின் நிலைப்பாடு என்ன என்று ஊடகவியலாளர் கேள்வியெழுப்பினார்.

அங்கு அமைச்சர் மேலும் கூறியதாவது

இலங்கை தொடர்பான இந்த கூற்றை இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியா காந்தி தேர்தல் கூட்டம் ஒன்றிலேயே வெளியிட்டுள்ளார். எனவே இது தொடர்பில் இலங்கை அரசாங்கம் ஆராய்ந்துவருகின்றது. மேலும் வெளிவிவகார அமைச்சு இது குறித்து ஆராய்வதுடன் உரிய பதிலை அளிக்கும்.

கேள்வி:- அதாவது எவ்வாறான அரசியலமைப்பு திருத்தங்களை மேற்கொள்ளவுள்ளதாக இந்தியாவுடன் பேசியுள்ளீர்கள்?

பதில்:- இந்த கேள்விக்கு மேற்கூறிய பதிலைவிட எதனையும் கூற முடியாது. வெளிவிவகார அமைச்சு அதனை கையாளும்.

கேள்வி:- யுத்தம் முடிந்துள்ள நிலையில் அவசரகால சட்டம் தொடர்ந்து எதற்கு?

பதில்:- இந்தக் கேள்விக்கு சில காலத்துக்கு முன்னரும் நான் பதிலளித்தேன். அரசாங்கம் அதிகமான அவசரகால சட்ட விதிகளை தற்போது தளர்த்தியுள்ளது. எதிர்காலத்தில் இது தொடர்பில் அரசாங்கம் தீர்மானம் ஒன்றை எடுக்கும். மேலும் அவசரகால சட்டவிதிகள் தொடர்பில் மக்கள் கவலைப்படுவதாக தெரியவில்லை.

அவசரகால சட்ட விதிகள் என்பது இலங்கைக்கு புதிய விடயமல்ல. 50 களிலும் அவசரகால சட்ட விதிகள் இருந்துள்ளன. இதேவேளை தற்போதைய நிலைமையில் குறைந்தளவிலான விதிகளே உள்ளன. ஏனயவை தளர்த்தப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் இது தொடர்பில் தீர்மானம் எடுக்கப்படும்.

கேள்வி:- மனித உரிமைகள் விவகாரத்திலேயே இலங்கையுடனான எதிர்கால உறவு தங்கியுள்ளது என்று அமெரிக்க உதவி இராஜாங்க செயலாளர் ரொபட் ஓ பிளேக் தெரிவித்துள்ளமை தொடர்பில்?

பதில்:- சர்வதேசமட்டத்தில் சில தரப்பினர் கூறுவது போன்று இலங்கையில் எந்தவிதமான மனித உரிமை மீறலும் இடம்பெறவில்லை. [illegible] விடயத்தை மறந்துவிடக்கூடாது. அதாவது புலிகள் அமைப்பே பாரிய மனித உரிமை மீறல்களை மேற்கொண்டுள்ளது. அவர்கள் தமது இன மக்களின் மனித உரிமையையும் மீறினர். தலைவர்களை அச்சுறுத்தி வைத்திருந்தனர். கொலை செய்தனர். இந்நிலையில் அக்காலத்தில் யாரும் புலிகளின் மனித உரிமை மீறல் தொடர்பில் குரல் எழுப்பவில்லை.

சர்வதேச சட்டத்தை மீறும் வகையில் இலங்கையில் எந்த மனித உரிமை மீறலும் இடம்பெறவில்லை. எமது சட்டத்துக்கு உட்பட்டு நாட்டின் இறைமையை பாதுகாக்கும் வகையில் பயங்கரவாதத்தை தோற்கடித்துள்ளதுடன் மக்களுக்கு புதிய சுதந்திரத்தையும் சமாதானத்தையும் நிம்மதியையும் பெற்றுக்கொடுத்துள்ளோம். மக்கள் இன்று ஒற்றுமையுடனும் சுதந்திரமாகவும் வாழ்கின்றனர். மனித உரிமை மீறல் என்று சில தரப்பினர் கூறும் விடயத்தை எம்மால் ஏற்க முடியாது. அவ்வாறு எந்த விடயமும் இடம்பெறவில்லை.

எனினும் நாட்டின் சகல மக்களினதும் மனித உரிமைகளை பாதுகாப்பது அரசாங்கத்தின் பொறுப்பாகும். அது எமது கடமையாகும். ஜனநாயக அரசாங்கம் மக்களின் உரிமைகளை பாதுகாக்கும். ஆனால் மனித உரிமைகள் மீறப்பட்டதாக கூறப்படுவதை ஏற்க முடியாது. இந்த நாட்டின் இறைமையை உறுதிபடுத்தும் நோக்கில் நாங்கள் பயங்கரவாதத்தை தோற்கடித்தோம். அதன்போது சர்வதேச சட்டங்களை மீறும் வகையில் எந்த மீறலும் இடம்பெறவில்லை.

இதேவேளை நாட்டின் உ[illegible] விவகாரம் [illegible] தலையிடுவதற்கான வரையறை தொடர்பில் அனைவருக்கும் தெரியும். மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக கூறுவதை நாங்கள் ஏற்கமாட்டோம். மனித உரிமை தொடர்பில் சர்வதேச மட்டத்தில் பேசும் சில தரப்புக்கள் இன்று நடந்துகொள்ளும் விதம் தொடர்பில் யாவரும் அறிவர். லிபியாவின் விடயத்தில் இது தெளிவாகின்றது. அந்த வகையில் சர்வதேச மட்டத்தில் சிலர் வெளியிடும் கூற்றுக்களை ஏற்க முடியாது.

கேள்வி:- அப்படியானால் சுயாதீன விசாரணை ஒன்றுக்கு ஏன் அனுமதிக்காமல் உள்ளீர்கள்?

பதில்:- சுயாதீனம் என்று நீங்கள் எதனை கூறுகின்றீர்கள்? எமது நாட்டின் இறைமை மற்றும் ஒருமைப்பாடு எமக்கு முக்கியமானவையாகும். அவற்றில் நம்பிக்கை வைத்தே நாங்கள் செயற்படுகின்றோம். நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தவும் உண்மையை கண்டறியும் எமது சொந்த செயற்பாடு ஒன்றை நாங்கள் மேற்கொண்டுவருகின்றோம். அந்த செயற்பாடு தற்போது செயற்பாட்டில் உள்ளது. அதன் இறுதி அறிக்கை வரும்வரை நாங்கள் காத்திருக்கின்றோம்.

சர்வதேச சட்டத்தை மீறும் வகையில் நாங்கள் எதனையும் செய்யவில்லை என்பதனை வலியுறுத்திக் கூறுகின்றோம்.

கேள்வி:- ரொபட் ஓ பிளேக்கின் கருத்தை அவரின் சொந்த கருத்தாகவா? அல்லது அமெரிக்காவின் கருத்தாகவா அரசாங்கம் பார்க்கின்றது?

பதில்:- அது பற்றி எனக்கு தெரியாது. வெளிவிவகார அமைச்சு பதிலளிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோடையை குளிர்ச்சியாக்கலாம்

உஸ்.. அஸ்... என்ற களைப்புப் பெருமூச்சுக்களின் ஒலி கேட்கத் தொடங்கிவிட்டது. இந்தக் கோடையை எப்படி சமாளிப்பது என்பதே இப்போது எல்லோருக்கும் அனலாய் வீசும் கேள்வி..

வீடுகளில் குளிர்சாதன வசதி செய்யலாம் என வசதி படைத்தோரும், வீட்டுக்கு முன்னால் தென்னை ஓலை வெய்யலாம் என சாதாரண மக்களும் தமது சக்திக்கு ஏற்ப கோடையிலிருந்து தற்காத்துக் கொள்ளும் முயற்சிகளை தொடங்கியிருக்கிறார்கள்.

இன்னும் சிலரோ மலை வாசஸ்தலங்களுக்கு செல்லலாம் என திட்டமிட்டிருப்பார்கள். கோடைக் காலம் என்பது இயற்கையின் கொடையே. இந்தக் காலத்தில் தான் மண்ணில் உள்ள கிருமிகள் அழிகின்றன. இதனால்,



விளை நிலங்களில் பயிராகும் பயிர்கள் நோய்களின் தாக்குதலிலிருந்து விடுபடுகின்றன. இதனால், உற்பத்தி அதிகரிக்கும் .

பள்ளியின் தேர்வுகள் முடியும் நேரம். கோடை வெயில் மாணவச் செல்வங்களுக்குக் குளிர் மழை போல் தோன்றும். காரணம் வெயிலின் கடுமை அறியாமல் விடுமுறைகளில் விளையாடும் பருவம் அல்லவா...

அவர்கள் மட்டுமல்ல. பெரியவர்களாக நீங்களும் கோடையை குளிர்ச்சியாகக் கழிக்க இதோ ஜில்லுன்னு சில டிப்ஸ்.

கோடைக் காலம் ஆரம்பிக்கும் இந்த தருணத்தில் தான் சிலருக்கு உடலில் பலவகையான பாதிப்புகள் தோன்றும். பனிக்காலம் முடிவடைந்து கோடை வருவதால் உடலானது சில மாற்றங்களை தாங்கிக்கொள்ளும் சக்தியை இழக்கிறது.

*) கோடைக் காலத்தில் அதிகாலை 5.00 மணிக்கு எழும் பழக்கத்தை மேற்கொள்வது நல்லது. வெயில் வரும் முன்னே சமையல், வீட்டு வேலைகளை பெண்கள் முடித்துவிடுவது நல்லது.

*) முதலில் உடலை இறுக்காத பருத்தி ஆடைகளை அணியவேண்டும். அந்த ஆடைகளின் வண்ணங்கள் வெண்மை கலந்ததாக இருப்பது நல்லது. கறுப்பு, சிவப்பு மற்றும் பளிச் வண்ணங்கள் சூரிய ஒளியை உள்வாங்கும். இதனால், இவற்றைத் தவிர்ப்பது நல்லது.

*) அதிக நீர் அருந்த வேண்டும். இடைவெளி விட்டு



நீர் அருந்துவது நல்லது. வெயிலின் தாக்கத்தால் உடலிலிருந்து அதிகளவு வியர்வை வெளியேறும். இதனால் உடலின் நீர்ச்சத்து குறைந்துவிடும். நீர் எரிச்சல், நீர்த்தாரை கடுப்பு போன்றவை உருவாகும்.

*) குளிர்பானங்கள் அருந்துவதை தவிர்த்து நீரை அருந்த வேண்டும். வெயிலில் அலைந்து வந்தவுடன் நீர் அருந்தக் கூடாது. எவ்வளவு தாகம் இருந்தாலும் 10 நிமிடம் கழித்து அருந்துவது நல்லது. அந்த நீர் குளிர்சாதனப் பெட்டியில் வைத்து எடுத்த நீராக இருக்கக் கூடாது. இந்த நீர் ஜலதோஷம், தலைவலி, உடல்வலியை ஏற்படுத்தும். மண்பானையில் வைத்த நீரை அருந்துவது தான் நல்லது. அல்லது சாதாரண நீரே போதுமானது.

*) அதிக நீர்ச்சத்துள்ள பழங்களைச் சாப்பிட வேண்டும். அல்லது ஜூஸ் செய்து அருந்தலாம்.

(தொடரும்...)

# முட்டைத் தோசை

**தேவையான பொருட்கள்:** உடைத்த உழுந்து - 1 சுண்டு (250 கிராம்) பச்சையரிசி - 2 சுண்டு, வெந்தயம் - 1 தேக்கரண்டி, மஞ்சள்தூள் - 2 சிட்டிகை, உப்புத்தூள் - தேவையானளவு, மிளகுத் தூள் - தேவையானளவு, முட்டை - 8-10, நல்லெண்ணெய்/நெய் - 1/4, போத்தல், அப்பச்சோடா -1 சிட்டிகை

**தாளிதம்:** சிறிதாக வெட்டிய வெங்காயம் - 2 மேசைக்கரண்டி, சிறிதாக வெட்டிய கறிவேப்பிலை-1 தேக்கரண்டி, பெருஞ்சீரகம் - 1 சிட்டிகை, கடுகு -1 சிட்கை, தேங்காயெண்ணெய் - 2 மேசைக்கரண்டி

**செய்முறை:** உழுந்தைத் துப்புரவாக்கி மூன்று மணி நேரம் ஊறவைத்து தோல் நீக்கி கழுவிக் களைந்து தேவைக் களவாக நீர்சேர்த்துப் பசுந்தையாக அரைத்துவைத்துக் கொள்க.

அரிசியைத் துப்புரவாக்கிக் கழுவி மூன்று மணி



நேரம் வரை ஊறவைத்து இடித்து அரிக்குக. அரிக்கும் போது வரும் குறுணலைச் சுளகிலிட்டு கொளித்து 1/2 சுண்டு நடுத்தர அளவுடைய குறுணலை எடுத்துவைத்த பின்பு மிகுதிக் குறுணலை இடித்து அரித்து எடுத்துக்கொள்க.

பின்பு இரண்டு தம்ளர் தண்ணீரைக் கொதிக்கவைத்து தண்ணீர் நன்கு பொங்கிக் கொதித்ததும் 1/2 சுண்டு குறுணலையிட்டு நன்கு துழாவிச் சேர்த்துக்கொண்ட பின்பு உடனேயே அடுப்பிலிருந்து இறக்கி 1/2 தம்ளர் குளிர்ந்த நீர் விட்டு நன்கு கலக்கிக் கலவையை ஆறவைத்துக் கொள்க.

அரைத்துவைத்துள்ள உழுந்தினில் ஆறிய குறுணல் கஞ்சியை ஊற்றி நன்கு சேர்த்துக்கொண்ட பின்பு மாவையுமிட்டு சேர்த்துக் கரைக்குக.

நீர்த்தன்மை காணாவிடின் தேவையானளவு தண்ணீரை விட்டுக கூழ்ப் பதமாகக் கரைத்து 10 - 12 மணி நேரம் வரை புளிக்கவைத்துக் கொள்க.

தாச்சியில் எண்ணெயைக் காயவைத்துக் கடுகைப் போட்டு வெடிக்கவைத்து பின்னர் அதனுள் வெங்காயம், கறிவேப்பிலை,பெருஞ்சீரகம் என்பன இட்டுத் தாளித்து இறக்கிப் புளிக்கவைத்துள்ள தோசைமாக் கலவையில் ஊற்றி 14 சிட்டிகை அப்பச்சோடாவும் உப்புநீரும் அளவிற்கு விட்டு நன்றாக அடித்துக் கரைத்துக்கொள்க.

முட்டைகளை உடைத்து பாத்திரத்தில் விட்டு அளவிற்கு உப்புத்தூள், மிளகுத்தூள் என்பன சேர்த்து அடித்துவைத்துக் கொள்க.

பின்பு தோசைக் கல்லில் சிறிதளவு நெய்யூற்றிப் பரவலாகப் புரட்டிக்கொண்ட பின்பு கரைத்துவைத்துள்ள தோசைமாக் கலவையை மெல்லிய தோசைகளாக வார்த்து அதன் மேல் பரவலாக 1 மேசைக்கரண்டி நெய்யை ஊற்றி சிறிது நேரம் வேகவிட்ட பின்பு அதன் மேல் அடித்த முட்டையில் 2 மேசைக்கரண்டியைப் பரவலாக ஊற்றி தோசையைப் பாதியாக மடித்து இருபுறமும் மாறி மாறித் திருப்பிப் போட்டு பொன்னிறமாக வேகவிட்டெடுத்துப் பரிமாறலாம்.

இவ் வண்ணமே தோசையைத் தயாரித்து உருளைக் கிழங்கு மசாலாக் கறியை வைத்து மடித்து மசாலாத் தோசை தயாரிக்கலாம்.

**குறிப்பு:** சாதாரண தோசையாயின் அரிசிமாவுக்குப் பதிலாக மூன்று சுண்டு அவித்த கோதுமை மாவை இட்டுக் குழைத்துக் கொள்ளலாம். ஆனால், கஞ்சி காய்ச்சத் தேவையில்லை.

மங்கையரே உங்களின் சமையற் கலை, அழகுக் குறிப்புக்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்
யாழ்.ஓசை வீரகேசரி கிளைக் காரியாலயம்
117, ஸ்ரேசன் வீதி, யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய கிரிக்கெட்டும்: சீன(ா) வெடியும்!

ஒருவாறாக உலகக் கிண்ண கிரிக்கெட் முடிவுக்கு வந்துவிட்டது. ஆனால், வீதிகளில் வைத்து துரத்தித் துரத்தித் தாக்கப்பட்ட பலரும் காயங்களுக்காக சிகிச்சை பெறவேண்டியிருக்கின்றது. மறுபுறம், வல்வெட்டித்துறையில் வெடிகளை வெடிக்கவைக்கப் போய், பின்னர் குப்பை கொட்டியதாக தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளை சில வர்த்தகர்கள் எதிர்கொள்ளவும் வேண்டியிருக்கின்றது.

இலங்கை - இந்தியாவுக்கு இடையேயான இறுதிப்போட்டியின் வெற்றி வாய்ப்பு பற்றி அரசியல் ஆர்வம் மிக்க சாமான்ய மக்களிடையே இம் முறை பெரிதாக ஆர்வங்கள் இருந்திருக்கவில்லை. கடந்த காலங்களில் இந்தியாவின் வெற்றிபற்றி ஆர்வங்கொண்டிருந்த உள்ளூர் தமிழ் மக்களிடையே இம்முறை அவ்வாறான மனோநிலை பெரும்பாலும் காணப்பட்டிருக்கவேயில்லை. எவன் வென்றால் எமக்கு என்ன என்ற விட்டேத்தியான மனோநிலை பெரிதும் காணப்பட்டது. முள்ளிவாய்க்கால் வலியாகவே அது இருக்குமென்பது அனைவரும் அறிந்ததொன்றே.

விடுதலைப் புலிகளுக்கெதிரான யுத்தமென்ற பெயரில் தமிழ் மக்களுக்கெதிராக இடம்பெற்ற தாக்குதல்களின் பங்காளிகள் பற்றி நாள்தோறும் தகவல்கள் அம்பலமாகிக் கொண்டேயிருக்கின்றன. 'விக்கிலீக்ஸ்' புண்ணியத்தில் பெரும்பாலான கனவான்கள் முகமூடி கிழிந்து தொங்கிக் கொண்டிருக்கின்றது. இந்தியாவின் பங்கு, அமெரிக்காவின் கூட்டு, ஆயுத விநியோகம், போக்குவரத்து கப்பல்கள் மீது தாக்குதலென்று பட்டியல்கள் நீளுகின்றன. பாரபட்சமின்றி எல்லோரும் இறுதிக் காரியங்களுக்கு கைகொடுத்திருக்கின்றார்களென்ற உண்மையும் தெரியவந்துவிட்டது.

ஆனாலும், வன்னி யுத்தத்தில் இந்தியாவின் பங்கினை ஜீரணிக்கமுடியாதவர்களாகவே தமிழ் மக்கள் உள்ளனர். வீடமைப்பு, வீதி அமைப்பென இந்தியா தன் பங்குக்கு பல சலுகைகளை இப்போது அறிவித்துவருகின்ற போதும் அவை வெறும் ஒப்புக் கென்ற அளவிலேயே இருக்கின்றன. இழந்த உயிர்களுக்கோ, அங்கவீனர்களுக்கோ, பேரிடருக்கோ இவை என்றுமே நிவாரணமாக மாட்டாதென்பது தமிழ் மக்களது நிலையாகவும் உள்ளது. குறிப்பாக, அடையாளந்தெரியாத இடங்களில் அடைத்துவைக்கப்பட்டுள்ள ஒன்பதாயிரத்திற்கும் அதிகமான இளைஞர்களின் விடுதலை தாமதமாவதில் கூட இந்தியாவின் பின்னணியே உள்ளதென மக்கள் சந்தேகிக்கின்றனர்.

இப்பெரும் இடரின் பின்னராவது இனப்பிரச்சினைக்கான தீர்வொன்றை அரசிடம் இந்தியா பெற்றுத்தருமென்ற நம்பிக்கையும் மெல்ல மெல்ல இழக்கப்பட்டே வருகின்றது. மாறி மாறி நடந்துகொண்டிருக்கும் இந்தியத் தேர்தல்களின் போதோ அல்லது கூட்டமைப்பினர் அங்கு சென்று திரும்புகின்ற போதோ மட்டுமே பேசப்படுகின்ற பொருளாக இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது இப்போது வந்து நிற்கின்றது.

விடுதலைப் புலிகளது ஆயுதப் போராட்டத் தோல்வியின் பின்னர் இனிமேல் எதனையும் கெஞ்சித் தான் (அதற்கு இணக்க அரசியலென்ற கௌரவப் பெயர் வேறு) பெறவேண்டுமென்ற மனோநிலையை மக்களிடம் ஏற்படுத்திவிட சில அரசியல் தரப்புக்கள் மும்முரமாக செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதிலும் குறிப்பாக, இந்தியாவிடமிருந்து இணக்கப்பாடான நல்லபெயரை எடுப்பதும் அதற்கு அவசியமென அவை காண்பிக்கவும் முற்படுகின்றன.

அந்த வகையில் எதிர்க்கட்சித் தலைவர் முதல் தமிழ் அரசியல்வாதிகள் பலரும் மாதாந்தம் இந்தியாவுக்கு காவடி எடுப்பதை பிரதான தொழிலாகக் கொண்டுள்ளனர். புதிதாக முளைக்கும் அரசியல்வாதிகள் கூட இப்போதெல்லாம் அடிக்கடி அங்கு சென்றுவருவதை சாதாரணமாக்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அங்கிருந்து அவர்கள் எதனை எடுத்துவருகின்றார்களென்பது வழமையான புதிராகவே இருக்கின்றது.




பாவலன்

வன்னிப் பேரவலத்தின் எதிர்பார்த்திராத அவல முடிவுகள், அதன் பின்னர் கூட அரசியல் ரீதியில் எந்தவொரு தீர்வும் கிட்டியிருக்காமை, தமது வாழ்வை மீளக்கட்டியெழுப்ப எவருமே உதவியிராமை, மாற்றமின்றி தொடரும் இராணுவ நெருக்குவாரங்களென தமிழ் மக்கள் தொடர்ந்தும் விரக்தி நிலையிலேயே வைக்கப்பட்டுள்ளனர். வீதித்திறப்பு, வங்கித் திறப்பு, தங்குதடையற்ற தெற்குக்கான சந்தை வாய்ப்பு என்பன தான் அபிவிருத்தியென காட்டிக்கொள்ள சிலர் முற்பட்டுள்ளனர். ஆனால், அதுவலல்ல அபிவிருத்தி என்பதில் தமிழ் மக்கள் தெளிவாகவே இருக்கிறார்கள். அதேவேளை, கிடைக்கும் சந்தர்ப்பங்களை பயன்படுத்திக் கொள்ளவும் அவர்கள் தயாராக இருக்கிறார்கள்.

விடுதலைப்புலிகளால் முன்வைக்கப்பட்டது போன்று இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கு முன்பதாக இடைக்கால நிவாரணம் வேண்டும். வடக்கு - கிழக்கிலான இராணுவப் பிரசன்னம் நீக்கப்படல் வேண்டும். சிவில் நிர்வாகத்தில் அவர்களது தலையீடு இல்லாது செய்யப்பட்ட வேண்டும். ஆக்கிரமிக்கப்பட்டுள்ள நிலப்பிரதேசங்கள் விடுவிக்கப்பட வேண்டும். தடுப்புக் காவலிலுள்ள இளைஞர், யுவதிகள் விடுவிக்கப்பட்டு குடும்பங்களுடன் இணைக்கப்பட வேண்டும். ஆனால், எதிர்பார்க்கப்பட்டது போல இவை எதுவுமே நடந்திருக்கவில்லை. மாறி மாறி ஆட்சிபீடமேறும் சிங்கள அரசுகள் எதனையும் தரப்போவதில்லையென்பதற்கு அப்பால் இந்தியாவும் எதனையும் வாங்கித் தரப்போவதில்லையென்ற மனோபாவம் பெரும்பாலான தமிழ் மக்களிடையே வந்துவிட்டது. தமது சொந்த அரசியல் நலன்களுக்காக அரசியல்வாதிகளும், ஊடகங்களும் இந்தியா எல்லாவற்றையும் வாங்கித்தருமென்ற நம்பிக்கையை மக்கிடையே ஊட்டமுற்படுகின்ற போதும் அவ்வாறு மக்கள் நம்பத் தயாராக இருந்திருக்கவில்லை.

அவ்வகையிலேயே இலங்கை - இந்தியாவுக்கிடையேயான உலக கிண்ணப்போட்டியும் விளையாட்டு என்று எல்லைக்கப்பால் மக்களை பார்க்கவைத்திருந்தது. இந்தியாவின் வெற்றிக்கு அப்பால் இலங்கையின் தோல்வி என்பது சிங்கள அரசுகளின் தோல்வியென்ற மனோபாவத்தை மக்களிடையே ஏற்படுத்தியிருந்தது. அதைக் கொண்டாடவும் வைத்துவிட்டது.

தொலைக்காட்சிகளூடாக இடம்பெற்ற நேரடி ஒளிபரப்பின் போது ஆட்டத்தின் இடைநடுவிலேயே இந்தியாவின் வெற்றி பெரும்பாலான இரசிகர்களைப் போன்றே இலங்கை தமிழ் ரசிகர்களுக்கும் தெரிந்தே இருந்தது. ஆட்டம் முடிவை அண்மிக்கும் முன்பதாக சுமார் அரை மணி நேரத்திற்கு முன்பதாகவே குடாநாட்டில் வெடிகள் வெடிக்க ஆரம்பித்திருந்தன.

இறுதிக் கணங்களில் பல பகுதிகளையும் அவை அதிரவும் செய்திருந்தன. தோல்வி அதிர்ச்சியிலிருந்து மீண்டவர்கள் தமது நிலையங்களிலிருந்து துப்பாக்கிகள், பொல்லுகளுடன் வெளியே விரைந்த வேளை வெடிகொளுத்திக் கொண்டாடியவர்கள் காணாமல் போயிருந்தனர். வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தவர்களே அகப்பட்டும் கொண்டனர். இயலாமையினால் வெடிச்சிதறல்கள் முன்பாக கிடந்த குற்றத்திற்காக சிலர் நீதிமன்றும் செல்கின்றனர்.

ஆனாலும், இவற்றுக்கப்பால் தமிழர் தரப்பிலிருந்து ஒன்று மீண்டும் உறுதியாக சொல்லப்பட்டிருக்கின்றது. அது நீங்கள் வேறு, நாங்கள் வேறென்பதாகும். அது யாழ்ப்பாணத்திலாயினும் சரி, ஹற்றனிலாயினும் சரி, ஒன்றாகவே சொல்லப்பட்டுள்ளது. இல்லையில்லை நாங்கள் அனைவரும் இலங்கையர்களெனக் கொண்டாட வேண்டுமாயின் நீங்களே முன்வரவேண்டும் என்பதே அதுவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் மலர்


## நாடுகளும் அதன் நாணயங்களும்

| நாடு | நாணயம் |
|---|---|
| கட்டார் | றியால் |
| மொரிஷியஸ் | மொரீரிஷிய ரூபாய் |
| நமீபியா | நமீபிய டொலர் |
| சோமாலியா | சோமாலி ஷில்லிங் |
| புருண்டி | புருண்டி ஃப்ரேங் |
| பெனின் | CFA ஃபிரேங் |
| புர்கினா ஃபெஸோ | CFA ஃபிரேங் |
| மொரோக்கோ | திர்ஹம் |
| கினியோ-பிசோ | CFA ஃபிரேங் |
| மாலாவி | க்வேச்சா |
| மொசாம்பிக் | மெடிகல் |
| ஜிபூடி | ஜிபூடி ஃபிரேங் |
| தியுனீசியா | தியுனீசியன் டினார் |
| தன்சானியா | தன்சானியா ஷில்லிங் |
| கானா | செடி |
| நைஜீரியா | நைரா |
| இலங்கை | ரூபா |
| மடகாஸ்கர் | மலகாசி ஃபிரேங் |

*நேசராஜ்குமார் வித்தியாசாகர்*
*தரம்-07 C கிளி/கிளிநொச்சி ம.வி.*



ப.ராஜ்போல் தரம் 8
புனித பத்திரிசிரியார் பாடசாலை



அபிராமி கனகசபை தரம் 7B
யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை

# நட்பு



முன்னொரு காலத்தில் கங்கைக் கரையில் அத்திமரம் ஒன்று இருந்தது. வளமாக இருந்த அந்த மரத்தில் ஏராளமான பழங்கள் பழுத்திருந்தன. இதனால், அங்கே பறவைகள் கூட்டமாக வாழ்ந்துவந்தன. அந்தக் கூட்டத்தில் கிளி ஒன்றும் இருந்தது. அது அந்த மரத்தைத் தன் நண்பனாகவே நினைத்து அன்பு காட்டியது.

திடீரென்று அந்த மரத்தின் இலைகள் வாடத் தொங்கின. சில நாட்களில் மரமும் பட்டுப்போயிற்று. அங்கே இருந்த பறவைகள் இனி இங்கே தங்குவதால் பயன் இல்லை என்று புறப்பட்டன. கிளி மட்டும் அங்கிருந்து புறப்படவில்லை.

இதைப் பார்த்த அவை, ''கிளியே இந்த மரம் பட்டுவிட்டது. சிறிது தொலைவில் பழ மரங்கள் உள்ளன. நீயும் எங்களுடன் வந்துவிடு. நாம் அங்கே மகிழ்ச்சியாக இருக்கலாம்'' என்றன.

அதற்கு கிளி, ''இந்த மரம் என் நண்பன். என் வாழ்வோ சாவோ அது இங்கே தான். இங்கிருந்து நான் வரமாட்டேன் என்று உறுதியுடன் சொன்னது. அதை வற்புறுத்துவதால் பயன் இல்லை என்று நினைத்த அவை அங்கிருந்து பறந்து சென்றன. வெயில், மழை என்று பாராமல் அந்த மரத்திலேயே அந்தக் கிளி தங்கியிருந்தது.

பசி எடுத்தபோது அந்த மரத்தின் பட்டைகளை உண்டது. கங்கை ஆற்றில் தண்ணீரைக் குடித்தது. இப்படியே காலத்தை கழித்துக்கொண்டிருந்தது அது. தேவதை ஒன்று அந்த வழியாக வந்தது.பட்டுப்போன மரத்தில் தங்கியிருந்த கிளியை வியப்புடன் பார்த்தது.

''கிளியே! சிறிது தொலைவில் நிறைய பழ மரங்கள் உள்ளன. இந்தப் பட்டுப்போன மரத்தில் ஏன் தங்கியிருக்கிறாய்?'' என்று கேட்டது.

''தேவதையே! நானும் இந்த மரமும் நீண்டகாலம் ஒன்றாகவே இருந்தோம். இது என் நண்பன். இது எனக்கு நிறைய உதவிசெய்துள்ளது. தற்போது பட்டுவிட்டது என்பதற்காக இதை விட்டுச்செல்ல விரும்பவில்லை. என் உயிரே போனாலும் இதைப் பிரியமாட்டேன்'' என்று தழுதழுத்த குரலில் சொன்னது. அதன் கண்களில் கண்ணீர் வடிந்தது.

இதைக்கேட்டு உள்ளம் நெகிழ்ந்த தேவதை, ''கிளியே நட்பின் பெருமையை உன்னால் அறிந்துகொண்டேன். உனக்கு என்ன வரம் வேண்டும் கேள் தருகிறேன்'' என்றது.

''தேவதையே! என் நண்பன் மீண்டும் உயிர் பெறவேண்டும். முன்பு இருந்தது போல் வளமாக விளங்கவேண்டும். நான் நண்பனைப் பிரியாமல் இருக்கவேண்டும்'' என்று வேண்டியது கிளி.

''அப்படியே தந்தேன்!'' என்று சொல்லி விட்டு மறைந்தது தேவதை. உயிர்பெற்ற அந்த மரம் முன்னை விட வளமாகக் காட்சி தந்தது. எண்ணற்ற பழங்கள் அதில் இருந்தன. அதைப் பார்த்து மகிழ்ந்தது கிளி.

உண்மையான அன்பின் மூலம் தன் நண்பனுக்கு வாழ்வு தந்த கிளியை எல்லோரும் பாராட்டினர்.

## விண்வெளி வீரர்கள் பயன்படுத்தும் 'ஷம்பூ'வுக்கு தண்ணீர் தேவையில்லை



விண்வெளியில் சாதாரண 'ஷம்பூ' பயன்படுத்தினால் சோப்பும் தண்ணீரும் சேரும்போது உடலில் ஒட்டிக்கொள்ளும். அதனால், விண்வெளி வீரர்கள் பயன்படுத்தும் ஷம்பூவை தலையில் போட்டு 'மசாஜ்' செய்தால் போதும். நுரை வரும். பிறகு டவலால் துடைத்து எடுத்துவிடலாம்.

சிறுவர்களே! உங்களது ஆக்கங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்

**அனுப்பவேண்டிய முகவரி**

'யாழ் ஓசை' வீரகேசரி கிளைக் காரியாலயம்.
117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவத் தாதிக்கு அன்புப் பரிசாக தங்கக் கடிகாரங்களை வழங்கிய கடாபி



தனக்கு பணிவிடைகள் செய்யும் மருத்துவத் தாதிக்கு தங்க கடிகாரங்களை கடாபி பரிசாக வழங்கியுள்ளார்.

அவரது 42 ஆண்டுகால ஆட்சியை எதிர்த்து மக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். இந்த நிலையில் சர்வாதிகாரி கடாபி குறித்து பல்வேறு தகவல்கள் வந்த வண்ணம் உள்ளன.

இவருக்கும், உக்ரைன் நாட்டை சேர்ந்த மருத்துவதாதி நக்சானா பொலின்ஸ் என்பவருக்கும் இடையே கள்ளக்காதல் இருப்பதாக விக்கிலீக்ஸ் இணைய தளத்தில் செய்தி வெளியானது. இதை அந்த மருத்துவ தாதி மறுத்துள்ளார்.

ரஷ்ய பத்திரிகைக்கு அளித்துள்ள பேட்டியில், கடாபி தனக்கு தந்தை போன்றவர் என்றும், அவரது உடல் நலனை கவனித்துக் கொள்ளும் 5 மருத்துவ தாதிகளில் தானும் ஒருவர் என்றும் கூறியுள்ளார். தனது சேவையை பாராட்டி வருடத்துக்கு ஒரு தங்க கடிகாரத்தை அவர் பரிசளித்தார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எனக்கும் கடாபிக்கும் உள்ள தொடர்பு தந்தை-மகள் போன்றது. எனவே வதந்திகளை நம்ப வேண்டாம் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது. இதற்கிடையே, லிபியாவில் போராட்டக்காரர்களின் பலம் குறைந்து வருகிறது.

அவர்களிடம் தற்போது பெங்காசி நகரம் மட்டுமே உள்ளது. அஜ்தாபி, ராஸ் லனுப் போன்ற நகரங்கள் மீண்டும் இராணுவ வசம் வந்துள்ளன. எண்ணெய் வளம் மிக்க நகரமாக பிரகாவும் கடாபியின் இராணுவம் வசமானது.


இதை தொடர்ந்து போராட்டக்காரர்களுடன் பேச்சு நடத்த தயார் என லிபியா அரசு அறிவித்துள்ளது. அதற்கும் ஒரு நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

அதாவது, போராட்டக்காரர்களின் கோரிக்கைப்படி கடாபி பதவி விலக மாட்டார்.

வேண்டுமென்றால் அரசியல் அமைப்பு சட்டத்தில் மறு சீரமைப்பு குறித்து விவாதிக்கலாம், தேர்தல் நடத்துவது குறித்தும் ஆலோசிக்கப்படும். அதே நேரத்தில் போராட்டத்தை வழி நடத்தி செல்பவர்களின் தலைமையை ஏற்க முடியாது.

ஏனெனில் நாட்டின் ஒற்றுமை தான் முக்கியம், இத்தகவலை அரசின் செய்தி தொடர்பாளர் மூசா இப்ராகிம் தெரிவித்துள்ளார்.

# ஒசாமா மகனை வெள்ளை மாளிகைக்கு அழைத்த புஷ்



ஜோர்ஜ் புஷ் தான் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த இறுதி காலகட்டத்தில் தனது தந்தை ஒசாமா பின் லேடனைப் பற்றி தெரிந்து கொள்வதற்காக தன்னை அழைத்ததாக ஒசாமாவின் மகன் ஒமர் தெரிவித்துள்ளார். இது குறித்து ஒசாமாவின் 4ஆவது மகன் ஒமர்(29) ஸ்பெயின் நாளிதழுக்கு கூறியதாவது, கடந்த 2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வெள்ளை மாளிகை ஊழியர்கள் சிலர் எனது தோஹா இல்லத்திற்கு வந்தனர். என்னை அவர்களுடன் வெள்ளை மாளிகைக்கு வருமாறு அழைத்தனர். எனது தந்தை எங்கிருக்கிறார் என்பதை கண்டுபிடிக்க நான் உதவினால் எனக்கு பாதுகாப்பு அளித்து உதவுவதாகத் தெரிவித்தனர்.

ஆனால் நான் அவர்களுடன் செல்ல மறுத்துவிட்டேன். இது தொடர்பாக என்னால் எதுவும் செய்ய முடியாது. அவர் எனது தந்தை. அவர் மீது நான் அன்பும், மரியாதையும் வைத்துள்ளேன் என்றேன். பல தருணங்களில் ஒரு மகன் தந்தைக்கு எதிராக மாறலாம். ஆனால் எனக்கும், எனது தந்தைக்கும் கடந்த 10 ஆண்டுகளாக எந்தவித தொடர்பும் இல்லை.

கடந்த 2001ஆம் ஆண்டு செப்டம்பர் 11ஆம் திகதி தாக்குதல்களுக்கு முன்பே வன்முறையே வேண்டாம் என்று ஆப்கானிஸ்தானில் உள்ள டோரா போரா மலையைவிட்டு வெளியேறிவிட்டேன். அதில் இருந்து அவரிடம் இருந்து எந்த தகவலும் இல்லை என்று கூறியுள்ளார். முந்தைய நிர்வாகத்தில் நடந்தவை பற்றி எந்த கருத்தும் கூற விரும்பவில்லை என்று வெள்ளை மாளிகையின் செய்தித் தொடர்பாளர் தெரி

# பாகிஸ்தானில் வெள்ளப்பெருக்கு ஏற்படுத்திய வித்தியாசமான பக்க விளைவு



பாகிஸ்தானில் கடந்த ஆண்டு வரலாறு காணாத வெள்ளம் ஏற்பட்டது. இது ஏற்படுத்திய அழிவுகள், நாசங்கள் எல்லாம் ஒரு புறம் இருக்க, இதனால் ஒரு மோசமான பக்க விளைவு ஏற்பட்டுள்ளது.

வெள்ள நீரில் இருந்து தப்புவதற்காக மரங்களில் ஏறி தஞ்சம் புகுந்த மில்லியன் கணக்கான சிலந்திகள் இப்போது வெளிப்பட ஆரம்பித்துள்ளன.

இது முற்றிலும் எதிர்பார்க்காத ஒரு பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. தண்ணீர் வற்ற நீண்ட நாள் எடுத்துக் கொண்டதால் இவை வழமைக்கு மாறாக மரங்களில் கூடுகளைக் கட்டி வாழவும் ஆரம்பித்துவிட்டன.

இந்த சிலந்திக் கூடுகள் மிகவும் பெரிதாகக் காணப்படுகின்றன. இதற்கு முன் இடம்பெற்றிராத அல்லது மக்கள் கண்டிராத ஒரு நிகழ்வாக இது அமைந்துள்ளது. சிந்து மாநிலத்திலேயே இந்த அதிசயத்தைக் காணக்கூடியதாக உள்ளது. இதனால் ஒரு பெரிய நன்மையும் மக்களுக்கு விளைந்துள்ளது. வெள்ளப்பெருக்கின் பின் வழமையாக ஏற்படும் நுளம்புப் பெருக்கம் இங்கு பெருமளவுக்குக் குறைந்துள்ளது.

காரணம் மரங்களில் தஞ்சம் புகுந்துள்ள சிலந்திகளின் கூடுகளுக்குள் இவை சிக்கி அவற்றின் பிரதான உணவாக மாறிவருகின்றன. இதனால் பல்வேறு நோய்ப் பரவலுக்குக் காரணமாக இருக்கும் நுளம்புகளின் பெருக்கம் கணிசமாகக் குறைந்துள்ளது.

## எகிப்து ஜனாதிபதியின் சொத்து விபரங்கள் இராணுவ சபையால் ஆய்வு

எகிப்து முன்னாள் ஜனாதிபதி முபாரக்கின் அசையும், அசையா சொத்துக்களை கையகப்படுத்த ஆளும் இராணுவத்தால் நியமிக்கப்பட்ட சபை தீவிர நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறது. எகிப்து ஜனாதிபதியாக 30 ஆண்டுகளுக்கு மேலாக பதவி வகித்த ஜனாதிபதி ஹொஸ்னி முபாரக் பதவி விலகக்கோரி மக்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். 17 நாட்கள் நடந்த போராட்டத்தின் விளைவாக ஜனாதிபதி முபாரக் பதவி விலகினார். இதைத்தொடர்ந்து தற்காலிக இராணுவம் ஆட்சியினை நடத்தி வருகிறது. இந்நிலையில் ஜனாதிபதியின் சொத்துக்கள், வங்கி கணக்குகளை கையகப்படுத்த இராணுவம் தலைமையில் சபை ஒன்றினை நியமித்துள்ளது.

இந்த சபை முபாரக் மற்றும் அவரது குடும்பத்தினர் குவித்துள்ள சொத்து விபரங்கள், வங்கி கணக்குகள் உள்ளிட்டவைகளை ஆராய்ந்து வருகிறது. இதற்கிடையே தற்காலிக பிரதமராக பொறுப்பு வகிக்கும் ஈஸாம் ஷரீப், நாட்டில் ஊழலை ஒழித்து [illegible]டுவது தான் எனது முதல் வேலை என தெரிவித்திருந்தார்.

இந்த வகையில் முதல் நடவடிக்கையாக ஜனாதிபதி முபாரக்கின் சொத்துகள், வங்கி கணக்குகள் குறித்த விபர[illegible] விரைவில் சபையில் பிரதமரிடம் [illegible]கல் செய்யும் என ஜிங்கூவா செய்தி [illegible]னம் தெரிவித்துள்ளது.



துனிசியாவின் வெளியுறவு துறை அமைச்சர் மோல்தி கேபியை, அமெரிக்காவின் தூதுவர் ஏஞ்சலினா ஜோலி துனிசியன் - லிபியா எல்லைக்கோடு குறித்து சந்தித்து பேசுகையில் எடுக்கப்பட்ட படம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவட்ட கழகங்களுக்கு இடையேயான போட்டிகள் நாளை முதல் ஆரம்பம்

ஏழாலை,

யாழ். மாவட்ட கழகங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகளில் முதலில் குழுநிலைப் போட்டிகளை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பிரதேச மட்ட போட்டிகளைத் தொடர்ந்து இடம்பெறவுள்ள மாவட்ட மட்டப் போட்டிகளில் பிரதேச செயலகப் பிரிவு அணிகள் பங்குபற்றவுள்ளன.

யாழ். மாவட்ட குழு நிலைப் போட்டிகள் இடம்பெறவுள்ள திகதிகள், இடங்கள் தொடர்பான விபரம் சகல பிரதேச செயலகங்களுக்கும் யாழ். மாவட்ட விளையாட்டு அலுவலர் ஏ.எப்.ஜே. ரூபசிங்கவினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இதன்படி பூப்பந்தாட்டம், ஹொக்கி என்பன நாளை 9 ஆம் திகதியும் நாளை மறுதினம் 10 ஆம் திகதியும் மானிப்பாய் - இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறுவுள்ளன.

கூடைப்பந்தாட்டம் வேம்படி மகளிர் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி மைதானங்களில் எதிர்வரும் 16 ஆம், 17 ஆம் திகதிகளிலும் வலைப்பந்தாட்டம் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மைதானத்தில் எதிர்வரும் 26 ஆம் திகதியும்நடைபெறவுள்ளன.

பெண்களுக்கான உதைபந்தாட்டம் மருதங்கேணியில் எதிர்வரும் 30 ஆம் திகதியும் ஆண்களுக்கான உதைபந்தாட்டம் பருத்தித்துறை - ஹாட்லிக் கல்லூரி மைதானத்திலும் மே மாதம் 7 ஆம், 8 ஆம் திகதிகளிலும் நடைபெறவுள்ளன.

கபடிப் போட்டி சாவகச்சேரியில் மே மாதம் 14 ஆம் திகதி நடைபெறவுள்ளது. ஆண்கள், பெண்களுக்கான கிரிக்கெட் போட்டி பாடும் மீன் விளையாட்டுக் கழக மைதானத்தில் மே மாதம் 17 ஆம், 18 ஆம் திகதிகளிலும் கரப்பந்தாட்டப் போட்டி உடுப்பிட்டி - இமையாணன் மைதானத்தில் மே மாதம் 21 ஆம், 22 ஆம் திகதிகளிலும் நடைபெறவுள்ளன.

ஆண்களுக்கான எல்லே மே மாதம் 28 ஆம் திகதியும் பெண்களுக்கான எல்லே மே மாதம் 29 ஆம் திகதியும் யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிகளுக்கு ஏற்றவாறு பிரதேச செயலக அணிகளைத் தயார்படுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.




# வித்தகபுரம், நகுலேஸ்வரம் ஊடாக பஸ் சேவை நடத்த மக்கள் கோரிக்கை

தெல்லிப்பழை,

யாழ்ப்பாணம் - கீரிமலைக்கு இடையேயான இலக்கம் 795 வழித்தடத்திலான பஸ் சேவையை உடனடியாக நடத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு இலங்கை தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாவிடம் அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த 30 வருடங்களாக இடம்பெயர்ந்திருந்த நிலையில் தற்பொழுது மீளக்குடியேற அனுமதிக்கப்பட்ட வித்தகபுரம், நகுலேஸ்வரம் உட்பட அதனைச் சூழவுள்ள பகுதிகளைச் சேர்ந்த மக்கள் இக்கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

இலக்கம் 795 வழித்தட பஸ் சேவையானது யாழ்ப்பாணத்திலிருந்து தெல்லிப்பழை - 8 ஆம் கட்டை வீதியூடாக பன்னாலை வரை இடம்பெற்று வருகின்றது. இருப்பினும் வித்தகபுரம், நகுலேஸ்வரம் ஆகிய பகுதிகளுக்கு ஊடாக இப் பஸ் சேவை இடம்பெறுவதில்லை.

எனவே, மீளக்குடியேற அனுமதிக்கப்பட்டுள்ள பொது மக்கள் மற்றும் மாணவர்களின் போக்குவரத்து நலனைக் கருத்திற்கொண்டு மேற்படி 795 வழித்தட பஸ் சேவையை வித்தகபுரம், நகுலேஸ்வரம் ஆகிய பகுதிகளுக்கு ஊடாக நடத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# சுதேசிய திருநாள் கொண்டாட்டம் வழமை போன்று இம்முறையும்

ஏழாலை,

அரியாலை சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழாவின் இறுதி நாள் நிகழ்வு எதிர்வரும் 14 ஆம் திகதி புதுவருட தினத்தன்று அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் கொண்டாடப்படவுள்ளது.

இவ்வருடம் இவ்விழா 92 ஆவது அரியாலை சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழாவாக இடம்பெறவுள்ளதுடன், இதனை முன்னிட்டு வழமை போன்று மாணவர்களிடையே போட்டிகளும் நடாத்தப்பட்டு வருகின்றன.

அத்துடன், அரியாலைப் பகுதியில் வசிக்கும் இளைஞர், யுவதிகளிடையே விளையாட்டுப் போட்டிகளும் நடைபெறவுள்ளன. அத்துடன், மாபெரும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

இந்த அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்டம் 1919 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு வருடப் பிறப்புத் தினத்திலும் பாரம்பரிய - சுதேசிய ஒற்றுமை உணர்வுடன் கொண்டாடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

# சனசமூக நிலையத்தின் 63 ஆவது நிறைவு விழா

ஏழாலை,

நல்லூர் தெற்கு சனசமூக நிலையத்தின் 63 ஆவது ஆண்டு நிறைவு விழா கோலாகலமாகக் கொண்டாடப்படவுள்ளது. இவ்விழாவை முன்னிட்டு பேச்சுப்போட்டி, கட்டுரைப் போட்டி மற்றும் விளையாட்டுப் போட்டிகள் என்பன நடத்தப்படவுள்ளன. கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு மற்றும் அதிமேற் பிரிவு என நான்கு பிரிவுகளாக இப்போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் கட்டுரைப் போட்டி நாளை 9 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கும் இரு மொழிகளிலுமான பேச்சுப் போட்டி நாளை மறுதினம் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00மணிக்கும் நடைபெறவுள்ளன. விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் 14 ஆம் திகதி புது வருட தினத்தன்று காலை 9.00 மணிக்கு நிலைய மைதானத்திலும் நடைபெறவுள்ளன.

# ஞாபகார்த்த சமய அறிவுப் போட்டி

வேலணை,

மண்டைதீவு - சிறுப்புலம் அருள்மிகு ஸ்ரீ சுப்பிரமணிய தேவஸ்தானத்தில் 30 வருடங்களுக்கு மேலாக அர்ப்பணிப்புடன் பிரதம குருவாகப் பணியாற்றிய அமரர் ஸ்ரீ கந்த பாலசுப்பிரமணிய குருக்கள் ஞாபகார்த்தமாக பாடசாலை மாணவர்களிடையே சமய அறிவுப்போட்டி நடைபெறவுள்ளது.

இதனை எதிர்வரும் ஆனி மாதம் நடத்த ஆலய அறங்காவலர் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# பெண்களுக்கான வலைப்பந்தாட்டம்

சாவகச்சேரி,

தென்மராட்சி வலயப் பாடசாலைகள் இடையே நடைபெறும் வலயமட்ட விளையாட்டுப் போட்டி வரிசையில் பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டிகள் நாளை 9 ஆம் திகதி சனிக்கிழமையும், மறு நாள் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும், 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும் காலை 8.30 மணிக்கு மட்டுவில் - சந்திரபுரம் ஸ்கந்தவரோதய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளதென வலயக் கல்விப் பணிப்பாளர் கு. பிறேமகாந்தன் அறிவித்துள்ளார்.

# சிறாம்பியடி மாதர் சங்கத்தின் முன்மாதியான செயற்பாடுகள்

ஏழாலை,

யாழ். நகரத்தை அண்டியுள்ள சிறாம்பியடி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் சமூகத்திற்கு முன்மாதிரியான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.

இம் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் அண்மையில் டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு சிரமதானப் பணியினை மேற்கொண்டது.

மகளிர் தினத்தை முன்னிட்டு மகளிர் தின விழிப்புணர்வுச் செயற்திட்டமாக மகளிருக்கிடையிலான போட்டி நிகழ்வினை நடத்தி பரிசில்களையும் வழங்கியுள்ளது. இவ்வாறு சமூக மேம்பாட்டுக்கான முன்மாதிரிச் செயற்பாடுகளை மேற்படி மாதர் சங்க அங்கத்தவர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

# வருடாந்த அலங்கார உற்சவம்

தெல்லிப்பழை,

மல்லாகம் - அருள்மிகு காளி தேவஸ்தானத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் நாளை 9 ஆம் திகதி ஆரம்பமாகித் தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறவுள்ளன.

அலங்கார உற்சவத்தின் இறுதி நாளான 20 ஆம் திகதி சங்காபிஷேக நிகழ்வும், அதனைத் தொடர்ந்து மகேஸ்வர பூசையும் நடைபெற்று இரவு 7.00 மணியளவில் பூந்தண்டிகையில் அம்பாள் வீதியுலா வரும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டு. வைத்தியசாலையில் அமைக்கப்பட்டு வரும் மூன்று கட்டிடத் தொகுதிகளையும் விரைவில் பூர்த்தி செய்யவும்

## - சுகாதார அமைச்சர் செயலாளருக்கு பணிப்பு

மண்டூர்,

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் நிதி வசதி இல்லாத காரணத்தினால் பூர்த்தி செய்யப்படாமலிருக்கும் மூன்று கட்டிடத் தொகுதிகளையும் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்குமாறு சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, அமைச்சின் செயலாளர் வைத்திய கலாநிதி ரவீந்திர றுவேருவை பணித்துள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா தெரிவித்தார்.

இந்த பணிப்பு சம்பந்தமாக அவர் மேலும் தகவல் தருகையில்,

சுகாதார அமைச்சின் ஆலோசனைக் குழுக் கூட்டம் செவ்வாய்க்கிழமை பாராளுமன்ற கட்டிடத் தொகுதியில் நடைபெற்றது.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் வைத்திய நிபுணர்களுக்கான விடுதி, மருந்து களஞ்சியம், வெளிநோயாளர் சிகிச்சை பிரிவு என்பன நீண்ட காலமாக பூர்த்தி செய்யப்படவில்லை. இவற்றை பூர்த்தி செய்வதற்கு 750 இலட்சம் ரூபா தேவையென மதிப்பிடப்பட்டுள்ளது.

வைத்திய நிபுணர்களுக்கான விடுதி இன்மையால் அவர்கள் வைத்தியசாலை வளாகத்துக்கு வெளியே வாடகை வீடுகளில் தங்கியுள்ளனர். இதன் காரணமாக வைத்திய நிபுணர்கள் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

அத்துடன் அவசர தேவையின் பொருட்டு அவர்கள் வெளியில் இருந்து வைத்தியசாலைக்கு வருவதற்கு காலதாமதமும் ஏற்படுகின்றது. இத்தகைய நிலைமைகளை நான் இக்கூட்டத்தில் எடுத்துக் கூறி 3 கட்டிடத் தொகுதிகளையும் பூர்த்தி செய்யுமாறு நான் கேட்டுக் கொண்டேன்.

அதனை செவிமடுத்த அமைச்சர் அதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு செயலாளரைப் பணித்தார். அதனை அடுத்து எனது கோரிக்கை சம்பந்தமாக கடிதம் ஒன்றை தருமாறு செயலாளர் என்னைக் கேட்டார். நான் உடனே கடிதத்தையும் செலவு மதிப்பீட்டு அறிக்கையையும் கையளித்தேன்.

பெரிய கல்லாறு மாவட்ட வைத்தியசாலையை ஆதார வைத்தியசாலையாக தரம் உயர்த்துமாறும் அமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்தேன். அதற்கும் இணக்கம் தெரிவித்த அமைச்சர் சிறிசேன, உரிய நடவடிக்கை எடுக்குமாறு செயலாளரைக் கேட்டுக் கொண்டார்.

சுனாமியின் போது சேதமடைந்த இவ் வைத்தியசாலை ஐரிஷ் குடியரசின் செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் புனரமைக்கப்பட்டுள்ளது. விசேட சிகிச்சைப் பிரிவு, ஆய்வு கூடம், எக்ஸ்றே பிரிவு ஆகிய வசதிகளை இவ்வைத்தியசாலை கொண்டுள்ளது எனக் கூறினார்.

இக்கூட்டத்தில் மாகாண சுகாதார அமைச்சுகளின் செயலாளர்கள், மாகாண சுகாதார பணிப்பாளர்கள், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

# மீள்குடியேற்ற அதிகார சபையின் பிரதித் தலைவர் நியமனம்

காரைதீவு,

மீள்குடியேற்ற அதிகார சபையின் பிரதித் தலைவராக பிரபல சமூக சேவையாளர் கர்மயோகி ஆறுமுகம் லோகேஸ்வரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் இந்நியமனத்தை வழங்கியுள்ளார். கடந்த பல வருடங்களாக சேவையாற்றிய "சரீரம்" நிறுவன பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளரான ஆ. லோகேஸ்வரன் கடந்த வாரம் இந்நிய மனத்தைப் பெற்றுள்ளார்.

# நாவிதன்வெளி பிரதேச கலாசார பெருவிழா இன்று கிழக்கு மாகாண முதலமைச்சர் பிரதம அதிதி

(சம்மாந்துறை மேலதிக நிருபர்)

அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த நாவிதன்வெளி பிரதேச செயலக கலாசாரப் பேரவை நடத்தும் பிரதேச கலாசார விழா இன்று வெள்ளிக்கிழமை கோலாகலமாக நடைபெறவிருக்கின்றது.

நாவிதன்வெளிப் பிரதேச செயலக கலாசார பேரவை நடத்தும் இரண்டாவது பிரதேச கலாசார விழாவான இப்பெருவிழா கலாசாரப் பேரவையின் தலைவரும், நாவிதன்வெளி பிரதேச செயலாளருமான கலாநிதி எம். கோபாலரெட்ணம் தலைமையில் பிரதேச செயலக அரங்கில் இடம்பெறும்.

இந்த விழாவில் கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன், பிரதம அதிதியாகக் கலந்து கொள்வதுடன் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் எஸ். புஸ்பராசா கௌரவ அதிதியாகவும் கலந்து கொள்வார்.

அத்துடன் விசேட அதிதியாக அம்பாறை மாவட்ட செயலாளர் சுனில் கன்னங்கரவும், சிறப்பு அதிதிகளாக மேலதிக மாவட்ட செயலாளர் ஜே. எஸ். டி. எம். அசங்க அபேவர்த்தன, நாவிதன்வெளிப் பிரதேச சபைத் தவிசாளர் ரீ. கலையரசன், கோட்டக் கல்வி அதிகாரி குணசேகரம், மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ஏ. எல். தௌபீக், வேள்ட்விசன் பிரதேச முகாமையாளர் ஐ. மைக்கல் ஆகியோர் கலந்து கொள்வர்.

விழாவில் கலாசார நிகழ்வுகள் பல அரங்கேற்றப்படவிருப்பதுடன் பசுமை எனும் கலாசார விழா சிறப்பு மலரும் வெளியிடப்படவிருக்கின்றது. உதவி பிரதேச செயலாளர் எஸ். கரனின் வரவேற்புரையுடன் ஆரம்பமாகவிருக்கும் விழாவில் கலாநிதி கே. கோபாலபிள்ளை 'பசுமை' சிறப்பு மலரின் வெளியீட்டுரையையும் நிகழ்த்துவார்.

மேலும் இக்கலாசாரப் பெருவிழாவில் சொறிக்கல்முனை பங்குத் தந்தை அருட்தந்தை சேவியர் ரஜீவா இருதயராஜ், ஊடகவியலாளர்களான சாமஸ்ரீ தேசகீர்த்தி அப்துல் ஜப்பார் முஹம்மட் ஹனிபா, உமறுகத்தா முஹம்மட் இஸ்ஹாக், அப்துல் சத்தார், முகம்மது முஜாஹித், ஆயுர்வேத வைத்தியர் முஹம்மது கனி முஹம்மது ஹுசைன், பிறப்பு, இறப்பு பதிவாளர் முருகேசு நவரெத்தினம், வேள்விஷன் பிரதேச முகாமையாளர் ஐ. மைக்கல் ஆகியோர் சேவை நலன் பாராட்டி கௌரவிக்கப்படவுள்ளனர்.

இந்தப் பிரதேச கலாசாரப் பெருவிழாவை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட கலை, இலக்கியப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கான பரிசளிப்பும் விழாவில் இடம்பெறும்.

தவிரவும் 20 கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவுகளையும் 21803 சனத்தொகையையும் கொண்ட நாவிதன்வெளி பிரதேச செயலகப் பிரிவு, நாவிதன்வெளி அன்னமலை, சொறிக்கல்முனை முதலான பழம்பெரும் தமிழ்க் கிராமங்களையும், கல்லோயா குடியேற்றத் திட்ட கிராமங்கள் பலவற்றையும் உள்ளடக்கிய பிரதேசமாகும்.

கடந்த 2000 ஆம் ஆண்டு ஜனவரி 15 ஆம் திகதி நாவிதன்வெளிப் பிரதேச செயலாளராகப் பதவியேற்ற கலாநிதி எம். கோபாலரெட்ணம் இன்றுவரை பிரதேச அபிவிருத்திக்கும், பிரதேச மக்களின் நலன்களுக்காகவும் அர்ப்பணிப்புடன் சேவையாற்றி வருகின்றார்.

பிரதேச அரசியல் முக்கியஸ்தர்கள், மாகாண சபை உறுப்பினர், பிரதேச சபை தவிசாளர் உட்பட பல அரச சார்பற்ற நிறுவனங்களின் அனுசரணையுடனும் ஒத்துழைப்புடனும் இப்பிரதேசத்தில் பல அபிவிருத்திப் பணிகளை பிரதேச செயலாளர் கலாநிதி கோபாலரெட்ணம் முன்னெடுத்துள்ளார்.

அன்னாரது அர்ப்பணிப்பான சேவையைக் கௌரவித்து, நாவிதன்வெளி முதலாம் பிரிவில் அமைக்கப்பட்டுள்ள 50 வீட்டுத் திட்டப் பகுதிக்கு அப்பகுதி மக்கள் கோபாலபுரம் எனப் பெயரிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் அம்பாறை மாவட்டத்தில் பிரதேச செயலகங்களுக்கிடையே நடைபெற்ற முகாமைத்துவப் போட்டிகளில் குறிப்பாக 2008 - 2010 ஆம் ஆண்டுகளில் நாவிதன்வெளிப் பிரதேச செயலகப் பிரிவு தெரிவு செய்யப்பட்டு பரிசு பெற்றமையும் சுட்டிக்காட்டத்தக்கது.

# கல்முனை வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை அலுவலகத்தை மாற்றும் முயற்சிக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

(சம்மாந்துறை மேலதிக நிருபர்)

கல்முனை வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை அலுவலகத்தை அம்பாறை அலுவலகத்துடன் இணைப்பதற்கு எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளைக் கண்டித்தும், அம்பாறைக்கு கொண்டு செல்லப்பட்ட கல்முனை அலுவலக கணக்குப் பிரிவை மீண்டும் கல்முனையில் இயங்க ஆவண செய்யுமாறு கோரியும் ஆர்ப்பாட்டமொன்று இன்று வெள்ளிக்கிழமை கல்முனையில் நடைபெறவிருக்கின்றது.

அகில இலங்கை பொது ஊழியர் முன்னணி கவனயீர்ப்புப் போராட்டமாக இந்த அமைதி ஆர்ப்பாட்டத்தை நடத்தவிருக்கின்றது.

அகில இலங்கை பொது ஊழியர் முன்னணியின் தலைவர் எஸ். லோகநாதன் தலைமையில் கல்முனை தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை அலுவலகம் முன்பாக இந்த அமைதி ஆர்ப்பாட்டம் இடம்பெறவிருக்கின்றது.

அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேச தமிழ், முஸ்லிம் மக்களின் நலன் கருதி 2003-04-23 ஆம் திகதி அமைச்சர் எஸ். ஆறுமுகம் தொண்டமானால் கல்முனை தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை மாவட்ட அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது.

கரையோரப் பிரதேசத்திலுள்ள தமிழ், முஸ்லிம் பிரதேச செயலகப் பிரிவுகளை நிருவாக எல்லையாகக் கொண்டு இயங்கி வந்த மேற்படி கல்முனை அலுவலகம் இதுவரை தமிழ் முஸ்லிம் மக்களுக்குப் பெரும் சேவைகளை ஆற்றிவருகின்றது.

ஆனால் இந்த அலுவலகப் பணிகளை அம்பாறை அலுவலகத்துடன் இணைத்துவிட்டு, வீடமைப்புக் கடன் அறவிடும் பெயரளவிலான அலுவலகமாக இயங்கச் செய்யும் மறைமுக சதிகள் தற்பொழுது முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே கல்முனை அலுவலக கணக்குப் பிரிவு அம்பாறை அலுவலகத்துடன் இணைக்கப்பட்டுள்ள நிலையில், அலுவலகப் பணிகளையும் தரம் குறைக்கும் திரைமறைவு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவருவதாக அகில இலங்கை பொது ஊழியர் முன்னணி கண்டனம் தெரிவித்துள்ளது.

இது விடயமாக பொது ஊழியர் முன்னணியின் தலைவர் எஸ். லோகநாதன், செயலாளர் ஐ.எம். இப்றாலெப்பை ஆகியோர் விடுத்துள்ள அறிக்கையில், இந்த அலுவலகம் தொடர்பாக இன்று கல்முனையில் முன்னெடுக்கப்படும் கவனயீர்ப்புப் போராட்டத்தில் பொதுமக்களும், பிரமுகர்களும் இணைந்து கொள்ளுமாறு கோரியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் - சிங்கள புத்தாண்டை முன்னிட்டு கண்டியில் விஷேட பொலிஸ் பாதுகாப்பு

செங்கடகல,

தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு தற்போது கண்டி மாநகரம் களை கட்டியுள்ளது. கண்டி மாநகரில் காலை முதல் இரவு வரை அதிகமான மக்கள் நடமாட்டத்தை காண முடிவதுடன் வீதிகள் எங்கும் சன நெரிசல் நிறைந்து காணப்படுகின்றது.

கண்டி நகரின் சுற்றுப்புற பிரதேசங்களிலிருந்து புது வருடத்திற்கான பொருள் கொள்வனவிற்காக கண்டி நகருக்கு பெருமளவு மக்கள் வருகைத் தருவதாலேயே வீதிகளில் அதிக நெரிசல் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

**மக்கள் நடமாட்டம் அதிகரித்துள்ளதோடு வீதிகள் எங்கும் சன நெரிசல் நிறைந்து காணப்படுகின்றது**

இதேவேளை, இவ்வாறு வரும் மக்களின் பாதுகாப்பு நன்மைகள் கருதி விஷேட பொலிஸ் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் காமினி நவரத்ன தெரிவித்தார். ஏமாற்றுப் பேர்வழிகளிடமிருந்து மக்களைப் பாதுகாக்க சிவிலுடையிலான பொலிஸார் மக்கள் அதிகமாக நடமாடக்கூடிய பொது இடங்களில் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதே போன்று வீதிகளிலும் பொது மக்கள் இலகுவாக பாதைகளை கடப்பதற்கு விஷேட பொலிஸார் வீதி ஒழுங்கு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். ஜீப் வண்டிகளிலும் மோட்டார் சைக்கிள்களிலும் மிதி வண்டிகளிலும் விஷேட பொலிஸ் ரோந்துச் சேவைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை பாவனையாளர்களின் நலன் கருதி கண்டி மாநகர சபை பொது சுகாதார பிரிவு அதிகாரிகள், பிரதேச பொது சுகாதார அதிகாரிகள், நகரப் பகுதிகள், கிராமப் பகுதிகளில் ஹோட்டல்கள், மென்பான விற்பனை நிலையங்கள், சிற்றுண்டிச்சாலைகள் மற்றும் அத்தியாவசிய பொருள் விற்பனை நிலையங்கள் என்பனவற்றில் திடீர் சோதனைகளை மேற்கொண்டு பாவனைக்குதவாத பொருட்கள், காலாவதியான பொருட்களை கண்டுபிடித்து அழித்து வருவதுடன் அவ்வாறான பொருட்களை விற்பனைக்கு வைத்திருந்த உரிமையாளர்களுக்கு எலதிரான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேபோன்று நிறுவை அளவை திணைக்கள அதிகாரிகளும் நிறுவை - அளவைகளில் மோசடி செய்யும் வியாபாரிகளை கண்டுபிடிப்பதற்கான திடீர் சோதனைகளை மேற்கொண்டுள்ளனர்.

# மலையகப் பகுதிகளில் வட்டாரங்களை அதிகரிப்பதால் மட்டும் எவ்வித நன்மையும் ஏற்படப் போவதில்லை

## ம.ம.மு. செயலாளர் லோறன்ஸ்

கொத்மலை,

உள்ளூராட்சி மன்ற தேர்தல் திருத்தச் சட்ட மூலத்தின் அடிப்படையில் மலையகப் பகுதிகளில் வட்டாரங்களை அதிகரிப்பதால் மட்டும் எவ்வித நன்மையும் ஏற்படப் போவதில்லை.

உள்ளூராட்சி மன்றங்களின் தொகையையும் அதிகரிக்க வேண்டும்.

இதன் மூலமே பல சாதக விளைவுகள் ஏற்படும் என்று மலையக மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகம் ஏ. லோறன்ஸ் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்ற தேர்தல் திருத்தச் சட்ட மூலம் விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட உள்ளது. இது குறித்து கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஜனநாயக நாடுகளில் தேர்தல்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாக விளங்குகின்றன. எனவே தேர்தல்கள் நம்பகத்தன்மை மிக்கதாக காணப்படுவது மிகவும் அவசியமாகும். இந்த வகையில் எமது நாட்டில் நடைமுறையில் உள்ள விகிதாசார தேர்தல் முறை குறித்து பல்வேறு விமர்சனங்கள் முன் வைக்கப்பட்டு வருவது தெரிந்ததே. இந்நிலையில் தேர்தல் முறையில் மாற்றம் கொண்டு வருவது தொடர்பான முயற்சிகள் இடம் பெற்று வருகின்றன.இதனடிப்படையில் உள்ளூராட்சி மன்ற தேர்தல்கள் திருதச் சட்ட மூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட உள்ளது.

எல்லை நிர்ணயக் குழு உருவாக்கப்பட உள்ளதாகவும் தெரிய வருகின்றது. வட்டாரங்களை ஏற்படுத்த எல்லை நிர்ணயம் செய்யப்படுவது போன்று உள்ளூராட்சி மன்றங்களை ஏற்படுத்தவும் எல்லை நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

வெறுமனே வட்டாரங்களை மட்டும் அதிகரிக்காத உள்ளூராட்சி மன்றங்களின் தொகையினை மலையகப் பகுதிகளில் அதிகரிக்க வழிவகைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

மலையகத்தின் பல பகுதிகளில் இன்னும் பல பிரதேச சபைகளையும் நகர சபைகளையும் மாநகர சபைகளையும் உருவாக்க முடியுமாக உள்ளது. இந்த வாய்ப்பினை நாம் சரிவர பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

எல்லை நிர்ணயக் குழுவில் சகல இனங்களையும் சார்ந்த பிரதிநிதிகள் உள்வாங்கப்பட வேண்டும். இதன் மூலமே எல்லை நிர்ணயக் குழுவின் பணிகள் சிறப்பானதாக காணப்படும்.

மலையக அரசியல்வாதிகள் கருத்து முரண்பாடுகளை மறந்து உள்ளூராட்சி மன்ற திருத்த சட்ட மூலத்தை சாதகமாக்கிக் கொள்ளும் வழி வகைகள் குறித்து சிந்திக்க வேண்டும் என்றார்.

# புதிய சம்பள உயர்வை ஆவலுடன் எதிர்பார்க்கும் தோட்ட தொழிலாளர்கள்

இராகலை,

தோட்ட முதலாளிமார் சம்மேளனத்துடனான பெருந்தோட்ட தொழிற்சங்க கூட்டமைப்புக்களின் சம்பள கூட்டொப்பந்தம் காலாவதியாகியுள்ள நிலையில் புதிய சம்பள உயர்விற்கான கூட்டொப்பந்த முடிவுகளை அறிவதில் தோட்ட தொழிலாளர்கள் பெரும் ஆவலுடனும் அக்கறையுடனும் எதிர்பார்த்துள்ளனர்.

கடந்த காலங்களில் தோட்ட தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பாக மேடைகளில் முழங்கியும் அறிக்கைகள் விடுத்தும் பெருந்தொகையினை பெற்றுத் தருவதாக தோட்ட தொழிலாளர்களுக்கு மலையக தலைமைகள் வாக்குறுதி அளித்த போதும் இறுதியில் கிடைத்ததோ மிகவும் அற்ப சம்பளமே. இதனால் தொழிலாளர்கள் பெருத்த ஏமாற்றமும் கவலையும் அடைந்திருந்தனர்.

இவ்வருடம் பெரும்பாலான தொழிற் சங்கங்கள் தொழிலாளர்களுக்கு நாளாந்தம் 500 ரூபாவும் சில தொழிற்சங்கங்கள் நாளாந்தம் 700 சம்பள உயர்வும் வழங்கப்பட வேண்டுமென கோரிக்கை எழுப்பியுள்ளன. மலைபோல விலைவாசி உயர்ந்துள்ள நிலையில் குடும்பத்திலுள்ளவர்களின் உணவுக்கே பெருங் கஷ்டப்படும் தொழிலாளர்கள் பிள்ளைகளின் கல்வி சுகாதார மற்றும் செலவுகளுக்கும் செய்வதறியாது உள்ளனர்.1

# பிரேரணைகள் எதுவுமின்றி ஊவா மாகாண சபையமர்வு 5 ஆவது முறையாக ஒத்திவைப்பு

பதுளை,

ஊவா மாகாண சபையின் சபை அமர்வு ஐந்தாவது முறையும் பிரேரணைகள் எதுவுமின்றி, எதிர்வரும் 28 ஆந் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

சபைத் தலைவர் ஹேமா ரட்ணாயக்க தலைமையில் சபையின் பிரதான மண்டபத்தில் நேற்றுக் காலை 10 மணிக்கு சபை அமர்வு ஆரம்பிக்கப்பட்ட போதிலும், பிரேரணைகள் எதுவுமின்மையினால் 15 நிமிடங்களில் சபை அமர்வு ஒத்தி வைக்கப்பட்டது.

ஊவா மாகாண சபையைப் பொறுத்த வரையில், நீண்ட காலமாகவே சபை அமர்வில் கோரமின்மை மற்றும், பிரேரணை கள் சமர்ப்பிக்கப்படாமை போன்ற இன்னோரன்ன காரணங்களினால் சபை அமர்வு ஒத்தி வைக்கப்பட்டு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சபை அமர்வின் போது வழமையாகவே சபைத் தலைவரினால் பிரேரணைகளை சமர்ப்பிக்குமாறு பலமுறைகள் கோரப்பட்ட போதிலும், சபை உறுப்பினர்களினால் பிரேரணைகள் சபைக்கு சமர்ப்பிக்கப்படுவதில்லை.

அத்துடன் சபை அமர்வுகளில் சபை உறுப்பினர்களை கலந்து கொள்ள வைக்கும் வகையில், பல தடவைகளில் அழைப்பு மணி ஒலிக்கப்பட்டே, சபை உறுப்பினர்களை சபை அமர்விற்கு அழைக்கும் நிலை, ஊவா மாகாண சபையில் இருந்து வரு கின்றது.

மாத இறுதியில் நடைபெறும் சபை அமர்வுகளில் மட்டும் சபை உறுப்பினர்கள் அனைவரும் பிரேரணைகளை சமர்ப்பிக்காமலும், கலந்து கொள்ளும் நிலையும் காணப்படுகின்றது.

அன்றைய தினம் உறுப்பினர்களுக்கு மாதக் கொடுப்பனவு கள் வழங்கப்படுவதினாலேயே உறுப்பி னர் அனைவரும் கலந்து கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# பிரயாணப் பையிலிருந்து 400 கிராம் கஞ்சா மீட்பு

பதுளை,

இ.போ.ச பஸ்ஸொன்றில் பிரயாணப் பையிலிருந்து 400 கிராம் எடையுள்ள பதப் படுத்தப்பட்ட கஞ்சாவை எல்ல பொலிசார் மீட்டதோடு பிரயாணப் பையின் உரிமையாளரையும் கைது செய்துள்ளனர். எல்ல பகுதியின் கரந்கொல்ல என்ற இடத்தில் இ.போ.ச பஸ்ஸொன்றினை வழி மறித்து பொலிசார் மேற்கொண்ட சோதனை யின் போதே பயணப்பை ஒன்றிலிருந்து பதப்படுத்தப்பட்ட கஞ்சாப் பொதி கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

எம்பிலிப்பிட்டியவிலிருந்து - பதுளைக்கு வந்துகொண்டிருந்த பஸ்ஸே கரந்த கொல்லை என்ற இடத்தில் இவ்வாறு பொலிஸாரினால் சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பான தீவிர புலன் விசாரணைகளை எல்ல பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டி.எம்.பி. பண்டார மேற்கொண்டு வருகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களம் கற்போம்

இதுவரை காலமும் நாம் 'சிங்களம் கற்போம்' பகுதியின் ஊடாக எழுத்துக்கள் பற்றியும் அன்றாடம் நாம் பயன்படுத்தும் சொற்கள் பற்றியும் பார்த்தோம். இவ்வாரம் முதல் எவ்வாறு பேசலாம் என்பது பற்றிப் பார்ப்போம். இவற்றில் அன்றாட வாழ்வில் பயன்படுத்தப்படும் வினாக்களும் வாக்கியங்களும் பற்றிப் பார்ப்போம்.

எப்படி சுகம்?
செப்ப சனிப்ப கோஹ்மத?

எங்கே போகிறாய்?
கொகெத யன்னே?

நான் வவுனியாவுக்குப் போகிறேன்.
மம வவுனியாவட யனவா.

ஏன் போகிறாய்?
குமகடத யன்னே?

எங்கே தங்குவீர்?
கொகெத நவத்தென்னே?

எப்ப திரும்புவீர்?
கவதாத என்னே?

வயது என்ன?
வயச கீயத?

அடையாள அட்டை வைத்திருக்கிறீரா?
என்துறும் பத தியனவத?

என்ன இலக்கம்?
அங்கய கீயத.

சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளதா?
ரியதுரு பல பத்தய தியேத?

நேற்று வந்தீரா?
ஈயே ஆவாத.

பைக்குள் என்ன உள்ளது?
பேக் எத்துலே மொனவத தீயன்னே?

என்ன கொண்டு போகிறீர்?
மொனவத கெனியன்னே?

நான் புத்தகங்கள் கொண்டுபோகிறேன்.
மம பொத கெனி யனவா.

நீ என்ன செய்கிறீர்?
ஒயா மொனவத கரன்னே?

நான் ஒரு ஆசிரியர்.
மம குருவரயக்

எவ்வளவு காலம் இங்கு இருப்பீர்?
கொச்சர காலயக் மே இன்னே?

உமக்கு எத்தனை குழந்தைகள் இருக்கின்றார்கள்?
ஒபட்ட லமாய் கீ தெனேக் இன்னே?

அவர்கள் படிக்கிறார்களா?
எயாலா இகென கன்னவாத?

எத்தனை மகள்மார்?
துவலா கீ தெனேக்த?

மகன் இருக்கிறாரா?
புதா இன்னவாத?

எத்தனை மணிக்கு புறப்பட்டீர்கள்?
கியட்டத பிட்டத் உனே?

இந்த பஸ் தலவாக்கலைக்கு போகுமா?
மே பஸ் எக்க தலவாக்கேலே யயித?

எத்தனை மணிக்கு இந்த பஸ் புறப்படும்?
மே பஸ் எக கியடத பிடத்வென்னே?

என்ன யோசிக்கிறீர்?
மொனவத கல்பனா கரன்னே?

ஆசனம் இருக்கிறதா?
சீட் தியனவாத ?

எத்தனை மணிக்குப் போய்ச் சேரும்?
கியட்டத வித்தர மே யன்னே?

புத்தாண்டு வாழ்த்துக்கள்.

அலுத் அவுருது வேவா.

**மீண்டும் அடுத்த**
**பாடத்தில் சந்திப்போம்**
**வேலு. ஜீவராஜா**

---

### Two Boys Meet each other on the way to Railway station after meet their uncle.

### இரு பையன்கள் வீதியில் ஒருவரையொருவர் சந்தித்தபோது இடம்பெறும் உரையாடல்:

*Ravi:* Hello Raj, How are you?
*ரவி:* ஹலோ ராஜ் எப்படி இருக்கிறாய்?
*Raj:* I am fine. Where are you off to?
ராஜ்: நான் நலம். நீ எங்கே போகிறாய்?
*Ravi:* I am going to the railway station.
ரவி: நான் புகையிரத நிலையத்திற்குப் போகிறேன்.
*Raj:* For what, Are you going to leave for Colombo?
ராஜ்: என்னத்திற்காக? கொழும்புக்கு பயணமாகப் போகிறாயா?
*Ravi:* Oh! No, That's not. I am going to meet my uncle who is working there.
ரவி: இல்லை. எனது மாமனாரைச் சந்திக்கப் போகிறேன். அவர் அங்கு வேலைசெய்கிறார்?
*Raj:* Is he a Station master?
ராஜ்: அவர் புகையிரத நிலைய அதிபரா?
*Ravi:* No, he is an engine driver. Whose station is at Anuradhapura.
ரவி: இல்லை. அவர் ஒரு சாரதி. அவருடைய நிலையம் அனுராதபுரத்தில் இருக்கிறது.
*Raj:* How many years is he working there?
ராஜ்: அவர் எவ்வளவு காலமாக அங்கு வேலைசெய்கிறார்?
*Ravi:* I think, He is working more than 20 years.
ரவி: நான் நினைக்கிறேன், 20 வருடங்களுக்கு மேலாக வேலைசெய்கிறார்.
*Raj:* Really? I am unable to hope it.
ராஜ்: உண்மையாகவா? என்னால் இதை நம்பமுடியவில்லை.
*Ravi:* yes, he works there and he can speak three languages well.
ரவி: ஆம். அவர் அங்கு வேலைசெய்வதால் 3 மொழிகளிலும் நன்றாகப் பேசுவார்.
*Raj:* I see. So that he can write well.
ராஜ்: ஆ! அப்படியா, எனவே அவரால் எழுதவும் முடியும். அப்படித்தானே?
*Ravi:* yes, I studied English letter writing from his letters.
ரவி: ஆம். நான் அவரது ஆங்கிலக் கடிதங்களை படித்திருக்கிறேன்.
*Raj:* I like to meet him.
ராஜ்: நான் அவரைச் சந்திக்க விரும்புகிறேன்.
*Ravi:* Can you come with me to meet him now.
ரவி: அவரைச் சந்திக்க என்னுடன் வரமுடியுமா?
*Raj:* Why not? I can come.
ராஜ்: ஏன் முடியாது? என்னால் இப்போதே வரமுடியும்.
*Ravi:* Hello, Uncle he is Raj who is my best friend.
ரவி: ஹலோ மாமா இவர் எனது நண்பன் ரவி.
*Raj:* Good evening uncle.
*ராஜ்:* மாலை வணக்கம் மாமா.
*Uncle:* Good evening both of you.
மாமா: இருவருக்கும் மாலை வணக்கம்.
*Raj:* Uncle, he likes to meet you.
*ராஜ்:* மாமா நாம் உங்களைச் சந்தித்ததில் மகிழ்ச்சி.
*Uncle:* Okay. Dears shall we take a cup of tea then talk.
*மாமா:* ஓ.கே. நாங்கள் தேநீர் அருந்தியதன் பின்னர் கதைப்போம்.
*Raj & Ravi:* Thanks. Uncles. Shall we go to see the engine.
*ராஜ் & ரவி:* கேட்டதற்கு நன்றி மாமா. நாங்கள் ரயில் இயந்திரத்தைப் பார்க்கப்போவோமா?
Uncle: Don't miss understand me for not taking you to the engine today I have finished my duty,
*மாமா:* என்னைத் தவறாக நினைக்க வேண்டாம். உங்களை இயந்திரப் பகுதிக்கு கூட்டிக் கொண்டு போகாததற்கு மன்னிக்கனும். ஏனெனில், நான் என்னுடைய வேலையை இப்போது முடித்துவிட்டேன்.
*Raj & Rav :* It's okay uncle. Another time please take us.
*ராஜ் & ரவி:* பிரச்சினை இல்லை மாமா. இன்னொரு தடவை தயவுசெய்து எங்களை அழைத்துச் செல்லுங்கள்.
*Uncle:* Sure
*மாமா:* நிச்சயமாக.
*Raj & Ravi:* Thank you uncle. Good bye!
*Uncle:* Good bye!

S.Uthayabalan (M.A)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முறைசாராக் கல்விப் பிரிவு நடத்தும் வாழ்வாதார பயிற்சிநெறி வகுப்புகள்

தெல்லிப்பழை,

வலிகாமம் கல்வி வலயத்தின் முறைசாராக் கல்விப் பிரிவினரால் பாடசாலையை விட்டு விலகியவர்களுக்கான பயிற்சிநெறி வகுப்புக்கள் நடத்தப்பட்டு வருகின்றன என முறைசாராக் கல்விப் பிரிவினரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

பயிற்சி நெறிகளாவன இளவாலை - கன்னியர் மடம் பாடசாலையில் கணினிப் பயிற்சிநெறியும் பண்ணாகம் - மெய்கண்டான் பாடசாலையில் கைத்தொலைபேசி திருத்தல் வகுப்புக்களும் மல்லாகம் - மகா வித்தியாலயத்தில் புத்தகம் கட்டுதல் பயிற்சி வகுப்புக்களும் நடைபெற்று வருகின்றன.

புன்னாலைக்கட்டுவன் - அ.த.க. பாடசாலை, மயிலிட்டி - றோ.க.த. பாடசாலை, மருதனார்மடம் - இராமநாதன் கல்லூரி ஆகியவற்றில் தையல் பயிற்சிநெறி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

கட்டுவன்புலம் - அ.த.க. பாடசாலையில் பன்னவேலைப் பயிற்சியும் நவாலி - மகா வித்தியாலயத்தில் வர்ணம் தீட்டுதல், கேக் ஐசிங் பயிற்சி வகுப்புக்களும்நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இப் பயிற்சி நெறியில் ஆர்வமுடையவர்கள் இணைந்துகொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வாரத்தில் இரண்டு தடவைகள் வைத்தியசேவை நடத்த கோரிக்கை

மானிப்பாய்,

சண்டிலிப்பாய் பகுதியில் வாரத்திற்கு இரண்டு தடவைகள் வைத்திய சேவையினை நடத்துமாறு சனசமூக நிலையத்தினர் கேட்டுள்ளனர்.

சண்டிலிப்பாய் வடக்கு மணிமோகன் சனசமூகத்தின் எல்லைக்குட்பட்ட பகுதியில் சிறுவர்கள், முதியவர்கள் என வைத்தியசாலைகளுக்கு அவசரமாக மருத்துவ உதவி தேவை கருதி செல்லமுடியாமல் பலர் கஷ்டப்பட்டு வருகின்றன எனவும், இதனால் இப்பகுதியில் வைத்திய சேவையினை இரண்டு தடவைகள் நடத்தினால் இவர்களின் சிரமங்களைக் குறைக்கமுடியும் எனவும் சனசமூக நிலையத்தினரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அண்மையில் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் மேற்படி சனசமூக நிலையத்தினரால் வேண்டுகோள் முன்வைக்கப்பட்டது.

## விசேட கல்வி வள நிலையம் அமைப்பு

ஏழாலை,

வலிகாமம் கல்வி வலயத்துக்கு உட்பட்ட இணுவில் மத்திய கல்லூரியின் வளாகத்தில் விசேட கல்வி வள நிலையம் அமைக்கப்பட்டு வருகின்றது.

வலிகாமம் கல்வி வலயப் பிரிவில் விசேட தேவையுடையோருக்கு கல்வியினை வழங்குவதற்கு ஏற்றவாறு இவ்விசேட கல்வி வள நிலையம் அமைக்கப்பட்டு வருகின்றது.

இவ்விசேட கல்வி வள நிலையம் இருபத்தைந்து இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வருகின்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## கணினிப் பயிற்சிக்கு விண்ணப்பம் கோரல்

ஏழாலை,

வலிகாமம் கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவால் மல்லாகம் - மகா வித்தியாலயத்தின் கணினிப் பயிற்சிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இப்பிரதேசத்தில் பாடசாலைக் கல்வியைத் தொடராது இடையில் விட்ட இளைஞர், யுவதிகள் இக் கணினிப் பயிற்சிநெறிக்குப் பயிலுநராக சேரமுடியும் எனவும் சேர விரும்புபவர்கள் கல்லூரி அதிபருடன் தொடர்புகொள்ளமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# முன்கூட்டியே அறிவித்தால் பாதுகாப்பு வழங்க முடியும்

## சுன்னாகம் பொலிஸ் அறிவிப்பு

மானிப்பாய்,

கிராமங்களில் நடைபெறும் விழாக்களுக்கு பொலிஸ் பாதுகாப்புக்கள் தேவைப்படின் ஒரு வாரத்துக்கு முன் அறிவித்தால் பாதுகாப்பு வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கிராமங்களில் நடைபெறும் விழாக்களில் சில வேண்டத்தகாத செயற்பாடுகள் சில சமயங்களில் இடம்பெறுவதனால் விழாக்களில் கலந்துகொள்ளும் மக்கள் பல்வேறு கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர்.

இவ்வாறு ஒரு சில விஷமிகளால் ஏற்படுத்தப்படும் குழப்பங்கள், இடையூறுகள் காரணமாக கிராமங்கள் மட்டுமன்றி நகரங்களில் நடைபெறும் கலை, கலாசார, சமய, களியாட்ட நிகழ்வுகள் என்பன சிறப்புற நடைபெறமுடியாமல் உள்ளன.

எனவே, இந் நிகழ்வுகளில் பொலிஸாரின் பிரசன்னம் இருக்குமாயின் இக்குழப்பங்கள் குறைக்கப்படும். இதனால், மக்கள் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்படும் என சுன்னாகம் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

# போதைப் பொருள் பாவனைக்கு அடிமையானவர்களுக்கு சிகிச்சை

சாவகச்சேரி,

நாட்டில் போதைவஸ்துப் பாவனை பெருகியதால் நாட்டில் குற்றச்செயல்களின் எண்ணிக்கை அதிகரித்துச்செல்கின்றன.

குற்றச்செயல் பெருக்கத்திற்கு போதைவஸ்து, மதுப் பாவனைகளும் ஓர் காரணியாகக் கருதப்படுகின்றது. அதனைக் கட்டுப்படுத்தி போதைவஸ்து பாவனையாளர்களை அதிலிருந்து மீட்டெடுத்து அவர்களையும் சாதாரண மனிதர்களாக சமூகத்தில் நடமாடச் செய்ய தேசிய அபாயகரமான போதைவஸ்துக் கட்டளைச் சட்டத்தின் கீழ் புனர்வாழ்வு மற்றும் சிகிச்சை நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மேற்படி நபர்களை புனர்வாழ்வு மற்றும் சிகிச்சைகளுக்கனுப்ப நீதிவான் நீதிமன்ற நீதிபதிகளுக்கு அதிகாரமுள்ளது. அவ்வகையில், போதைவஸ்துக்கள் மற்றும் அபாயகரமான ஔடதங்களுக்கு அடிமையானவர்களையும் கைதிகளையும் இனம் கண்டு அவர்களை மருத்துவ சிகிச்சை நிலையங்களுக்கும், புனர்வாழ்வு நிலையங்களுக்கும் அனுப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராசா யாழ். சிறைச்சாலை அத்தியட்சருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

தேசிய அபாயகரமான ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் வேண்டுகோளுக்கமைய உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற பதிவாளர் மூலம் உரிய நடவடிக்கைள் மேற்கொள்ளவும் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

நீதிபதிகளின் பயிற்சி மைய தலைவர் நீதி அரசர் என்.கே. உடலகம இது குறித்து மேற்படி கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பாதிக்கப்பட்டவர்களுக்கான தண்டனை என்றில்லாது அவர்களது நல்வாழ்வை நோக்காகக்கொண்டே மேற்படி புனர்வாழ்வும் சிகிச்சையும்அளிக்கப்படவுள்ளது. இதன்மூலம் நாட்டில் குற்றச்செயல்கள் குறைந்து குற்றச்செயல்கள் அற்ற நல்லதோர் சமுதாயம் உருவாக வாய்ப்பு ஏற்படும் என தெரிவிக்கப்படுகிறது.





516 ஆவது இராணுவப்படைப்பிரிவின் ஏற்பாட்டில் கேணல் கேரின் வீரசிங்க தலைமையிலான குழு வவுனியா பொது வைத்தியசாலைக்க இரத்ததானம் செய்வதனையும் வ/கனகராயன் குளம் மகாவித்தியாலய மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகளை வழங்குவதனையும் படங்களில் காணலாம். (படங்கள்:- நெடுங்கேணி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1000 நடன கலைஞர்களுடன் பிரம்மாண்டம்

**விஜய்** நடிப்பில் வேகமாக வளர்ந்துவரும் 'வேலாயுதம்' படத்தின் ஓபினிங் சாங் ரூ.1.25 கோடியில் சுமார் 1,000 நடனக் கலைஞர்களுடன் பிரம்மாண்டமாக எடுக்கப்பட்டுள்ளது.

'காவலன்' படத்திற்கு அடுத்து ஒஸ்கார் பிலிம்ஸ் ரவிச்சந்திரன் தயாரிப்பில் விஜய் நடித்து வரும் படம் 'வேலாயுதம்'. இப்படத்தில் விஜய்க்கு ஜோடியாக ஹன்சிகா மோத்வானியும், ஜெனிலியாவும் நடித்துவருகின்றனர். விஜய்யின் தங்கையாக சரண்யா மோகன் நடிக்கிறார். 'ஜெயம்', 'எம். குமரன் சன் ஒவ் மகாலெட்சுமி' போன்ற படங்களை இயக்கிய டைரக்டர் ராஜா இப்படத்தை இயக்கிவருகிறார்.

இப்படத்தின் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. சமீபத்தில் இப்படத்தின் சண்டைக்காட்சிக்காக ஹொலிவுட் ஸ்டண்ட் மாஸ்டர் டாம் டெல்மரை வைத்து சண்டைக்காட்சியை படமாக்கினர். இந்த சண்டைக் காட்சியை முடித்த கையோடு, படத்தின் ஓபினிங் சாங்கையும் எடுத்துவிட்டார் ராஜா. ''புரியாத சொல்லுக்குள்...'' என்று ஆரம்பிக்கும் இப்படத்தின் ஓபினிங் சாங்கிற்காக விஜய்யுடன் சேர்ந்து சுமார் 1,000 நடனக் கலைஞர்கள் ஆடியுள்ளனர். இந்த ஒரு பாட்டை மட்டும் ரூ. 1.25 கோடியில் மிகப் பிரம்மாண்டமாக எடுத்து இருக்கிறார் டைரக்டர் ராஜா.

இதனிடையே, படத்தின் ஓடியோ எப்போது ரிலீஸாகும் என்று ஏங்கிப் போய் இருக்கின்றனர் ரசிகர்கள். ஏற்கனவே இசையமைப்பாளர் விஜய் ஆன்டனி 4 பாடல்களை கம்போசிங் பண்ணி முடித்துவிட்டார். இதனால், இம்மாதம் ஏப்ரல் 31ஆம் தேதி ஓடியோ ரிலீஸாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. விஜய் பிறந்த நாளன்று படம் ரிலீஸாகிறது






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சோனியாவின் பிறந்தநாள் பார்ட்டி

எப்ப கல்யாணம் என்று கேட்டால் எந்திருச்சு போறீங்களா? என்பது மாதிரியே பார்க்கிறார் சோனி அகர்வால். செல்வராகவனுடன் விவாகரத்து வாங்கிக்கொண்டு பிரிந்துவிட்டாலும் அடுத்த கல்யா ணத்தை பற்றி யோசிக்கவே இல்லையாம் அவர். ஆனால், செல்வா இன்னொரு கல்யாணம் செய்து ள்வார் என்பதனையும் அவர் நினைத்துப் பார்த்ததில்லையாம். எப்படியோ? திருமண பந்தத்திலி ருந்து வெளியே வந்தவர் சினிமா சினிமா என்று தனது முழுக் கவனத்தையும் அந்த திசையில் செலுத்த ம்பித்திருக்கிறார். அதற்கேற்றால் போல் 'வானம்' படத்தில் வெயிட்டான ரோல் கொடுத்திருக்கிறார் ாம். இந்த படத்திற்குப் பின்பு தான் புதுப்படங்களை ஒப்புக்கொள்ளும் எண்ணத்திலிருக்கிறார்.

இதற்கிடையில் ஈ.சி.ஆர். சாலையில் அமைந்திருக்கும் ஒரு பண்ணை வீட்டில் தனக்கு நெருக்கமான சினிமாக்காரர்களுக்குப் பார்ட்டி ஒன்றும் கொடுத்திருக்கிறார். அது இவரது பிறந்த நாள் பார்ட்டி. நட்பைப் புதுப்பித்துக் கொள்ள நமக்கு தெரிந்ததெல் லாம் 'சிங்கிள் டீ' ஆனால், சோனி யாவுக்கு......?


பெருமான்

# விஸ்பரூபத்தில் இருந்து யுவன் விலகல்

மறுபடியும் 'டூ' விட்டுக் கொண்டார்களாம் யுவன் சங்கர் ராஜாவும், செல்வராகவனும். ல் படமான 'துள்ளுவதோ இளமையில்' இருந்து தெலுங்குப் படமான 'ஆடவாரி மாட்ட கு அர்த்தம் வேறு' வரைக்கும் யுவன் இசையில் தான் படங்களை தந்துகொண்டிருந்தார் வா. தித்திக்கும் தேனுக்குள் மிதக்கின்ற மெட்டு இசைத்தவர் யுவனும். ஆனால், இந்த ம்பினேஷன் டமால் ஆனது 'ஆயிரத்தில் ஒருவன்' படத்தை செல்வா இயக்குற நேரத் தான். ஆளாளுக்கு ஆயிரம் காரணங்கள் சொன்னாலும் இன்றைய திகதி வரை இதுபற்றி யயே திறக்கவில்லை இருவரும்.

ழய கோபங்களையெல்லாம் மூட்டைகட்டிப் போட்டுவிட்டு மீண்டும் இணைந்தவர்கள் ரும். இனிவரும் படங்களுக்கு யுவன்தான் இசை என்றார் செல்வா. இவர் இயக்கிவரும் டாம் உலகம்' படத்தில் முதலில் ஒப்பந்தமான யுவன் இப்போது விலகிக்கொண்டாராம். ம்? வழக்கம் போல குழப்பம் தான். இவருக்கு பதிலாக இப்போது சங்கர் மகாதேவன். தக் கிடைத்த தகவல்களின்படி கமல் இயக்கும் 'விஸ்வரூபம்' படத்திற்கு தன்னை விட் ) வேறொரு இசையமைப்பாளரை நாடினாராம் செல்வா. இந்தக் கோபத்தில் தான் இந்த ிருந்தும் யுவன் விலகிக்கொண்டாராம்.

தெய்வத்திருமகன்



# தமிழ் சினிமாவில் சொல்லப்படாத கதை

தமிழ் சினிமாவில் இதுவரை சொல்லப்படாத கதையாக 'தெய்வத்திருமகன்' படம் இருக்கும் என்று உணர்ச்சி பொங்கக் கூறுகிறார் படத்தின் நாயகன் விக்ரம். எப்படிப் பட்ட கதாபாத்திரத்தையும் ஏற்று அதில் திறம்பட நடிப்பவர் சீயான் விக்ரம். 'சேது' படத்தில் தொடங்கி 'காசி','பிதாமகன்','அந்நியன்' என்று வித்தியாசமான கதாபாத்தி ரத்தில் நடித்து பெயர் பெற்றவர். தற்போது விக்ரம் 'தெய்வத்திருமகன்' என்ற படத் தில் நடித்துமுடித்துள்ளார். இப் படத்தில் விக்ரமுடன் அனுஷ்கா, அமலா பால், எம்.எஸ். பாஸ்கர் உள்ளிட்ட பலர் நடித்துள்ளானர். 'மதராசப்பட்டினம்' படத்தை இயக் கிய டைரக்டர் விஜய் இப்படத்தை இயக்கியுள்ளார். ஜி.வி. பிரகாஷ்குமார் இசைய மைத்துள்ளார்.

இப்படத்தின் பத்திரிகையாளர்கள் சந்திப்பு சென்னையில் அண்மையில் நடந்தது. அதில் பேசிய விக்ரம், "இந்தப் படத்திலும் எனக்கு வித்தியாசமான கதாபாத்திரம். இப்படத்தின் கதை தமிழ் சினிமாவில் இதுவரை சொல்லப்படாத கதை. டைரக்டர் விஜய் அருமையாக இப்படத்தை இயக்கி இருக்கிறார். அதேபோல், படத்தின் ஒவ் வொரு காட்சியையும் மிக அருமையாக படமாக்கியுள்ளார் ஒளிப்பதிவாளர் நீரவ் ஷா. ஜி.வி. பிரகாஷின் இசையும் படத்திற்கு பக்கபலமாக அமைந்திருக்கிறது. இவர்கள் தவிர படத்தில் பணியாற்றியிருக்கும் மற்றகலைஞர்களுக்கும் இப்படம் நிச்சயம் நல்ல பெயர் வாங்கித் தரும். இவ்வாறு விக்ரம் கூறினார். இப்படத்தின் ஓடியோவை இம்மாதம் 14ஆம் திகதியும் படத்தை மே மாதமும் ரிலீஸ் செய்யத் திட்டமிட் டுள்ளார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# வருடத்தில் இரண்டு நாட்கள் மட்டும்.....

யாழ். குடாநாட்டின் எல்லைக்குள் உள்ளடக்கப்பட்டுள்ள தீவுகளில் ஒன்றுதான் பாலைதீவு. யாழ்ப்பாணம் சீனோர் துறைமுகத்தலிருந்து சுமார் 16 கடல் மைல் தூரத்திலும், பூநகரி துறைமுகத்திலிருந்து 5 கடல் மைல் தூரத்திலும் இந்த பாலைதீவு அமைந்துள்ளது. யாழ். குடாநாட்டின் மேற்கு கடற்பகுதியில் பல தீவுகள் பரந்து காணப்படுகின்றன. இவற்றில் ஒரு சில தீவுகளில் மட்டுமே மக்கள் நிரந்தமாகக் குடியிருக்கின்றனர். ஏனைய தீவுகள் தொன்றுதொட்டு மீனவர்களின் இளைப்பாறும் இடங்களாகவே இருந்துவருகின்றன.

இந்த வகையில் பாலைதீவும் வட பகுதி மீனவர்கள் இளைப்பாறும் ஓர் இடமாகவே இருந்துள்ளது. நீண்ட நாட்களாக கடலில் நின்று மீன்பிடிக்கும் மீனவர்கள் இத்தீவுக்குச் சென்றுதான் தமது வலைகளை உலர்த்திப் போட்டுவிட்டு இளைப்பாறிக் கொள்வார்கள். இவ்வாறு சென்றுவரும் மீனவர்களில் ஒருவர்தான் இத்தீவில் அந்தோனியாரின் புனித சிலையை வைத்து அதனை ஒரு வணக்க ஸ்தலமாக்கினார். இதன் பின்னர் இங்கு வரும் மீனவர்கள் ஒன்றுசேர்ந்து ஆலயம் ஒன்றை அமைத்து வழிபட்டு வந்தனர். கடற்றொழில் செய்யும் மீனவர்கள் நம்பிக்கையோடு அந்தோனியாரை வணங்கி வந்தனர். இதுவே காலப்போக்கில் ஒரு யாத்திரைத் தலமாக மாறிக்கொண்டது.

வருடத்தில் மார்ச் மாதம் 27 ஆம் திகதியில் மீனவர்கள் தமது குடும்பத்துடன் படகில் பாலைதீவுக்குச் சென்று அந்தோனியாருக்கு பெருவிழா எடுத்து கொண்டாடி வருவது வழக்கமாகவுள்ளது.

இலங்கையில் ஏற்பட்ட போர்ச் சூழலுக்க முன்பெல்லாம் இத் தீவுக்கு மக்கள், மீனவர்கள் எத்தடையில்லாமல் பயமின்றி போய்வரலாம். ஆனால், இப்போது அந்த நிலைமை இல்லை. ஒரு சில வருடங்கள் நிரந்தரமாகவே இத் தீவுக்கு மக்கள் செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது. இப்போதும் கூட அந்தோனியார் ஆலயத்தின் பெருவிழாவுக்கு முன்னதாகவுள்ள ஒரு நாளும் பெருவிழா அன்றுமே மக்கள் செல்வதற்கு இலங்கைக் கடற்படை அனுமதி அளிக்கின்றது.

2006 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இப் பாலைதீவு இலங்கை கடற்படையின் முழுக்கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுவிட்டது. அதன் பின்னர் பாதுகாப்பு அச்சுறுத்தலைக் காரணம் காட்டி இத்தீவுக்குள் மீனவர்களோ மக்களோ சென்று வருவதற்கு அனுமதிக்கப்படவில்லை. வருடத்தில் 2 நாட்கள் மட்டுமே இத் தீவில் மக்கள் கூட்டத்தைக் காணலாம்.



அவ்வாறே இந்த வருடம் கடந்த மாதம் 26ஆம் திகதி 27ஆம் திகதிகளில் கிறிஸ்தவர்கள் மக்கள் குடும்பம் குடும்பமாக இத்தீவில் ஒன்றுகூடினார்கள். சுட்டெரிக்கும் வெயிலையும் பொருட்படுத்தாமல் இத் தீவிலிருக்கும் அந்தோனியாருக்கு விழா எடுப்பதற்காக அந்தோனியார் பக்தர்கள் பலர் அணி அணியாகத் திரண்டுவந்திருந்தனர்.

யாழ்ப்பாணம், மன்னார், முழங்காவில், பூநகரி போன்ற மக்கள் படகின் மூலம் இத்தீவுக்கு வந்திருந்தனர். வழமையான திருவிழாக்களைப் போன்றே இம் முறையும் அந்தோனியார் திருவிழா யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

இம் முறையே ஆயரின் பாலை தீவுக்கான முதற் பயணமாக அமைந்திருந்தது. சென்ற வருடங்களை விட இம் முறையே மக்கள் அதிகமாகத் திரண்டு வந்திருந்தனர். சுமார் 4 ஆயிரத்துக்கும் அதிகமாக பக்தர்கள் குடும்பமாகக் கூடியிருந்தார்கள்.

பாலைதீவின் மூன்றில் ஒரு பகுதியே மக்கள் நடமாற்றத்திற்கு அனுமதிப்பட்டிருந்தது. தீவின் கிழக்குப் பகுதியிலேயே மக்கள் கூடாரங்கள் அமைந்திருந்தனர். திருவிழாக் கடைகளும் இப் பகுதியிலேயே பரவிக்காணப்பட்டன. பல வருடங்களாக இந்த தீவுக்கு வரமுடியாமல் இருந்தவர்கள் இம்முறை வரக் கிடைத்தமையிட்டு பெரும் மகிழ்ச்சியடைந்தமையைக் காணக் கூடியதாக இருந்தது.

நீண்ட கால வரலாற்றுப் பாரம்பரியத்தைக்கொண்ட இத்தீவில் ஒல்லாந்தர் காலத்தில் கருங்கற்களால் கட்டப்பட்ட வெளிச்சவீடு மக்கள் பார்க்கும் பகுதியில் இருக்கின்றது. அதனருகே தொலைத்தொடர்புக் கோபுரம் ஒன்றும் உள்ளது.

இலங்கை கிறிஸ்தவ மக்களின் யாத்திரைத் தலங்களில் ஒன்றாக விளங்கும் பாலைதீவில் பௌத்த வழிபாட்டுத் ஸ்தலம் ஒன்று கட்டப்பட்டிருப்பது அங்கு சென்ற மக்களை ஆச்சரியத்திற்கு உள்ளாக்கியது. ஆலயத்திலிருந்து 100 மீற்றர் தூரத்தில் இந்த ஸ்தலம் அமைக்கப்பட்டிருக்கின்றமை தமிழ் மக்கள் மத்தியில் ஒரு அச்சத்தை உண்டுபண்ணியது. இனிவரும் காலங்களில் பாலைதீவு அந்தோனியார் யாத்திரைத் தலம் என்னவாகுமோ என்ற பயம் அவர்களின் மனதில் மனதில் எழுந்தது.

விடுதலைப் புலிகளுடனான இறுதிக் கட்டப் போர் முடிவடைந்த பின்னரே இப் பௌத்த மத வழிபாட்டுத்தலமும் புத்தர் சிலையும் இங்கு நிறுவப்பட்டுள்ளன.அடுத்த வருடம் இத் தீவிலிருந்து கடற்படை முற்றுமுழுதாக வெளியேறிமக்கள் நடமாட்டத்திற்கு விடப்படும் என கடற்படை அதிகாரி யாழ். ஆயரிடம் தெரிவித்துள்ளராம். அவ்வாறே படையினரினர் வெளியேறுவார்களாயின் இந்த பௌத்த தலம் என்னவாகும்?.... இந்த தீவுக்குச் செல்ல எந்த இன மக்கள் அனுமதிக்கப்படுவார்கள்? என்ற பல பலமான கேள்விகள் அங்கு சென்றுவந்த மக்கள் மத்தியில் எழுகின்றது.

✱ அஸ்வின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவலுப் பெறாது போன ஒப்பந்தங்கள் (பகுதி நான்கு)

*(சென்ற வாரத் தொடர்ச்சி...)*

அரச ஊடகங்கள் சில இனத்துவேசக் கருத்துக்களை மக்கள் மயப்படுத்துவதில் பெரும் பங்கை வகித்தன. இந்த எதிர்ப்புக்கு அஞ்சி பின்வாங்கிய பிரதமர் யாழ்ப்பாணத்தில் தான் அவ்வாறு தமிழுக்கும் சம உரிமையுண்டு என கூறவில்லை என அடித்துச் சொன்னார். யாழ்ப்பாணத்தில் புளகாங்கிதம் அடைந்திருந்த கொழும்பு வாழ் தீவக வர்த்தகர்கள் அது புலுடா, பம்மாத்து என்பதைப் பின்னர் தான் காலங்கடந்து புரிந்துகொண்டார்கள். சுயநலம் முனைப்புப் பெறும்போது அறிவு மந்தகதி அடைகின்றது.

இதற்கிடையில் புத்தளம் மாவட்டம் 'மாதம்பை' என்ற இடத்தில் இடம்பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வருடாந்த மாகாநாட்டில் (1954ஆம் ஆண்டு) சிங்கள மொழியே இலங்கையின் அரச கரும மொழியாக்கப்பட வேண்டும் என்ற தீர்மானம் பலத்த கரகோசத்தின் மத்தியில் நிறைவேற்றப்பட்டது. இத் தீர்மானத்தை எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்காவே முன்மொழிந்தார். இதே காலப் பகுதியில் (1952) இந்தியாவின் ஆட்சிமொழியாக இந்தி பிரகடனப்படுத்தப்பட்டது. இது தமிழகத்தில் தி.மு.க. தலைமையில் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுக்க வழிவகுத்தது.

இலங்கையின் சிங்கள மொழி ஆட்சி மொழியாக்கப்பட வேண்டும் என்பதை அக்காலத்தில் ஏ.பி. ஜெயசூரியா மற்றும் கொழும்பு ஆனந்தாக் கல்லூரி அதிபர் மெத்தானந்தா, ஆர்.ஜி. சேனநாயக்கா, ஐ.எம்.ஆர்.ஏ. ஈரியகொல்லை போன்றோர் தீவிரமாக முன்னெடுத்தனர். இலங்கைத் தமிழரசுக் கட்சி தமிழுக்கும் சம அந்தஸ்துக் கோரி தீர்மானங்களை நிறைவேற்றியது. தமிழகத்தில் ஏற்பட்ட தமிழ்த் தேசியவாத விழிப்புணர்வு என்பது வட இந்தியப் பிரமாணங்களுக்கு எதிரான ஒரு கருத்து நிலைப்பாட்டை (Concept) கொண்டிருந்தது. இலங்கையிலோ அது பேரினவாதத்திற்கு எதிரான கருத்து நிலைப்பாட்டைக் கொண்டிருந்தது.

1954 இல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் மாதம்பை மாநாட்டில் சிங்களம் மட்டும் அரச மொழியாக்கப்பட வேண்டும் என்ற தீர்மானத்தை நிறைவேற்றிய பின்னர் 1955 பெப்ரவரி மாதம் 18ஆம் திகதி ஐக்கிய தேசியக் கட்சியினர் களனியில் இடம்பெற்ற தேசிய மாநாட்டில் இலங்கை முழுவதும் சிங்களம் மட்டுமே அரச கரும மொழியாக்கப்பட வேண்டும் என்ற தீர்மானத்தை நிறைவேற்றினார்கள். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சீறும் நாகம் என்பதைப் புரிந்துகொள்ளும் தமிழர்கள் ஐக்கிய தேசியக் கட்சி பச்சைப்புல்லுக்குள் படுத்துறங்கும் இரத்தப்புடையன் என்பதை நிதர்சனமாகக் கண்டார்கள். இதன் விளைவாக ஐக்கிய தேசியக் கட்சியுடன் தம்மை இணைத்துக்கொண்டிருந்த சு. நடேசுப்பிள்ளை, எஸ்.எம். இராசமாணிக்கம் மற்றும் மாணிக்கவாசகர் போன்றோர் அக்கட்சியை விட்டு வெளியேறினார்கள். காலஞ்சென்ற ஜி.ஜி. பொன்னம்பலம் கைத்தொழில் மீன்பிடி மந்திரி பதவியில் இருந்து பிரதமர் சேர். ஜோன் கொத்தலாவலையால் வெளியேற்றப்பட்டார். இது நம்பிக்கெட்ட தமிழனின் இன்னொரு அத்தியாயம்.

திருவாளர்கள் கே.டபிள்யூ. தேவநாயகம் மற்றும் எதிர்மன்னசிங்கம் போன்றோர் தொடர்ந்தும் ஐக்கிய தேசியக் கட்சியிலேயே அங்க ம் வகித்தனர். 1952 ஆம் ஆண்டு இலங்கையில் இடம்பெற்ற பொதுத் தேர்தலில் ஒரு ஆசனத்தைக் கூட பெறமுடியால் போன இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சார்பாக சௌமிய மூர்த்தி கொண்டமானும் அவரோடு எஸ். வைத்திலிங்கம் என்பவரும் இலங்கைப் பாராளுமன்றத்தில் நியமன அங்கத்தவர்களாக நியமிக்கப்பட்டிருந்தார்கள்.

நாடற்றோர் என வர்ணிக்கப்பட்ட மலையகத் தமிழ் மக்களைப் பிரதிநித்துவதிப் படுத்திய அவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் மொழி பற்றிய தீர்மானத்தால் இலங்கை அரசியலில் கையறு நிலைக்கத் தள்ளப்பட்டார்கள்.

*(தொடரும்...)*

## சட்டமும் சமூகமும் 22






சட்டம் தொடர்பான உங்கள் சந்தேகங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்

**அனுப்பவேண்டிய முகவரி**
**யாழ் ஓசை**
**வீரகேசரி கிளைக் காரியாலயம்,**
117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

# பதிவாளரும் இடைத்தரகரும்

யாழ். மாவட்ட செயலகத்தில் உள்ள பதிவாளர் அலுவலகத்தில் சான்றிதழ்களின் பிரதிகளைப் பெறுவதில் பொது மக்கள் பெரும் சிரமங்களை எதர்நோக்கி வருகின்றார்கள்.

இவ் அலுவலகத்தில் நெடுந்தீவு, அனலைதீவு, ஊர்காவற்றுறை, காரைநகர், மருதங்கேணி கிழக்கு பதிவாளர் பிரிவுகளுக்குரிய பதிவுப் புத்தங்களில் இருந்து பிரதிகள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன. அத்துடன் மாவட்ட காணி பதிவகத்தில் காணி உறுதிகளின் பிரதிகளும் வழங்கப்படுகின்றன.

குறிப்பிட்ட பதவிளாளர் பிரிவுக்குரிய பிறப்பு, இறப்பு மற்றும் திருமணச் சான்றிதழ்களின் பிரதிகளை பெற வரும் பொது மக்கள் மாவட்ட செயலக வாயிலுக்கு அருகிலும் மற்றும் உள்ளேயும் நிற்கும் சிலர் சான்றிதழ் பெறும் படிவம் நிரப்பித் தருவதாகக் கூறி அவர்களிடம் பணத்தை வசூலிக்கின்றார்கள்.

இதனால், இச் சான்றிதழ்களைப் பெறவரும் பொது மக்கள் அதிக பணத்தினை இழக்கவேண்டிய நிலை ஏற்படுகின்றது.

இங்கு படிவத்தை நிரப்பித்தருகிறோம் என்று அழைக்கும் இவ் இடைத்தரகர்கள் ஒரு படிவம் நிரப்புவதற்காக முப்பது ரூபா எனவும் ஒரு பிரதியை பெற பதிவு இலக்கம் இருப்பின் முத்திரைக்கு முப்பது ரூபா, கடித உறை மற்றும் முத்திரைக்கு என பத்து ரூபாவும் என பணத்தினை பொது மக்களிடம் வசூலிக்கின்றார்கள். இத்துடன் விரைவாக சான்றிதழ்களை கிடைக்கச் செய்ய வேண்டுமாயின் அதற்கு மேலதிகமாக இருநூறு முதல் ஐந்நூறு ரூபா வரை அறவிட்டுக் கொள்கிறார்கள்.

தூர இடங்களில் இருந்துவரும் பொது மக்கள் செயலக வாயிலில் கதிரை போட்டு அமர்ந்திருக்கும் இவ் இடைத்தரகர் கும்பலிடம் சிக்கி ஒரு படிவம் நிரப்ப மட்டும் நூறு ரூபா கூட செலுத்தவேண்டியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பதிவாளர் திணைக்களத்தின் நடைமுறையின் படி இறப்பு, பிறப்பு மற்றும் திருமணச்சான்றிதழ்களின் பதிவு இலக்கம் தெரிந்தால் ஒரு பிரதியைப் பெற இருபத்தைந்து ரூபா முத்திரையும் பதிவு இலக்கம் தெரியாத மூன்று மாத தேடுதலுக்கு ஒரு பிரதி பெற ஐம்பது ரூபா முத்திரையும் ஒரு வருட தேடுதலுக்கு நூறு ரூபா முத்திரையும் மொழிபெயர்ப்புச் சான்றிதழ் ஒன்றுக்கு நூறு ரூபா முத்திரையும் வழங்கப்படவேண்டும்.

இந்நிலமை இவ்வாறு இருக்க சாதாரண பொதுமக்கள் இருபத்தைந்து ரூபாவுடன் பெறக்கூடிய ஒரு சான்றிதழ் பிரதியை அறுபது ரூபாவுக்கு மேல் செலவு செய்யும் நிலை காணப்படுகின்றது.

இவ் இடைத்தரகர்கள் படிவம் நிரப்புவதற்கு அறவிடும் கட்டணம் ஆளுக்கு ஆள் வேறுபடுகின்றது.

இவ் இடைத்தரகர்களில் ஒரு தொகுதியினர் மாவட்ட செயலக வாயிலுக்கு அருகில் கச்சேரி - நல்லூர் வீதி ஓரத்தில் அலுவலகத்தில் அமர்ந்திருப்பதுடன் விண்ணப்பம் ஏற்கும் கருமபீடத்திற்கு முன்னால் நின்றும் இச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

இவர்களின் செயற்பாடுகளால் பெரிதும் பாதிக்கப்படுவது முதன் முதலாக மாவட்ட செயலகத்திற்கு சான்றிதழ் பெறவரும் பொதுமக்களே ஆகும்.

இவ்வாறு பொது மக்கள் பாதிக்கப்படுவது தடுக்கப்பட வேண்டிய விடயமாகக் காணப்படுகின்றது.

இச்செயற்பாடுகளில் ஈடுபடுவோர் பொதுமக்களிடம் கட்டணம் அறவிடுவது முற்றாக நிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அத்துடன், விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்த முடியாதவர்களுக்கு படிவம் நிரப்புவதற்கு ஏற்றவாறு குறிப்பிட்ட அலுவலகத்தால் பயிலுநர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்பது பொதுமக்கள் பலரினது எதிர்பார்ப்பாகக் காணப்படுகின்றது.

சான்றிதழ்களைப் பெறவரும் பொதுமக்கள் பாதிக்கப்படாது அவர்களின் நலனை பாதுகாக்க அதிகாரிகள் முன்வர வேண்டியது காலத்தின் தேவையாகும்.

• ஞானத்தமிழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப் போட்டி 22

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | ■ | 06 | 07 |
| 08 | ■ | 09 | 10 | 11 | 12 | ■ | 13 |
| 14 | 15 | 16 | 17 | ■ | 18 | 19 | 20 |
| 21 | 22 | ■ | 23 | 24 | 25 | 26 | ■ |
| ■ | 27 | 28 | 29 | 30 | ■ | 31 | 32 |
| 33 | ■ | 34 | 35 | 36 | 37 | ■ | 38 |
| 39 | 40 | ■ | 41 | ■ | ■ | 42 | 43 |
| 44 | 45 | 46 | ■ | 47 | 48 | 49 | 50 |

### இடமிருந்து வலம்

1. பிராமணர்
6. பூக்காத தாவரம்
9. முகத்திற்கு பூசுவது (குழம்பியுள்ளது)
14. கூட்டாக சேர்ந்த செயற்படுவது
18. புத்திரன்
21. ஆகாயம் (திரும்பியுள்ளது)
23. ஒரு விளையாட்டு
27. மண் வகைகளில் ஒன்று
31. காலின் அங்கம்
34. ஆமி
39. துவியின் உடை
42. பற்று (திரும்பியுள்ளது)
44. சிலம்பரசன்
47. இந்திய கிரிக்கெட் வீரன்

### மேலிருந்து கீழ்

1. கோன்
3. வாயிற்காவலன் (குழம்பியுள்ளது)
4. காணிக்கை (குழம்பியுள்ளது)
5. சுவாலை (முதல் எழுத்தின்றி குழ்பியுள்ளது)
7. திருநீலகண்டன்
12. திருமணமாகாத கன்னிப்பெண் (திரும்பியுள்ளது)
15. மரத்தளபாடங்களின் ஒன்று (குளம்பியுள்ளது)
19. சிறியதானாலும் காரம் பெரிது
24. பாண்டவரின் தந்தை (தலைகீழ்)
28. சுவை
32. இயற்கை மருந்துப் பொருள்
33. ஒரு மாதம்
40. பாத்திரம் கழுவும் சவர்க்காரம்
42. பருகு (தலைகீழ்)

### குறுக்கெழுத்துப் போட்டி 20க்கான விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| உ | த | ய | ன் | ■ | த | ம் | ச |
| வ | லை | ■ | உ | த | வி | ■ | ந் |
| ர் | ய | வ | ■ | வி | டு | க | தை |
| ப் | ணை | பு | அ | ■ | ■ | றி | ■ |
| பு | ■ | ன | வ | க | ம் | ■ | டு |
| ■ | வ | ம் | ச | ம் | ■ | ன் | ஏ |
| ம | ண் | ■ | ர | பி | ம் | பு | ■ |
| க | டி | த | ம் | ■ | நா | த | ம் |

## பாராட்டுப் பெறும் அதிஷ்டசாலிகள்

1. **திருமதி. பிரவீனா அரிகரசர்மா**
மனோன்மணி அம்மன் கோவில்,
5ஆம் வட்டாரம், அனலைதீவு.
2. **றோ.ம. தயானந்தன்**
15ஆம் மைல் கல்,
உடுப்பிட்டி.
3. **டி.ஆர். ஆன் டிலுக்ஷி**
11, சிவானந்தா வீதி,
கொழும்பு-15.

**குறுக்கெழுத்துப் போட்டி 22க்கான விடைகளை எழுதி ஒரு வாரத்திற்குள் எமக்குக் கிடைக்கக் கூடியதாக தபால் அட்டையில் ஒட்டி அனுப்பிவைக்கவும்.**

**அனுப்பவேண்டிய முகவரி**
குறுக்கெழுத்துப் போட்டி
'யாழ் ஓசை' வீரகேசரி கிளைக்காரியாலயம்,
117, புகையிரத நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

பாராட்டுப்பெறும் முதல் மூன்று அதிஷ்டசாலிகளின் பெயர்கள் பிரசுரிக்கப்படும்.




"ஒரு முழம் இட்லி தாங்க"
"என்ன ஒரு முழம் இட்லியா?"
"ஆமாம், நீங்கதானே சொன்னீங்க இந்த ஓட்டல் இட்லி மல்லிகைப் பூ மாதிரி இருக்கும் என்று"




"தம்பி, உன் வயசு என்ன?"
"பள்ளிக்கூடத்தில் ஐந்து வயசு, பஸ்ஸிலே மூணு வயசு, வீட்டிலே ஆறு வயசு"




"உங்க ஆபீஸ் டைப்பிஸ்ட் ரமாவோடு சினிமாவுக்குப் போனீங்களாமே?"
"தப்பா நெனச்சுடாதே ஆட்டோ, டிக்கட், கூல் டிரிங் இதுக்கெல்லாம் அவ தான் செலவழிச்சா!"
"அதானே பார்த்தேன் நீங்கதான் ஊதாரித்தனமாக செலவு பண்ணீட்டீங்களோ என்று"




"அப்பா தந்தை அறிவாளியா? மகன் அறிவாளியா?"
"அதிலென்ன சந்தேகம், தந்தைதான் அறிவாளி!"
"அப்படியென்றால் ஏன் மார்க்கோனியின் தந்தை ரேடியோவை கண்டுபிடிக்கவில்லையப்பா?"




"பட்டப் பகல்லே ஏன் பேங்கிலே கொள்ளையடிச்சே?"
"அங்கு ஊழியர்கள் தூங்கும் நேரம் அது தாங்க!"





டாக்டர் : ஆச்சரியமா இருக்கே, பேஷண்டுக்கு ஆபரேஷன் பெயிலானபோதும் 'பல்ஸ்' நன்றாக வேலை செய்யுதே?
நர்ஸ் : அடப் போங்க டாக்டர் இது என்னுடைய கை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடம் மாறும் யாழ்ப்பாணக் கலாசாரம்

உலகப் போக்குகளில் பல வேறு மாறுதல்கள் நிகழ்ந்துவருகின்றன. மனிதங்களைத் தொலைத்துவிட்டு அல்லது உதறி எறிந்துவிட்டு குறுகிய வாழ்வியற் பரபரப்புக்குள் எமது வாழ்க்கையை ஓட்டிவரும் இவ்வேளை மனிதநேயம், மானிட நேசிப்பு, சகிப்புத்தன்மை என்பவை பேச்சுக்குரிய பொருட்களாகிப் போய்விட்டன. பெற்றோர் - பிள்ளைகளுக்கிடையில் சகோதரர்களுக்கு இடையில், சமூகத்திற்குள் இனங்களுக்கிடையில், நாடுகளுக்கிடையில் இடம்பெறும் உட்பூசல்கள், சண்டைகள், முரண்பாடுகள் என வலுவடைந்து வரும் சூழலில் மனிதப் பெறுமானம் கேள்விக்குரியதாகி விட்டது.

அண்மையில் நான் அவதானித்த சம்பவம் ஒன்று என் மனதை நிறையவே காயப்படுத்தியது. சம்பவம் சிறியதாக இருக்கலாம். ஆனால், அதில் பொதிந்திருந்த அர்த்தங்கள் ஆழமானவை; பாரதூரமானவை. குறிப்பிட்ட ஒரு மதத்தைச் சேர்ந்த புனிதஸ்தலம் ஒன்றின் பராமரிப்பாளர் ஒருவர் வழிபடவரும் சிறுவர்களுடன் தகாத உறவுகளில் ஈடுபடுவதாக அறிந்து என் மனம் ரொம்பவே வேதனைப்பட்டது. ஒரு முறை சிறுவன் ஒருவனுடன் தகாத முறையில் நடக்கமுற்பட்ட வேளை அந்நபர் பொது மக்களால் கடுமையான முறையில் எச்சரிக்கப்பட்டதாகவும் தெரிகிறது. இதற்குப் பின்னும் இப்பத்தியை நீட்ட விரும்பவில்லை.



மதங்களானவை மனிதனை நல்வழிப் பாதையில் இட்டுச் செல்லும் சமூக நிறுவனங்கள். மக்களை தவறான பாதைக்கு இட்டுச் செல்ல முயலக்கூடாது. தற்போது மதங்களின் பெயரால் நடந்தேறும் பல சம்பவங்கள் கவலைக்குரியவை. கண்டிக்கத்தக்கவை. எந்தநோக்கத்திற்காக மதங்கள் உருவானவையோ அந்த நோக்கங்களையும் மறந்து - துறந்து செல்வது துரதிஷ்டமானது.

அன்பு, கருணை, இரக்கம், வாய்மை, ஜீவ காருண்யம், மனித நேயம் முதலிய பல ஒழுக்கவிழுமியங்களைப் போதிக்கவேண்டிய மதங்கள் மனிதர்களைத் தவறான பாதைக்கு அழைத்துச்செல்லமுயலக் கூடாது. தற்போது மேற்சொன்ன ஒழுக்க விழுமியப் பண்புகள் எம்மிடையே மருந்துக்கேனும் இல்லை. கொலை, கொள்ளை, பொய், வஞ்சகம், சூது, மது - மாது, துர்ப்பழக்கங்கள் முதலிய அவக் குணங்கள் எம் சமூகத்தில் தலைவிரித்தாடி வரும் இந்நிலையில் இதற்கு முரணாக இருக்கும் ஒழுக்கவிழுமியப் பண்புகளை எம்மிடையே இருக்கும் என எதிர்பார்க்கமுடியாது தான். இந்த நிலையில் தான் மதங்களின் தேவை பெரிதும் வேண்டப்படுகின்றது. ஆனால், மதங்களுக்கு பற்றுக்கோடாகவிருக்கும் மதவாதிகள் - மிதவாதிகளாக மாறிவிட்டனர்.

மதங்களின் - கடவுளரின் தீவிர விசுவாசிகள் என்று தம்மை தாமே கூறிக் கொண்டு மக்களை நல்வழிப்படுத்தப் புறப்பட்டுள்ள கபட வேடதாரிகளின் முகத்திரை கிழிக்கப்படவேண்டும். மக்களை நல்வழிப்படுத்தப் புறப்படும் மதப் பெரியார்கள் தமது உடலாலும் உள்ளத்தாலும் தூய்மையாக இருத்தல் அவசியம். ஆனால் மதவாதிகள் தம்மைப் புனிதர்களாகக் காட்ட முயல்வது அபத்தமானது.

எனவே தான் இன்றைய காலகட்டத்தில் மதத்தின் தேவை - சேவை பெரிதும் உணரப்படும் இந்நிலையில் மதங்களை பற்றுக்கோடாகக் கொண்டு அவை போதிக்கும் உயர்ந்த ஒழுக்கவிழுமியப் பண்புகளைக் கடைப்பிடிக்க முன்வர வேண்டும். அப்போது தான் நாட்டில் தர்மம், நீதி நிச்சயம் ஓரளவுக்கேனும் இருக்கும். இல்லையேல் எங்கும் எதிலும் வன்முறை, அதர்மம், அநியாயம் என்பவையே தாண்டவமாடும்.

யாழ். குடாநாட்டு இளைஞர்களிடையே வன்முறைக் கலாசாரம், பாலியல் வக்கிர உணர்வுகள், பெரியோர்களை கனம் பண்ணாமை முதலிய பல காட்டுமிராண்டித் தனங்கள் தலையெடுத்துள்ளன. இவர்களின் செயற்பாடுகளால் யாழ். குடாநாடே இன்று குட்டிச் சுவராகப்போயுள்ளது.

யாழ்ப்பாண கலாசாரம் கந்தபுராண கலாசாரம் என்ற நிலை மாறி யாழ். குடாநாடு இன்று அதன் பசுமையை இழந்து வருவது சமூக ஆர்வலர்கள் மத்தியில் கவலையை ஏற்படுத்தி வருகிறது.

யாழ்ப்பாண மக்களால் பெருமையுடன் கட்டிகாக்கப்பட்டு வந்த கல்வித்துறை இன்று அதலபாதாளத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. கல்வித்துறையில் கூட ஊழல்கள், மலினங்கள் புகுந்துவிட்டதனால் கல்வித்துறை ஆட்டம் கண்டுவருகிறது.

முன்னர் இலங்கையிலே கல்வித்துறையில் ஒப்பீட்டு ரீதியில் சிறந்த மாவட்டமாக யாழ். மாவட்டமே திகழ்ந்தது. ஆனால், இன்று தென்னிலங்கை மாவட்டங்கள் முன்னோக்கிச் செல்ல யாழ். மாவட்டம் பல இடங்கள் பின்னோக்கி நகர்ந்துள்ளது. தற்போதைய நிலையில் கல்வித்துறை வியாபார நோக்கமாகி விட்டதனால் அதன் செழுமையை நாம் பூரணமாக அனுபவிக்க முடியாத நிலை.

ஆசிரியர்களும் சரி, மாணவர்களும் சரி குடாநாட்டின் கல்வித்துறை வீழ்ச்சிக்கு ஏதோ ஒரு வகையில் பெறுப்புக் கூறவேண்டியவர்களே. தற்போது தனியார் கல்வி நிலையங்கள் புற்றீசல்கள் போல் பெருக்கமடைந்து வரும் பின்னணியில் அவை தரமான கல்வியை மாணவர்களுக்கு வழங்குகின்றனவா? தனியார் கல்வி நிலையங்களில் கற்பிக்கும் அத்தனை ஆசிரியர்களும் சிறந்த பயிற்சி பெற்ற கற்பிக்கும் தகுதியுடையவர்களா? என்பது சிந்தனைக்குரியது. எது எப்படியோ இன்றைய யாழ். குடாநாட்டின் கல்வித்தர வீழ்ச்சி குறித்து சிந்தித்து காத்திரமான முடிவை எடுப்பதற்கு கல்விமான்கள் முன்வரவேண்டும்.

**முன்னர் இலங்கையிலே கல்வித்துறையில் ஒப்பீட்டு ரீதியில் சிறந்த மாவட்டமாக யாழ். மாவட்டமே திகழ்ந்தது. ஆனால் இன்று தென்னிலங்கை மாவட்டங்கள் முன்னோக்கிச் செல்ல யாழ். மாவட்டம் பல இடங்கள் பின்னோக்கி நகர்ந்துள்ளது. தற்போதைய நிலையில் கல்வித்துறை வியாபார நோக்கமாகிவிட்டதனால் அதன் செழுமையை நாம் பூரணமாக அனுபவிக்க முடியாத நிலை.**

முடிவாக, உலக அரங்கில் மனிதன் தன் மூளையின் பலத்தினாலும் சிந்திக்கும் ஆற்றலாலும் இப்புவியில் ஆற்றிவரும் சாதனைகள் பல. அறிவியலின் வளர்ச்சியினால் இப்பிரபஞ்சமே திணறிவருகையில் கட்டுப்படுத்த முடியாத அதன் வேகம் உலக மாந்தர்களின் ஆளுமையை மாற்றிவருகிறது. இயற்கை நியதிகளை மாற்றி பேராசையும் மற்றவரை அடக்கியாளும் மமதையும் தரணி எங்கும் வியாபித்துள்ளது.

மும்மூர்த்திகளின் பணியை இன்று மனிதன் ஏற்றுவிட்டான். படைத்தல், காத்தல், அழித்தல்என்ற முத்தொழிலையும் ஆற்றும் திறன் படைத்துவிட்டான். திரும்பிய இடம் எங்கும் பகைமையின் இருப்பிடம். குடும்பத்திலும் சரி, சமூகத்திலும் சரி, அலுவலங்களிலும் சரி, எங்கும் மனிதனை மனிதன் வதைக்கும் கைங்கரியம் தலைதூக்கியுள்ளது. எளியாரை வலியார் ஒறுக்கும் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன. மனிதர்களுக்கிடையில் புரிதலும் சகிப்புத்தன்மையும் அன்பும் அருகிவருகின்றன. எனவேதான் மனித உணர்வுகளைப் புரிந்துகொள்ளும் ஆற்றலும் அறிவும் அனுசரணையும் மானுட வளர்ச்சியை ஏற்படுத்தவில்லை என்றால் குற்றம் எம்மிடையே இருக்கிறதே தவிர அறிவியலில் இல்லை என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

*உதிஷ்டிரன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் விளையாட்டு செய்திகள்

# சண்டிலிப்பாய் கல்விக் கோட்ட பாடசாலை அணிகளின் முடிவுகள்

மானிப்பாய்,

சண்டிலிப்பாய் கோட்டத்தால் நடத்தப்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகளின் குழுநிலைப் போட்டிகளின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

அவற்றின் விபரம் வருமாறு:-

ஆண்களுக்கான மென்பந்து போட்டி

முதலாமிடம்- மானிப்பாய் இந்துக் கல்லூரி, இரண்டாமிடம்- நவாலி மகா வித்தியாலயம், மூன்றாமிடம்- சில்லாலை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை

பெண்களுக்கான மென்பந்துப் போட்டி

முதலாமிடம்- மானிப்பாய் மகளிர் கல்லூரி, இரண்டாமிடம்- பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி, மூன்றாமிடம்- சென். ஆன்ஸ் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை.

கரப்பந்தாட்டம் (15 வயது)

ஆண்கள் பிரிவு : முதலாமிடம்- இளவாலை சென். ஹென்றியரசர் கல்லூரி, இரண்டாமிடம் - மாதகல் சென். ஜோசப் மகா வித்தியாலயம், மூன்றாமிடம் - மானிப்பாய் இந்துக் கல்லூரி.

பெண்கள் பிரிவு : முதலாமிடம்- பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி, இரண்டாமிடம்- இளவாலை கன்னியர் மடம் மகா வித்தியாலயம், மூன்றாமிடம் - சண்டிலிப்பாய் இந்து கல்லூரி.

17 வயது ஆண்கள் பிரிவு: முதலாமிடம் - சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, இரண்டாமிடம் - மானிப்பாய் இந்துக் கல்லூரி, மூன்றாமிடம் - இளவாலை சென். ஹென்றியரசர் மகா வித்தியாலயம்.

17 வயது பெண்கள் பிரிவு : முதலாமிடம் - சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, இரண்டாமிடம் - பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி, மூன்றாமிடம் - சென். ஜோசப் மகா வித்தியாலயம்.

19 வயது ஆண்கள் பிரிவு : முதலாமிடம் - சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, இரண்டாமிடம் - மாதகல் சென். ஜோசப் கல்லூரி, மூன்றாமிடம் - மானிப்பாய் இந்துக் கல்லூரி.

19 வயது பெண்கள் பிரிவு : முதலாமிடம் - பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி, இரண்டாமிடம் - சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, மூன்றாமிடம் - இளவாலை கன்னியர் மடம் வித்தியாலயம்.

வலைப்பந்தாட்டம் : முதலாமிடம் - சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, இரண்டாமிடம் - பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி, மூன்றாமிடம் - இளவாலை கன்னியர் மடம் வித்தியாலயம்.

# மாவட்ட உதைபந்தாட்டப் போட்டியில் மகாஜனா, சாவகச்சேரி இந்து சம்பியன்

தெல்லிப்பழை,

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கிடையில் 17 வயதுப் பிரிவு ஆண், பெண் அணிகளுக்கான உதைபந்தாட்ட இறுதிப் போட்டி யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் ஆண்கள் பிரிவில் தெல்லிப்பழை - மகாஜனக் கல்லூரியும் பெண்கள் பிரிவில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியும் சம்பியனாகின.

ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் தெல்லிப்பழை - மகாஜனக் கல்லூரி அணியை எதிர்த்து ஊர்காவற்றுறை - சென். அன்ரனிஸ் கல்லூரி அணி மோதியது. இப் போட்டியில் தெல்லிப்பழை - மகாஜனக் கல்லூரி அணி சென். அன்ரனிஸ் கல்லூரி அணியை 2:1 என்ற கோல் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியனானது.

பெண்களுக்கான இறுதியாட்டத்தில் சாவகச்சேரி இந்துக்கல்லூரியை எதிர்த்து கிளிநொச்சி - விவேகானந்தா வித்தியாலயம் மோதியது.

இப் போட்டியில் சாவகச்சேரி - இந்துக் கல்லூரி விவேகானந்தா வித்தியாலயத்தை 2:0 என்ற கோல் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியனானது.

# விஷேடதேவையுடையோருக்கான விளையாட்டுப் போட்டி நிகழ்வுகள்

தெல்லிப்பழை,

வலிகாமம் கல்வி வலயத்தில் விஷேட தேவையுடைய மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

வலிகாமம் கல்வி வலயத்தின் விஷேட கல்வி அலகு இப்போட்டிகளை நடத்தவுள்ளது.

இவ்வாண்டு நான்கு குழுக்களாக வயதுப் பிரிவு அடிப்படையில் போட்டிகள் நடைபெற்றன.

முற்றாகப் பார்வையற்றவர்கள், பார்வைக்குறைபாடுகள் உடையோர் குழு ஒன்றிலும் கேட்டல் மற்றும் பேச்சுக் குறைபாடுடையோர் குழு இரண்டிலும் கை, கால் அங்கவீனமுடையோர் குழு மூன்றிலும் நரம்புத்தளர்ச்சி, உடலியக்கக் குறைபாடுடையோர் குழு நான்கிலும் இடம்பெறவுள்ளனர்.

மே மாதம் நடைபெறவுள்ள இப்போட்டிக்கான விண்ணப்பங்களை 10 ஆம் திகதிக்கு முன்னர் வழங்கவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# உதைபந்து பயிற்றுநர் பரீட்சையில் சித்தி

தெல்லிப்பழை

ஆசிய உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட உதைபந்தாட்ட பயிற்றுநர்களுக்கான பரீட்சை தரம் 'பி' யில் இளவாலையை சேர்ந்த டனிஸ்ரன் விஜயகுமார் சித்தியடைந்துள்ளார்.

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கைச் சேர்ந்த இளவாலை - யங் ஹென்றீசியன் விளையாட்டுக் கழகத்தின் அங்கத்தவரும் இளவாலை சென்.ஹென்றியரசர் கல்லூரியின் பழைய மாணவருமாவார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் உடற்கல்வி டிப்ளோமா பட்டத்தைப் பெற்ற இவர் தற்போது வவுனியா மாவட்டத்தில் உடற்கல்வி ஆசிரியராகப் பணியாற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தீவக கல்வி வலய பாடசாலைகளின் குழு நிலைப் போட்டி முடிவுகள்

ஏழாலை,

தீவக கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான குழுநிலைப் போட்டிகள் அண்மையில் ஊர்காவற்றுறை - புனித அந்தோனியார் கல்லூரி மைதானத்தில் தீவக கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.என். லோகநாதன் தலைமையில் நடைபெற்றன.

இக் குழுப் போட்டிகளில் கரப்பந்தாட்டப் போட்டியில் 15 வயது ஆண்கள் பிரிவில் ஊர்காவற்றுறை - அந்தோனியார் கல்லூரி அணி முதலாமிடத்தையும் வேலணை -மத்திய கல்லூரி அணி இரண்டாம் இடத்தையும், வேலணை மேற்கு - நடராஜா வித்தியாலயம் மூன்றாம் இடத்தினையும் பெற்றுக்கொண்டன.

17 வயதுப் பிரிவு:

ஊர்காவற்றுறை - புனித அந்தோனியார் கல்லூரி அணி முதலாமிடத்தையும், நயினாதீவு - சிறிகணேசா கனிஷ்ட மகா வித்தியாலயம் அணி இரண்டாமிடத்தையும், காரைநகர் - யாழ்ற்றன் கல்லூரி மூன்றாமிடத்தையும் பெற்றன.

19 வயதுப் பிரிவில் காரைநகர் - யாழ்ற்றன் கல்லூரி அணி முதலாமிடத்தையும், நயினாதீவு - ஸ்ரீகணேசா கனிஷ்ட மகா வித்தியாலயம் அணி இரண்டாமிடத்தையும், வேலணை - மத்திய கல்லூரி மூன்றாமிடத்தையும் பெற்றன.

கரப்பந்தாட்டம்

15 வயதுப் பிரிவு மண்டைதீவு - மகா வித்தியாலய அணி முதலாமிடத்தையும், நெடுந்தீவு - றோமன் கத்தோலிக்க மகளிர் கல்லூரி அணி இரண்டாமிடத்தையும் வேலணை மேற்கு - நடராஜா வித்தியாலய அணி மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டன.

17 வயதுப் பிரிவில் : நெடுந்தீவு - றோமன் கத்தோலிக்க மகளிர் கல்லூரி முதலாமிடத்தையும் வேலணை மேற்கு - நடராஜா மகாவித்தியாலயம் இரண்டாமிடத்தினையும் நயினாதீவு - ஸ்ரீ கணேசா கனிஷ்ட மகா வித்தியாலயம் மூன்றாமிடத்தையும்

19 வயதுப் பிரிவில் : ஊர்காவற்றுறை - புனித மரியாள் றோமன் கத்தோரிக்க மகளிர் வித்தியாலயம் முதலாமிடத்தையும் கரம்பொன் - சிறியபுஸ்ப மகளிர் மகாவித்தியாலயம் இரண்டாமிடத்தையும் காரைநகர் - சுந்தமூர்த்தி நாயனார் வித்தியாலயம் மூன்றாமிடத்தையும் பெற்றன.



கோண்டாவில் பரமசோதி வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டியில் மாணவர்களின் கயிறிழுத்தல் போட்டியை படத்தில் காணலாம். (படம்:- ஏழாலை நிருபர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பல்கலாசார பரிமாற்றத்தின் தரிசனமாக யாழ்ப்பாண இசைவிழா

யாழ்ப்பாண இசைவிழா - 2011 நிகழ்வானது பங்குனி மாதம் 25, 26, 27ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் - மாநகர சபை மைதானத்தில் நடைபெற்றது. பலதரப்பட்ட பாரம்பரிய இசை, நடன நிகழ்வுகள் இலங்கையின் பல பாகங்களிலும் உள்ள பல்லின மக்களால் ஆற்றுகைப்படுத்தப்பட்டன. இவர்களுடன் தென்னாபிரிக்கா, நேபாளம், பாலஸ்தீனம், நோர்வே ஆகிய சர்வதேச நாடுகளில் இருந்து வருகை தந்த கிராமியக் கலைஞர்களும் இணைந்து ஆற்றுகை வெளியில் தம்மை முகிழ்த்திக் கொண்டனர். இவ் விழாவனது 'சேவாலங்கா' நிறுவனத்தினால் ஏற்பாடுசெய்யப்பட்டு நிகழ்த்தப்பட்டது.

முதலாவது இசைவிழாவானது 2009 ஆம் ஆண்டு காலியில் நடைபெற்றதன் தொடர் நிகழ்வாக இவ்வாண்டு வரலாற்றுச் சரித்திரப் புகழ்மிக்க யாழ். மண்ணில் யாழ்ப்பாண இசைவிழாவாக மிளிர்ந்தது. இந்நிகழ்வானது கலாசார ரீதியான நட்புறவுக் கலை வடிவங்களின் கொண்டாட்டமாக விளங்கியது.

இவ் விழாவினுடைய முக்கியத்துவத்தினை நாம் ஆராய்கின்றபோது ஓர் நாட்டினுடைய வரலாற்றுப் பின்புலத்தில் கலைகளினுடைய இருப்பு இன்றியமையாததாகின்றது. கலை மனித மகிழ்வளிப்பின் சாதனமாக பண்டைக் காலம் தொட்டு இன்று வரை நிகழ்த்தப்பட்டு வருகின்றது. கலையானது மகிழ்வளிப்பு சாதனத்துடன் உள்ளார்ந்த பல அர்த்தப்பாடுகளையும் கொண்டு விளங்குகின்றது.

கலைகளினுடைய பிறப்பிடம் கிராமங்கள் ஆகும். கிராமிய பண்பாட்டுத் தள அடிப்படையில் கலைகளுக்கு என்று தனி இடம் உண்டு. இக் கலை வடிவங்கள் மண் வாசனையோடும் கலாசார, பண்பாட்டுத் தனித்துவத்துடனும் இனக் குழுமத்தினுடைய இருப்புடனும் விளங்குவதுடன், பரம்பரை கையளிப்பு நிகழ்வாகவும் விளங்குகின்றது.


உலகின் அனைத்து பண்பாடுகளிலும் ஆதிகாலத்திலிருந்து களிப்பூட்டும் அம்சங்களில் நடனமும் இசையும் முக்கிய பங்கு வகித்துள்ளன. ஆதியில் உடல்மொழியூடாக மனிதர்கள் கருத்தினை வெளிப்படுத்தினார்கள். வார்த்தைகள் காணப்படவில்லை. ஆதலால், நடனம் இவற்றினூடாக தோற்றம் பெற்றிருக்கின்றது. உடலின் லய நிலைப்பட்ட அசைவு நடனம் ஆகும். இவ் நடன நிலைப்பட்ட ஆடலுடன் இணைந்த ஒன்றாகவே இசை விளங்குகின்றது. ஆடலும் இசையும் இயற்கை நிலைப்பட்ட கலை வடிவங்களாக விளங்குவதுடன், இயற்கை நிலைப்பட்ட கலை வடிவங்களாக நாட்டுப்புறக் கிராமியக் கலை வடிவங்கள் விளங்குகின்றன.

இயற்றை நிலைப்பட்ட உயர் பெறுமானத்தைத் தன்னகத்தே கொண்ட கலைகளின் பேணுகை அருகிவருவதாகப் பலர் குறிப்பிடுகின்றனர். இக் கலைகக்கு மக்களிடம் ஆர்வம் குறைவாக காணப்படுவதனால் கலை ஆற்றுகையைப் பார்க்கும் பார்வையாளர்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்து செல்வதனால் பெரும்பாலான கலை வடிவங்கள் தமது இருப்பைத் தக்கவைத்துக் கொள்ள பெரும் பிரயத்தனங்களை மேற்கொள்கின்றன. இத்தகு சூழலில் கிராமியக் கலை வடிவங்களைப் பேணி பாதுகாப்பதுடன், அவற்றுக்குப் புத்துயிர்ப்பு ஊட்ட வேண்டிய தேவையும் எம்மிடையே உள்ளது. *(தொடரும்...)*

● எஸ்.ரி.குமரன்

# வீட்டு வைத்தியம்

- உணவில் உப்பைக் குறைக்க முற்றிலுமாக உணவைச் சமைத்த பிறகு உப்பைத் தூவவும்.
- குப்பைக் கூடையிலிருந்து வரும் துர்நாற்றத்தைப் போக்க அதனடியில் சிறிது உப்பைத் தூவவும்.
- அடிக்கடி டீ, காபி குடிப்பவரா நீங்கள்? அவற்றைத் தவிர்த்துப் பாருங்கள். மேலும், உற்சாகத்தோடு இருப்பீர்கள்.
- அவ்வப்போது அரைப்பட்டினி இருக்கலாம். ஆனால், மினரல் வாட்டரும் திராட்சையும் மட்டும் உண்டுவந்தால் உடலிருந்து நச்சுப்பொருட்கள் வெளியேறும்.
- நம்ப முடியாதளவுக்கு மென்மையான சருமத்தைப் பெறவும், பணத்தையும் சேமிக்க புகைபிடிப்பதை நிறுத்திப் பாருங்கள்.
- தேயிலை இலை, தேன் மற்றும் 4, 5 துளசி இலைகள், 1 டீஸ்பூன் சோம்பு, 5 மிளகைச் சேர்த்து 1 டம்ளர் தண்ணீரில் கொதிக்க வைத்து குடித்தால் உடலில் ஏற்படும் சூடு தணிந்து குளிர், மழைக் காலங்களில் சளி பிடிப்பதும் நின்று விடும்.
- கட்லட், பஜ்ஜி, பக்கோடா இவற்றிலிருந்து அதிகப்படியான எண்ணெயைப் போக்க பிளாட்டிங் ,டிஸ்யூ பேப்பரால் மெதுவாக அழுத்தி துடைக்கவும்.
- கெரஸின் வாசனை போக கைகளை முதலில் துணி துவைக்கும் சோப்பால் கழுவி பின்னர் சிறிது கடுகெண்ணெய் தடவவும். இது கைகளை மென்மையாக்கும்.
- தோட்ட வேலை, பாலிஷிங் செய்த பிறகு கைகளைக் கழுவ கைகளில் எண்ணெய் தடவி பிறகு நகங்களை சோப்பு, மெழுகுவர்த்தி அல்லது மெழுகில் தேய்க்கவும்.
- கத்தரிக்காய், வெந்தயம், பசளிக்கீரை இவற்றை இரும்புக் கடாயில் சமைப்பதால் உணவோடு இரும்புச்சத்தும் சேரும், உணவும் சுவையாக இருக்கும்.
- புரதச் சத்தை அதிகமாகப் பெற சோயாபீன்ஸ் கோதுமையை 1:9 என்ற விகிதத்தில் கலந்து மாவாக அரைத்து ரொட்டி சப்பாத்தி செய்யவும்.
- யோகாசனங்கள்,உடற்பயிற்சிகளை பத்திரிகைகளைப் பார்த்துச் செய்பவரா? அந்தப் பக்கங்களை வெட்டி கலண்டரில் ஒட்டி சுவரில் மாட்டவும்.
- சூப், ஸ்டியூவிலிருந்து அதிகப்படியான கொழுப்பை நீக்க லெட்ஸ் கீரையைச் சேர்த்து சூப்பைக் கொதிக்கவைக்க அவை சத்தை உறிஞ்சிக் கொள்ளும். அந்த இலைகளை எடுத்துவிட்டு உண்ணலாம்.



- வெட்டிய புதிதான பார்ஸ்லி ஒரு தேக்கரண்டி, 6 அவுன்ஸ் பப்பாளி, எலுமிச்சைச் சாறு ஒரு மேசைகரண்டி இவற்றைச் சேர்த்து வாய் கொப்பளித்தால் வாய் துர்நாற்றம் இல்லாமல் சென்றுவிடும்.
- தினமும் காலையில் 4 டம்ளர் வெதுவெதுப்பான வெந்நீர் குடித்தால் மலச்சிக்கல் குறைவதுடன் சிறுநீரகம் சுத்தமாகி தொண்டை சீராகி வாய் துர்நாற்றம் நீங்கும்.
- பிளாஸ்டிக் டப்பாவின் நாற்றம் நீங்க கசக்கிய செய்தித்தாளை அதனுள் இரவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குமுதினி ஓடும்.. ஆனால் ஓடாது...

நெடுந்தீவு - குறிகாட்டுவான் பயணத்திற்கான அரச படகுச் சேவை என்பது மணலைக் கயிறாக்கும் ஒரு வேலைபோன்று ஆக்கப்பட்டு விட்டது போலும். இந்தச் சேவையில் நீண்ட காலம் உள்ள படகான 'குமுதினி' பல இலட்சம் ரூபா செலவில் திருத்தியமைக்கப்பட்டும் 80 கோடி ரூபாவில் புதிய படகு வடதாரகை - II தருவிக்கப்பட்டும் இன்னமும் கடந்த 70 வருடங்களுக்கு முற்பட்ட கட்டுமரம், பாய்த்தோணிப் பயணங்களை மேற்கொள்வது போன்ற நிலையெனின் வளர்ச்சி அபிவிருத்தி என்ற நடவடிக்கைகள் எந்த அளிவில் போய்க் கொண்டிருக்கின்றன என்பதை ஒரு குழந்தை கூட கூசாமல் சொல்லிவிடும்.

நெடுந்தீவுச் சேவையில் உள்ள அரச படகான 'குமுதினி' அடிக்கடி பழுதடையும் ஒன்று. துரதிஷ்டவசமாக அது அடிக்கடி பழுதடைகிறதோ அல்லது பழுதாக்கப்படுகிறதோ என்பது ஆண்டவனுக்கே வெளிச்சம்.

கடந்த ஐந்து மாதங்களுக்கு மேலாக பழுதடைந்து திருத்த வேலைகளும் இடம்பெற்று மீண்டும் இந்தப் படகு சேவைக்கென வந்து, வந்த கையோடு மீண்டும் பழுதடைந்து இப்போது வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் தொல்பொருட் காட்சிக்கு வைக்கப்பட்ட பொருட்களில் ஒன்றாக குறிகாட்டுவான் கடலில் கூடவே புதிய படகு எனப்படும் வடதாரகை - II ஐயும் சேர்த்து காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. நயினாதீவுக்குச் செல்லும் மக்கள் இந்தக் காட்சிப் படகுகளை ரசனையுடன் பார்த்துச்செல்ல நெடுந்தீவு மக்கள் உள்ளக் குமுறலுடன் ஊருக்குச் செல்கின்றார்கள்.

திருத்தத்திற்கென கொண்டுசெல்லப்பட்ட 'குமுதினி' உரியமுறையில் திருத்தியமைக்கப்படவில்லை. அதன் இயந்திரத்தில் உள்ள கோளாறுகள் சீர் செய்யப்படவில்லை. வெறுமனே அதன் உடற்பகுதியை மட்டும் கவனித்து 'பெயின்ற்' அடித்து மினுமினுக்கி மீண்டும் ஆட(ஓட)விட்ட வீதி அபிவிருத்தி அதிகார சபை, அதன் இருதய சிகிச்சையை மறைத்துவிட்டது. மேனியை மட்டும் மினுக்கி விட்டதால் ஆட(ஓட) முடியாமல் மீண்டும் சில லகரங்களை வேண்டிக் கிடக்கின்றது.



இது கடல் போக்குவரத்து. ஒரு கடல் சார் பொறியியல் சார் வல்லுநரின் கட்டுப்பாட்டில் கண்காணிக்கப்பட வேண்டிய ஒன்று. குமுதினி படகில் திருத்த வேலைகள் முழுமையாகச் செய்யப்படாத நிலையில் மையைப் பூசி பார்வைக்கு கவர்ச்சியாக்கி, ''எல்லாம் சரி ஒரு மாதிரி ஓடிச் சமாளியுங்கள் பிறகு பார்க்கலாம்'' என்று கூறி அதிகாரிகள் அதனை அனுப்பிவைத்தார்கள் என இப்போது வேலையின் இரகசியம் வெளியாகியுள்ளது. இது காற்றோடு கலந்துவந்த ஒரு தகவல் இதைச் சொன்னவர்கள் மறுக்கலாம். ஆனால், இது தான் உண்மை என்பதை நெடுந்தீவு மக்கள் மறுப்பதற்கில்லை. 'மரைன் எஞ்சினியர்' கவனிக்க வேண்டிய ஒன்றை றோட்டுக்கு மண் போடும் எஞ்சினியரைக் கவனி என்றால் அவர் தான் என்ன செய்ய முடியும்? இந்தச் சேவைக்கே மண் போட்டது தான் மிச்சம்.

நெடுந்தீவு துறைமுகத்தின் தன்மை சம்பந்தப்பட் அதிகாரிகளுக்கு இத்தனை வருடக்கணக்காகியும் புரியாதிருக்கிறது என்றால்.....

புதிய படகான 'வடதாரகை'யைக் கட்டு முன் துறைமுகத்தின் நிலைமையை அவதானித்து அதற்கமைவாகக் கட்டியிருக்க வேண்டும். இப்போது அரங்கு பிழை' என்றாகிவிட்டது.

'தோசையின் திறத்தில் ஆட்டுக்கல்லுக்கு ஒரு மாலை' என்பது போல் இந்தச் சேவையின் சிறப்புக்கு ஒரு கலந்துரையாடல் வைப்பதாக நெடுந்தீவுக்கு அறிவிக்கப்பட்டது. மக்களும் நிறையவே கூட்டத்தில் கலந்து கொள்ள வந்திருந்தார்கள். ஆனால், அறிவித்த அதிகாரிகள் அங்கு வராமல் எங்கோ ஒழித்துக்கொண்டார்கள்?

அதிகாரிகள் பல லகரங்களைப் போட்டு பைகளை நிரப்பியபடி வீதிகளில் 'பஜிரோ' பவனிகளில் உலா வர 'குமுதினி'யும் 'வடதாரகை'யும் குறிகாட்டுவான் கடலில் கவாட்டிகளின் அரவணைப்புக்குள் கிடக்க நெடுந்தீவு மக்கள் வெயிலிலும் மழையிலும் காய்ந்து உருக்குலைய வானளாவ உயர்கிறது 'வடக்கின் வசந்தம்'.

● தாருந்தி

# மூலிகை மருத்துவம்



## கற்பூரவள்ளி

**Bin Coleus ambonicus**

***E.N Thich Lavender***

உபயோக பாகம் - இலை

சுவை - கார்ப்பு

***செய்கை*** - கோழையகற்றி, வெப்பம் உண்டாக்கி, வியர்வைப் பெருக்கி

***குணம்*** - இதனால் காசம், அம்மைக் கொப்புளம், வாதரோகம் ஆகியன தணியும்.

உபயோகம் - கற்பூரவள்ளி இலைச்சாற்றுடன் கற்கண்டு சேர்த்துக் கொடுக்க இருமல் மாந்தம் தீரும்

நல்லெண்ணெய் சேர்த்து தலையில் தடவ மூக்கில் நீர் பாய்தல் தணியும்.

மேலே சொல்லப்பட்ட ரோகங்களுக்கு இலைச் சாற்றை சுண்டக்காய்ச்சி கொடுக்க தணியும்

**ரீ. உமா** (2 ஆம் வருடம்)
லங்கா சித்த, ஆயுள்வேதக் கல்லூரி - சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ்ப்பாண சமூகத்தின் சமகால போக்கு

கடந்த சில தசாப்தங்களாக சமூக, பண்பாட்டு விழுமியங்களில் தனக்கென தனிமுத்திரை பதித்த யாழ்ப்பாணக் குடாநாடு தற்போது அந்நிலை மாறி சமூகச் சீர்கேடுகளின் அரங்கமாக மாறிவருகிறது. கலாசார பூமி என பலராலும் வர்ணிக்கப்பட்ட யாழ்ப்பாணத்தின் இன்றை நிலை பரிதாபகரமானதே.

சமூக, கலாசார விழுமியங்களில் ஆழமாக வேரூன்றியிருந்த யாழ்ப்பாணம் இன்று அந்நிலை மாறி வேரறுந்த மரமாக தனது பசுமையை இழந்து வருவது சமூக ஆர்வலர்கள் மத்தியில் வேதனையை ஏற்படுத்தி வருகிறது.

தமது கலாசார உணர்வுகளில் ஊறிப்போயிருந்த யாழ். மக்களில் பலர் இன்று அவற்றை எல்லாம் புறமொதுக்கி விட்டு சமூகப் பிறழ்வான நடவடிக்கைகளில் மூழ்கிப்போயிருக்கிறார்கள்.

கொலை, களவு, பாலியல், வன்புணர்ச்சிகள், தகாத உறவுகள், வீதியோர சிசுக்கள் இவை யாவும் தினசரி யாழ்ப்பாணப் பத்திரிகைகளிலும் இணையங்களிலும் வரும் தலைப்புச் செய்திகளாகும். இத்தகைய சீர்கேட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் யாவர்? அதன் பின்னணிச் சூழல்கள் யாவை? இவற்றின் பெருக்கத்திற்கான காரணிகள் எவை? என்ற எமது கண்ணோட்டத்தில் பெறப்பட்ட விபரங்களை இங்கு தருகிறோம்.

இவ்வாறான துர்நடத்தைகளில் ஈடுபடுபவர்கள் பெரும்பாலும் இளவயதினராகவே உள்ளனர். இவர்களுள் திருமணமாகியவர்களும் அடக்கம் பெறுகின்றனர். திருமணம் முடித்த ஆண்கள் தொழில்வாய்ப்பு பெற்று வெளிநாடுகளுக்குச் சென்ற நிலையில் அவர்கள் அனுப்பும் பணத்தைக் கொண்டு சுகபோக வாழ்க்கை நடத்துவதோடு, கணவனுக்குத் தெரியாமல் இன்னொரு ஆணுடன் கள்ளத்தொடர்புகளைப் பேணி காம சுகம் அனுபவித்து சல்லாபிக்கும் பெண்களின் எண்ணிக்கை இன்று யாழ்ப்பாணத்தில் பெருக்கமடைந்து வருகிறது. கல்வி நிலையங்களுக்கு கல்விகற்கச் செல்வதாகக் கூறி பெற்றோரை ஏமாற்றிப் பணம் பெற்று யாழ். நகர் வரும் மாணவர்கள் மதுபான நிலையங்களை நாடுவதையும், ஆபாசப்படங்கள் காண்பிக்கப்படும் மினி சினிமாக்களுக்குச் செல்வதையும் கல்வி கற்க என வரும் யுவதிகள் நகரில் இன்று பரவலாக முளைத்துள்ள தங்குவிடுதிகள், திரையரங்குகளுக்கு ஆண் நண்பர்களுடன் சென்று பல்வேறு சீர்கேட்டுச் செயல்களில் ஈடுபடுவதையும் காணக்கூடியதாக உள்ளது. மாணவர்கள் தான் இப்படியென்றால் இவர்களுடன் சகஜமாகத் தோளில் கைபோட்டுத் தண்ணியடிக்கும் ஆசிரியப் பெருந்தகைகளை நாம் எப்படிச் சொல்லுவது? தமது தொழிலின் தாற்பரியம் அறியாது தம்மிடம் கல்வி கற்க வரும் மாணவ, மாணவிகளிடையே பகிடி என்ற சாக்கில் அநாகரிகமாக தகாத வார்த்தைகளை சரளமாகப் பேசி மகிழும் ஆசிரியர்கள் சிலர் மாணவிகளைத் தமது காமப்பசிக்கு இரையாக்கிய பல்வேறு சம்பவங்களும் குடாநாட்டுப் பாடசாலைகள், தனியார் கல்வி நிலையங்களில் நடந்தேறுவதை அறியக் கூடியதாக உள்ளது. கல்விச் சமூகத்தின் நிலையே இவ்வாறென்றால் மற்றவர்களின் நிலைபற்றி நாம் சொல்லத்தேவையில்லை.

கடந்த பல தசாப்தங்களுக்கு முன்னர் இருந்த யாழ்ப்பாணத்தின் பசுமை நிறைந்த நினைவுகளை மீட்டுப் பார்ப்போமேயானால் எம் மனதில் ஒரு பூரிப்பு. ஆனால், இன்றைய யாழ்ப்பாணத்தின் நிலையை எண்ணுகையில் எம் நெஞ்சம் கனக்கிறது. அன்று எம் மக்கள் யுத்தத்தால் முழுமையாக உள்வாங்கப்பட்டிருந்த காலம், சமாதானத்தையும் அமைதியையும் நிம்மதியையும் யாசித்திருந்த காலம், உயிர் இழப்புக்கள், உடைமை இழப்புக்கள், உறவுகளின் இழப்புக்கள் என இழப்புக்களுக்கு மத்தியில் விரக்தியின் விளிம்பில் நின்ற காலமது.

இந்நிலையில் கூட எமது யாழ்ப்பாணச் சமூகம் கலை, கலாசாரப் பண்பாட்டு விழுமியங்களைப் பேணுவதில் ஓர் தனித்துவம் மிக்க சமூகமாகவே உலக அளவில் பார்க்கப்பட்டது; பேசப்பட்டது. இதன் பின்னணியியை நோக்கினால் அன்றைய ஆட்சியாளர்கள் எமது சமூகத்தை ஓர் வளம் மிக்க சமூகமாக நிலைபெறக் காரணமாக இருந்தது. ஆனால், இன்று நிலைமை அவ்வாறில்லை. ''கேட்பதற்கு ஆளில்லா விட்டால் தம்பி சண்டப் பிரசண்டன்'' என்பதுபோல தான்தோன்றித்தனமான போக்கு முளைவிடத் தொடங்கியுள்ளது.

கலாசாரச் சீரழிவுக்கு யாழ். நகர மத்தியே தற்போது நிலைக்களமாக விளங்கிவருவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. பல்வேறு பிரதேசங்களில் இருந்து வருபவர்கள் தமது காமக்களியாட்டங்களை அரங்கேற்றிக் கொள்வதற்கு வழிசமைத்துக் கொடுக்கும் ஒரு களமாகவே இன்று யாழ். நகர மையம் பார்க்கப்படுகிறது.

நாகரிகம் என்ற போர்வையில் இன்றைய யுவதிகள் அலங்கோலமாக அணியும் விரசமான ஆடைகள் எந்த ஒரு ஆடவனின் மனதிலும் விரகதாபத்தை ஏற்படுத்த வல்லனவாகவே உள்ளன. இவ்வாறு அங்கங்கள் வெளிப்பட உடுத்திக்கொள்ளும் பெண்களுக்கு தாங்களும் சளைத்தவர்கள் அல்ல என்பது போல யாழ்ப்பாண இளைஞர்களும் தமது உள்ளாடை தெரியுமாறு இடுப்புக்குக் கீழிறங்கிய நிலையில் டெனிம் ஜீன்ஸும் இடுப்பளவு நீளம் கூட இல்லாத சேர்ட்டுகளையும் அணிந்து தறிகெட்டுத் திரிகின்றார்கள்.

சீரழியும் யாழ். சமூகத்தின் சீரழிவில் கல்விச் சமூகத்தின் பங்கு அதிகமாகவே நோக்கப்படுகிறது. இங்கு தனியார் கல்வி நிலையங்களுக்குக் கல்வி கற்கவென வரும் மாணவ, மாணவிகளிடம் பாடப்புத்தகங்கள் இருக்கின்றனவோ இல்லையோ செல்போன்கள் மட்டும் அவர்கள் கைகளில் அழகாகத் தவழ்கின்றன. அதி நவீன தொழில்நுட்ப வசதி கொண்ட செல்போன்கள் மூலம் ஆபாசப்படங்களைத் தரவிறக்கம் செய்து அவற்றை புளூரூத் தொழில்நுட்பம் மூலம் அடுத்தவர் போனுக்கும் அனுப்பி புளகாங்கிதம் அடைகின்றனர். தண்ணியடிப்பதும் வீதியில் புரண்டெழுவதும் தகாத வார்த்தைகள் மூலம் மற்றவரை வம்புக்கு இழுப்பதும் இவர்களது பொழுது போக்குகள்.

இவற்றோடு நின்றுவிடாது முகம் தெரியாத நபருடன் செல்போனில் மணிக்கணக்கில் பல்லிளிக்கும் குமரிகளின் போக்கு இறுதியில் வேண்டத்தகாத உறவுகளிலும் தேவையற்ற கருக்கலைப்புக்களிலுமே போய் முடிகின்றது. இன்றைய சமூகச் சீரழிவுகளின் பெரும்பங்கு இளவயதுப் பெண்களையே சாரும். சமுதாயச் சீரழிவின் உச்சநிலையில் நிற்பவர்கள் இன்றைய யாழ். இளம் பெண்கள் தான்.

வக்கிரபுத்தி கொண்ட எந்தவொரு (ஆண்) மனித மிருகமாக இருந்தாலும் பெண்ணின் உடன்பாடின்றி அவளுடன் உறவுகொள்ள முடியாது.

(28 ஆம் பக்கம் பார்க்க...)

ஜெ.வினோத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலக்கிய இன்பம்

தமிழ்ப் புலவர்களுக்கு அளவற்ற சிறப்புண்டு. கற்றோர்க்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு என்று கூறுவார்கள். சிறந்த நல்லறிவு, அரும் பெரும் குணங்களுக்கு இலக்கணமாக அக்காலப் புலவர்கள் திகழ்ந்தனர். புலவர்களால் பாடப்பெறுவதை மக்கள் தமது பெறுதற்கரிய பேறாகக் கருதினர். தக்க புலவர்களால் பாடப்பட்டால் அழியாத புகழைப் பெறுவார்கள். இமயம் உள்ள வரை அவர்களது பெருமை குன்றாது. அந்த வகையில், மன்னர்கள் புலவர் பெரு மக்கள் மீது அளவு கடந்த அன்பைச் சொரிந்தனர்.

மதுரை மாநகர் தமிழ்நாட்டின் தலைநகராகத் திகழ்ந்தது. 64 திருவிளையாடல்கள் புரிந்து இறைவன் அமர்ந்து அருள் புரிந்த புண்ணியபுரி. அத் தலத்திலேயுள்ள சிவனின் திருநாமம் சொக்கலிங்கம்.

இத்தகைய திருத்தலத்திலே ஒரு சிறந்த மருத்துவர் வாழ்ந்தார். அவர் கைராசியுடைய அரச வைத்தியர். உயர்ந்த மருந்து வகைகளைத் தயாரித்து நோய்களை நுணுக்கமாக ஆராய்ந்து நோய்களைத் தீர்ப்பதில் வல்லவர்.

*'நோய்நாடி நோய் முதல் நாடி*
*அது தணிக்கும்*
*வாய் நாடி வாய்ப்பச் செயல்'*

என்று திருவள்ளுவர் கூறியபடி நோயையும் நோய் வந்த காரணத்தையும் அதனை நீக்கும் தன்மையையும் நுணுக்கமாக நன்கு ஆராய்ந்து மருந்தைக் கொடுப்பவரே சிறந்த வைத்தியர் ஆவார். ஆனால், இன்றுள்ள வைத்தியர்களின் செயல்கள் குறித்து இங்கு விவரிக்கத் தேவையில்லை என எண்ணுகிறேன்.

இவ் வைத்தியரிடத்தே ஏழை எளியவர்கள் சென்று சிகிச்சை பெறமுடியாது. மன்னருக்கும் செல்வந்தர்களுக்குமே வைத்தியம் புரிவார். செல்வம் மிக்க சொக்கலிங்க பண்டிதர் என்ற பெயருடைய புனிதர் அவர்.

நற்குணசீலர் இவரின் தந்தை பெயர் வீரபத்திரர். இவர் காலத்தில் மதுரையில் ஒரு பெரும் புலவர் இருந்தார். அவர் பெயர் மருதனார். இவர் சிறந்த பண்பாடும் தமிழ்ப் புலமையும் உடையவர். இவரது புகழ் எண்திசை எங்கும் பரவியிருந்தது. அக்காலத்தில் இவருடைய திருவாயினால் பாடல் பெறுவதைத் தமது அரும் பெரும் பேறாகப் பலர் கருதினர்.

சொக்கலிங்கம் என்ற மருத்துவர் மருதனாரிடம் ஒரு பாடல் தன்னைக் குறித்துப் பாடப் பெற வேண்டும் என நெடுநாட்களாக அவாவினர். அதற்குரிய வழிகளைச் சிந்தித்துக்கொண்டிருந்தார்.

இது இவ்வாறிருக்க ஒரு சமயம் மருதனார் என்ற பெரும்புலவர் கடும் நோயினால் பீடிக்கப்பட்டு உடல்வாடி அவஸ்தைப் பட்டுக் கொண்டிருந்தார். எத்தனையோ மருத்துவர்கள் சிகிச்சையளித்தும் நோய் தணியவில்லை. எல்லோருமே பிழைக்க மாட்டார் எனக் கருதி கைகழுவி விட்டனர்.

இவர் மறைந்தால் தமிழுலகிற்கே பெரும் நஷ்டம். தமிழ் அறிவின் கருவூலமான இவர் வாழ்ந்தால் தான் உலகில் தமிழும் தமிழ்ப் பண்பாடும் வாழுமே என்று கூறி மக்கள் இரக்கப்பட்டனர். இவர் குறித்து வருத்தப்பட்டனர்.

மருதனார் மாபெரும் சிறப்புடைய மருத்துவரான சொக்கலிங்க பண்டிதரிடம் தனது உடலைக் காட்டி சிகிச்சை பெற்றால் ஒருவேளை குணமடையக் கூடும் எனக் கருதினார். ஆனால், அவரோ அரச வைத்தியர். எளியனாகிய எனக்கு வைத்தியம் புரிய மாட்டாரே என எண்ணி கவலைப்பட்டார். என்ன செய்யலாம் என்னிடம் ஒரு சல்லிக் காசு கூட கிடையாது. ஆனால், அவர் பெரும் பணம் கேட்பாரே என எண்ணினார். மருதனாருடைய நலத்தில் அக்கறையுள்ள ஒருவர் சொக்கலிங்க பண்டிதரிடம் சென்றார். மருதனாரின் நிலை பற்றி எடுத்துக் கூறினார்.

புலவரிடம் பாடல் பெற வேண்டும் என்று நெடுங்காலமாகக் கருதியிருந்த மருத்துவர் அவருக்குச் செய்யும் உதவி தமிழ்த் தாய்க்குச் செய்யும் உதவியாகக் கருதி மருத்துவப் பெட்டியுடன் புலவர் இருக்குமிடம் நோக்கி விரைந்தார்.

நோயில் கிடந்து துடித்தபடி கிடந்தார் புலவர். புலவர் இருக்குமிடம் நோக்கி மருத்துவர் வந்ததும் புலவரின் கண்களால் நம்பவே முடியவில்லை. அரசருடைய அரண்மனையிலிருக்கும் சொக்கலிங்கர் எனது வீட்டுக்கு வந்தார். தான் அழைக்காமலே வந்த படியால் தெய்வத்தின் கட்டளை போலும் என எண்ணியவராக படுத்த படி இருகரங்களையும் கூப்பியவாறு ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார்.

சற்றும் தாமதிக்காது மருத்துவர் நோயின் நுட்பத்தை உணர்ந்து தக்க மருந்துகளையும் கொடுத்து புலவருக்கு சிகிச்சையளித்தார். புலவரின் கொடும்பிணி நீங்கியது. உடல் நலமுற்றது. மருத்துவருக்குக் பணம் கொடுக்க அவரால் முடியவில்லை. என்ன செய்வார்? உடனே தனது பாடல் திறமையினால் தன்னை சாவினின்றும் காத்தருளிய மருத்துவர் மீது வெண்பாவில் ஒரு பாடலை பாடினார். அப்பாடல் இதோ,

*''மிக்க மதுரைச் சிவனும் விரபத்தி*
*ரன் சுதனும்*
*சொக்கர் இருவரெனத் தோன்றி*
*னார் - அக்கோன்*
*பிறவாமல் காப்பான் பிறந்தவரை*
*மீண்டும்*
*இறவாமல் காப்பான் இவன்''*


இப்பாடலைப் பெற்ற மருத்துவருக்கு மட்டற்ற மகிழ்ச்சி உண்டாயிற்று. பல்லாயிரம் பவுண் தந்தாலும் அப் பாடலைப் பெற்ற திருப்தி உண்டாயிற்று. தனது வாழ்வில் பெற்ற பெரும்பே[illegible]க் கருதினார்.

இப் பாடலின் பொருள் யாதெனில் மதுரையில் சொக்கலிங்கம் என்று இருவர் உளர். ஒருவர் சிவ பெருமான். மற்றையவர் வீரபத்திரன் புதல்வரான மருத்துவர்.

முன்னையவராகிய சொக்கலிங்கம் தன்னை உணர்ந்தவரை பிறவாமற் காப்பவர். பின்னையவராகிய சொக்கலிங்கம் தன்னை நம்பியவர்களை இறவாமற் காப்பார் என்ற பொருளையுடைய அப்பாடலால் மருத்துவரும் இறவாதவராயினார். மருத்துவர் என்பவர் தெய்வத்திற்கு சமமானவர் என்ற குறிப்புப் பொருள் இப்பாடலில் இழையோடுவது கவனிக்கத்தக்கது.

**எஸ். நதிபரன் B.A. (Hons)**

# ஊர்ப் புதினம்



மின்சாரக் கட்டணத்தின் உயர்வால் வாழ்க்கைச் செலவு அதிகரித்து துன்பப்படும் பலரில் நீங்களும் ஒருவராக இருக்கலாம்.

இப்பிரச்சினையை வெற்றிகரமாகக் கைக்கொள்ளும் ஒருவரின் அனுபவம் உங்களுக்கு உதவக் கூடும் என்பதால் பகிர்கின்றேன்.

சக்திச் சேமிப்பு மின்குமிழை பற்றி அறிந்திருப்பீர்கள். இம் மின்குமிழ்கள் அதன் வோல்ற்றை விட்டு 5 மடங்கு வெளிச்சத்தைத் தரக்கூடியவை. 20 வோல்ற் மின்குமிழ் 100 வோல்ற் பவர் வெளிச்சத்தைத் தருகின்றது. ஆனால், 20 வோல்ற் மின்சாரத்தைத் தான் மானி அளவிடும்.

அந்த அன்பர் இத்தகைய மின்குமிழ்களை படிப்படியாக வாங்கி வீட்டின் சகல இடங்களுக்கும் பொருத்தியுள்ளார்.

இதனால், முன்பு பாவித்த மின் அலகில் 80 வீதம் சேமிப்பாகிறது. தேவையில்லாமல் மின்குமிழ்களை தாம் ஒளிரவிடுவதில்லை என்கிறார்.

மின்குமிழ்களுக்கு செலவழித்த பணத்தை தாம் 4 மாத மின்சாரக் கட்டணக் குறைவின் மூலம் ஈடுசெய்து விட்டதாகக் கூறுகின்றார்.

ஆடைகளை தோய்த்து உலர்த்தி அயன் பண்ணும் போது பல ஆடைகளை ஒரே தடவையில் அயன் செய்வதாகக் கூறுகின்றார். இதன் மூலம் மின்னழுத்தியின் கொயில்கள் பல தடவை வெப்பமூட்டும் தேவை தவிர்க்கப்பட்டு மின்சாரம் சிக்கனமாகிறது.

ஆடை ஒவ்வொன்றையும் ஒவ்வொரு தடவை மின்னழுத்தியில் அயர்ன்செய்வதால் மின்சாரம் விரயமாகிறது. குளிர்சாதனப் பெட்டியிலிருந்து பொருட்களை அடிக்கடி எடுக்காமல் ஒரே தடவையில் தேவைப்படுபவற்றை எடுப்பதால் அதன் மின்சாரமும் சிக்கனமாகிறது என்றார்.

காற்றாடி, கணினி, நீரிறைக்கும் இயந்திரம் போன்றவற்றை தேவை கருதி மட்டும் சிக்கனமாகப் பாவிப்பதாகக் கூறுகின்றார்.

மின் கட்டணத்தை மிகக் குறைவாக வைத்திருக்கும் உத்திகளைக் கையாண்டு வீட்டுக்கும் நாட்டுக்கும் நன்மை புரிவோம்.

**சிவகாமி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகவல் தொழில்நுட்பம் 5

## Universal Serial Bus




இன்றைய நவீன உலகில் கணினி சார் உபகரணங்களை (Moues Divices, Keyboards, PDAs, Gamepads and Joysticks, Scanners, Digital Cameras and Printers) இணைப்பதற்குக்கு USB Port களையே உபயோகிக்கின்றோம்.

இவ் USB Port பற்றிய சில தகவல்கள்:

* பொதுவாக கணினி இயங்கிக்கொண்டிருக்கையில் சில உபகரணங்களை (Divices) கணினியுடன் இணைக்கும் போது அவ் உபகரணங்கள் உடனடியாக இயங்கமாட்டா. நாம் கணினியை Re-start செய்த பின் அவை இயங்கத் தொடங்கும். ஆனால், USB Port மூலம் இணைப்பை மேற்கொள்ளும் போது Restart அவசியமில்லை.
* குறைந்தளவு மின்சாரத்தில் (<5V) இயங்கும். உபகரணங்களை USB Port மூலம் இணைக்கும் போது அதற்கு வெளிப்புற மின் இணைப்பு அவசியமில்லை.
* சில உபகரணங்களை நாம் கணினியுடன் இணைக்கும் போது, அதற்குரிய இணைப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் (Dri-vers) கணினியில் உள்ளீடு (Install) செய்யப்பட வேண்டும். ஆனால், USB Port மூலம் இணைக்கப்படும் போது இவை (Drivers) அவசியமில்லை.

மேகலா பாலமுரளி



* USB Port இல் இணைப்பை மேற்கொள்ளும் உபகரணங்களை பின்வருமாறு வகைப்படுத்தலாம்:

1. USB Human Interface Device Class (HID)

Eg: Keyboard, Mice, etc...

2. USB Mass Storage Device Class

Eg: USB Flash Drives, Memory Card Readers, Digital Audio Players etc...

3. USB Hubs
4. USB Smart Card Readers.
5. USB Video Device Class

Eg: Web cam, Motion Image Captur Divices etc...

6. USB Wireless Controllers

Eg: Bluetooth Dongles

* USB Signals D+ & Dன இருவகைகளில் செலுத்தப்படுகின்றன. இதில் குறைந்தளவு 0.0 - 0.3 volts உம் உயர்ந்தளவு 2.8 3.6 volts உம் பாவிக்கப்படுகின்றது.
* USB ஆனது 3 வகையான Data Rates ஐக் கொண்டுள்ளது.

1. Low Speed (1.0) - 1.5 Mbit/s (192 KB/s)

Eg: Human Interface Devices.

2. Full Speed (1.1) - 12 Mbit/s (1.5 MB/s) Eg: USB Hubs
3. Hi - Speed (2.0) - 480 Mbit/s (60 MB/s) Eg: USB Flash Drives


* USB Poart இல் இணைப்பை மேற்கொள்வதற்கு Standard - A, Standard - B, Mini - B, Micro - A, Micro - B, Micro - AB போன்ற Connectors பாவிக்கப்படுகின்றன.
* பொதுவாக நீளமான USB Cables 5m ஆகும். இதற்கு மேலதிகமான நீளம் தேவைப்படின் Hubs or Extension Cables மூலம் இணைப்பை மேற்கொள்ளலாம். 50 m US மேல் CAT5 Cable மூலமாகவும், க்கு 10 Km மேல் Fiber Cable மூலமாகவும் ஓர் Media Convertor ஊடாக இணைப்பை மேற்கொள்ளலாம்.

| Pin | Name | Cable Colour | Description |
|---|---|---|---|
| 1 | VCC | Red | +5V |
| 2 | D - | White | Data - |
| 3 | D + | Green | Data + |
| 4 | GND | Black | Ground |

கணினி தொடர்பான உங்களது சந்தேகங்களை எங்களுக்கு எழுதி அனுப்புங்கள். பதில் கிடைக்கும்.
முகவரி
'வீரகேசரி' கிளைக் காரியாலயம்
117, புகையிரத வீதி, யாழ்ப்பாணம்.

# திருப்பாடுகளை நினைவுகூருவோம்

## நான் யார்



எந்தவொரு மனிதனும் இந்த உலகில் பிறக்கும் போது அனைத்தினையும் அறிந்தவர்களாகவோ சகலவிடயங்களையும் தெரிந்தவர்களாகவோ பிறப்பதில்லை. ஆனால், குழந்தைப் பருவம் முதல் படிப்படியான வளர்ச்சியின் போது தனது நிலையினையும் தான் வாழும் சூழலையும் மற்றும் அயலவர்களையும் அறிந்து கொள்ளும் ஓர் மனப்பக்குவம் உண்டாகின்றது.

இதற்கு அடுத்த ஓர் நிலை மனிதன் மட்டில் உண்டு என்பதனை பலர் மறந்து தமது வாழ்க்கைப் பயணத்தினை மேற்கொள்கின்றனர். எனவே, மனிதன் தன்னைத் தானே நன்கு அறிந்து தனது ஆழ் மனதில் சென்று தன் வாழ்வினை அமைத்துக்கொள்ளும் ஓர் உயரிய நிலையே அதுவாகும். இத்தகைய நிலையினை மனிதன் இன்று மறந்து வாழ்வதோடு பின்பற்றி வாழவும் மறுக்கின்றான்.

இவ்வாறான ஓர் எண்ண ... கொண்டு மனிதன் வாழ்வதற்கு ... காரணங்கள் சுயநலம், தற்பெருமை, வெளிவேஷம், பிறரைப்போல் தானும் ... முற்படுதல், ஏற்றத் தாழ்வு, பிரிவினைகள், பெருமைகள், பாரம்பரியக் கொள்கைகள் என்பனவாகும். இவற்றில் நிலைத்திருப்பதனால் தான் இன்று உலகிலும் நாட்டிலும் சமூகப் பின்னணிகளிலும் பாவ அடிமைத்தனம் தலைதூக்கியிருப்பதுடன், அதனால் மனிதன் சீரழிந்து சின்னாபின்னம் ஆக்கப்பட்ட ஓர் நிலை காணப்படுகின்றது.


எனவே, இந்த நிலை முற்றிலும் களையப்பட வேண்டும். மண்ணுலகில் இறைமாட்சியும் அமைதியும் கிடைக்கவேண்டுமாயின் முதலில் ஒவ்வொருவரும் தன்னைத் தானே முழுமையாக ஆய்ந்தறிந்து சீர்தூக்கி பார்த்து தன் நிலைதனை அறிந்து ... போது தான் மேற்கூறப்பட்ட தடைகள் யாவும் களையப்படுவதோடு அயலவர் வாழ்விலும அக்கறை உடையவர்களாகவும் பொதுப்பணியிலும் ஏனைய பணிகளிலும் அக்கறையுடனும் விருப்புடனும் செயற்படும் ஒரு நிலை காணப்படும்.

இத்தகைய வாழ்வுதனை வாழ்ந்து எம் மனங்களில் எல்லாம் என்றும நிலைத்திருக்கும் இறைமகன் இயேசுவின் வாழ்வில் நாம் சிறப்பாக மேற்கூறப்பட்ட பண்புகளை அறிந்துகொள்ளலாம்.

எனவே, நாம் ஒவ்வொருவரும் எம்மை நாமே ஆய்ந்தறிந்து நாம் வாழும் சூழல், இடம், காலம் போன்றவற்றினைக் கருத்தில் கொண்டும் வாழும்போது நாம் யார் எனவும் ஏன் நாம் இவ்வுலகில் வாழ வேண்டும் என்பதனையும் எமக்கு இந்த தவக்காலம் வெளிப்படுத்தும்.

● ஜெ.அனுஷ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உயிர்க்கொல்லி

## நுளம்பினால் பரவும் நோய்கள்

*(சென்ற வாரத் தொடர்ச்சி)*

நுளம்பினால் பரவும் நோய்களைக் கட்டுப்படுத்துவதில் நுளம்பின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவது மிக முக்கியமானது. மிக எளிமையான தனி மனிதப் பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பயன்படுத்துவதன் மூலம் மலேரியா, யானைக்கால் நோய், டெங்குக் காய்ச்சல், ஜப்பான் மூளைக் காய்ச்சல் மற்றும் சிக்குன்குன்யா போன்ற நோய்களால் ஏற்படுகின்ற சுகவீனங்கள், இறப்புக்களையும் தவிர்க்கலாம்.

நுளம்புகளின் வளர்ச்சியை பல வழிகளிலும் கட்டுப்படுத்தலாம். அவையாவன-

நும்புகள் வளரக்கூடிய இடங்களில் இருந்து நீரை அப்புறப்படுத்தல்.

சுற்றுச்சூழலில் பிளாஸ்டிக் கொள்கலன்கள், போத்தல்களை இல்லாது செய்தல்.

கால்வாய்களையும் கூரைப்பீலிகளையும் கிரமமாகவும் ஒழுங்காகவும் துப்புரவுசெய்தல். இது மழைக் காலம் தொடங்குவதற்கு முன் செய்யப்பட வேண்டும்.

வீடுகளைச் சுற்றியிருக்கும் நீர்த்தேக்கங்கள் உள்ள இடங்களில் இருந்து நீரை அகற்றுதல்.

பகல்வேளைகளில் நுளம்புகள் சிறு பற்றைக்குள் தங்கியிருந்து விட்டு மாலை இரவு நேரங்களில் மனிதர்களை கடிக்கும். ஆகவே 100 மீற்றர் வரையிலான பகுதிகளில் பற்றைகள் இல்லாது சுத்தமாக வைத்திருக்கவேண்டும்.

வீட்டுக்குள் நுளம்புகள் உட்பிரவேசிப்பதைத் தடுக்கக் கூடிய பூச்சிக்கொல்லி மருந்துகளைப் பயன்படுத்துவதன் மூலமும் வீட்டுக்கு வெளியில் செல்லும்போது நுளம்புகள் எம்மை அண்டாது தடுக்கும் மருந்துகளைப் பூசிக்கொள்வதன் மூலமும் நுளம்பு கடிப்பதனைத் தவிர்க்கலாம்.

மாலை வேளைகளில் வெளியே செல்லும் போது உடம்பை முழுமையாக மறைக்கக் கூடிய உடைகளை அணிவது அவசியம். ஜன்னல்களுக்கு பூச்சிக்கொல்லி மருந்துகள் சேர்க்கப்பட்ட நுளம்பு வலைகளைப் பாவிப்பதனால் வீட்டுக்குள் நுளம்புகள் நுழைவதைத் தடுக்கலாம். பூச்சிக்கொல்லி மருந்துகளில் தோய்த்த நுளம்பு வலைகளைப் பயன்படுத்தல் சாதாரண வலைகளிலும் பார்க்க வினைத்திறன் கூடியதாக இருக்கும்.

அதிகமாகத் தொற்றுநோய்கள் பரவக் கூடிய காலங்களில் கிருமிநாசினிகள் விசிறுவதன் மூலம் மலேரியா நோயை கட்டுப்படுத்த முடியும். ஈடிஸ் நுளம்புகள் கூடுதலாக வீட்டுக்குள் தங்காமல் இம்முறை அவற்றைக் கட்டுப்படுத்த உகந்ததல்ல. உடனடியாக அழிக்கக் கூடிய பூச்சிக்கொல்லி மருந்துகள் அவசியம். இவை விசிறப்பட பிரத்[illegible]யேகமான உபகரணங்கள் பயன்படுத்தப்பட வேண்டும். இவை Fogging Machine என அழைக்கப்படும். இதன் பயன்பாடு பல நன்மைகளைக் கொண்டிருந்தாலும் சூழலை மாசுபடுத்தி சூழலில் இருக்கும் ஆஸ்மா நோயாளர்களுக்கும் மற்றவர்களுக்கும் தாக்கத்தை ஏற்படுத்தலாம்.

நுளம்பினால் பரவும் நோய்களைக் கட்டுப்படுத்தவும் சமூகத்திலிருந்து ஒழிக்கவும் நோய்ச் சிகிச்சை மாத்திரம் பயன் தராது. நுளம்புகளைக் கட்டுப்படுத்துவது மிக அவசியம். இதற்கு முழுச்சமூகத்தினதும் ஒத்துழைப்பு அத்தியாவசியமானது.

• வைத்தியக்கலாநிதி ந. சி[illegible]ராஜா

## யாழ்ப்பாண சமூகத்தின்....

5 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

என்பது அனைவரும் அறிந்த விடயமே. இதையும் மீறி விதிவிலக்காக சில மனித மிருகங்கள் பலாத்காரமாக தமது காமவேட்கையை தீர்த்துக்கொள்ள முயற்சிக்கும் சம்பவங்கள் இடம்பெறுகின்ற போதிலும் பொரும்பாலான வேண்டத்தகாத உறவுகள் யாழ். குடாநாட்டுப் பெண்களின் சம்மதத்துடனேயே நடந்தேறுகின்றன.

ஆக, இச்சமுதாயம் சீரழிவுக்கு உள்ளாக முதல் காரணமானவர்கள் இளம் பெண்கள் தான் என்பதை பெண்கள் ஏற்றுத் தான் ஆகவேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். அதற்காக எல்லாப் பெண்களையும் நாம் குறை கூறமுடியாது. அவ்வாறு குற்றம் காணவிழைவது தவறானதேயாகும். யாழ்ப்பாணத்தில் உள்ள எல்லா இளவயதுப் பெண்களும் அவ்வாறு நடந்துகொள்கிறார்கள் என்பது எமது கருத்தல்ல. சிலருடைய இவ்வாறான துர்நடத்தைகள் பெண்ணின் மகிமையை இழக்கச் செய்து சமூகத்தின் ஏனைய பெண்களையும் தாய்மை உணர்வு மறந்து சகோதர உணர்வு மறந்து நடத்தைக் குறைபாடு உடையவர்களாக பார்க்கத் தூண்டும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்தி விடும் என்பது வேதனைக்குரிய விடயமாகத்தான் சமூகப்பிரக்ஞை உள்ளவர்களால் நோக்கப்படுகிறது.

காதலின் புனிதத் தன்மை அறியாதவர்கள் சிலர் காதலின் பெயரைச் சொல்லி பல இ[illegible] பெண்களை ஏமாற்றி அவர்களின் கற்பைச சூறையாடி பின் அவர்களைக் கைவிடும் சம்பவங்கள் பல குடாநாட்டின் பல பாகங்களிலும் விரவிக் காணப்படுகின்றன. ஏமாறுபவர்கள் இருக்கும் வரை ஏமாற்றுபவர்களும் இருக்கத்தான் செய்வார்கள். ஆதலால், இன்றைய கலியுகக் காதலை நம்பி ஏமாறாமல் விழிப்புணவுர்வுடன் தமது கற்பைக் காக்க பெண்கள் கற்றுக்கொள்ள வேண்டும்.

கூசாமல் தவறுகளை இழைத்துவிட்டு அவற்றையெல்லாம் மூடிமறைத்து வெளிநாட்டு மாப்பிளைகளுக்கு வாழ்க்கைப் பட்டு விடலாம் என நினைக்கும் யாழ். குடாநாட்டு பெண்களே! உங்கள் நடத்தையின் மீதும் கற்பின் மீதும் கொண்ட நம்பிக்கையால்தான் உங்களை மணம் முடிக்க வெளிநாட்டு மாப்பிளைகள் விரும்புகிறார்கள் என்பதை மறவாதீர்கள். சாவகாசமாக தப்புச் செய்யும் உங்கள் வண்டவாளம் தெரிந்தால் உள்ளூரில் மட்டுமல்லாமல், வெளியூரிலும் வாழ்க்கைப்பட முடியாமல் சமூக அந்தஸ்து இழந்து வெறும் விபச்சாரிகளாகவே நோக்கப்பட வேண்டிய நிலை உருவாகும் என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும். இவ்வாறான சீர்கேடுகள் தொடருமாக இருந்தால் பல பெண்களின் மணவாழ்க்கை பாதிக்கப்படுவதுடன், அவை உள்ளூரில் சீதனக் கொடுமையையும் அதிகரித்து முதிர் கன்னிகள் பெருக்கமடையவே வாய்ப்பளிக்கும்.

ஆகவே, சீரழியும் சமூகத்தை தடுத்தி நிறுத்தி வளமான ஓர் சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதில் ஆண்களுக்கு நிகராக பெண்களும் முன்வர வேண்டும். அவ்வாறின்றி வெறுமனே பெண்விடுதலை, சமத்துவம், பெண்ணியம் பற்றி பேசிக்கொண்டிருப்பதால் எவ்வித பயனும் ஏற்பட்டு விடப் போவதில்லை. பெண்கள் ஆண்களின் இச்சை தீர்க்கும் போகப் பொருட்கள் என்பது போல பெண்களின் நடவடிக்கைகள் அமைந்துவிடாது சீரழியும் யாழ்ப்பாண சமுதாயத்தை மீட்சிபெற வைப்பதில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். அவ்வாறின்றேல் பல பண்பாட்டுத் தளங்களில் விகர்சித்திருந்த யாழ். சமூகமாக ஏனைய சமூகங்களால் புறந்தள்ளப்பட்டு ஓர் தரங்கெட்ட - கேவலமான சமூகமாகவே கணிக்கப்படும். ஆகையால், இந்நிலை எமது சமூகத்திற்கு ஏற்படத்தான் வேண்டுமா? என ஒவ்வொரு இளைஞர், யுவதியும் சிந்தித்து செயற்பட வேண்டும்.

இறுதியாக, எமது சமூகத்தில் நடைபெறும் சீர்கேட்டுச் சம்பவங்களை விமர்சித்துக்கொண்டிருப்பதால் மட்டும் எவ்வித மாற்றமும் ஏற்பட்டுவிடப்போவதில்லை. இவ்வாறான சம்பவங்கள் தொடர்ந்தும் இடம்றொமல் தடுத்துநிறுத்துவதற்கான வழிவகைகளைக் ஒவ்வொருவரும் தம்மைத்தாமே திருத்திக்கொள்ள வேண்டும். நாம் ஒவ்வொருவரும் சுய ஒழுக்கத்தைக் கடைப்பிக்கின்றோமா என்பதை ஒவ்வொரு கணமும் எண்ணிப்பார்க்க வேண்டும். அதைவிடுத்து, எமது சமூகப்பிறழ்வுகளைத் தொடர்ச்சியாக எழுதிக்கொண்டே செல்வதனால் பேனா மை கரைவது தான் மிச்சமாகிவிடும். அதற்குள் எமது பண்பாட்டு எச்சங்களே காணாமல் போய்விடும். இவ்வாறானதொரு நிலைமை எமது யாழ். சமூகத்துக்கு ஏற்படுவதை யாராலும் ஏற்றுக் கொள்ள முடியாது. எனவே, நாம் சமூகத்தை நல்வழிப்படுத்தி வசந்தத்தை நோக்கி இட்டுச் செல்வோமாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வீதியோரத்தில் பேய்: நடுங்கும் கிராமம்



பேய், ஆவிகளின் சேட்டை என போன்ற மர்மக்கதைகளை நாம் அன்றாடம் கேட்டுக்கொண்டிருக்கும் போதே தேகம் ஒரு கணம் விறைப்பேறும். ஆனால் தமிழ் நாடு நாளந்தம் பேய், பிசாசுகளின் அட்டகாசத்தால் விளிபிதிக்கிக்கொண்டிருக்கிறது.

தமிழ்நாடு, நாமக்கல்லில் இருந்து சுமார் 8 கிலோமீற்றர் தொலைவில் விட்டமநாய்க்கன்பட்டி கிராமத்தினரோ அங்கிருக்கும் ஒரு வீதி வளைவை பார்த்து கதி கலங்கி கொண்டிருக்கிறார்கள். ஏன் இந்த பயம் என்று கேட்டால், அவர்கள் கூறும் காரணம் சற்று திகைக்க வைக்கிறது.

கடந்த சில ஆண்டுகளாக இந்த கிராமத்தின் வழியாக செல்வோரை ஆட்டி படைத்துக் கொண்டிருக்கிறது பேய் பீதி. கிராமத்துக்குள் நுழையும் பகுதியில் இருக்கும் தார்சாலையின் வளைவுதான் அவர்கள் அச்சத்திற்கு அச்சாரம். இங்கு இரவில் மோட்டார் சைக்கிள், கார், சைக்கிள் போன்றவற்றில் வருபவர்கள், வளைவில் திரும்பும் போது, குறிவைத்து கீழே தள்ளப்படுவதாக கிராம மக்கள் கூறுகிறார்கள். எந்த காரணமும் இல்லாமல் திடீரென விழுவதால், அதிர்ச்சியில் உறைந்து போவதாகவும் சொல்கிறார்கள்.

'பிறார் நம்மை பிடித்து தள்ளுவது? யாரும் இல்லாத இடத்தில் எப்படி விழுந்தோம்? போன்ற குழப்பங்களோடு எழுந்தால், உடல் முழுவதும் காயங்களும் இருப்பதை பார்க்கும் போது பயத்தில் காய்ச்சலே வந்து விடுகிறது' என்று அந்த வழியை கடந்த பலர் அச்சத்தோடு கூறுகிறார்கள். பல ஆண்டுகளாக இது போன்ற சம்பவங்கள் அந்த வளைவில் நடந்து வருவதால், பகலில் கூட அந்த பாதையை தனியாக கடப்பதில்லையாம்.

விஷயம் தெரிந்த உள்ளூர்வாசிகள் யாரும் இரவு வேளையில் இந்த வீதி வழியாக வருவதே இல்லை என்று கூறுகிறார்கள்.

இதுபற்றி தெரியாமல் வரும் வெளியூர்க்காரர்கள் தான் இதில் வசமாக மாட்டிக் கொள்கிறார்கள் என்கின்றனர் கிராம மக்கள். சிலருக்கு விழுந்த வேகத்தில் ரத்தம் கொட்டும் அளவுக்கு பெரிய காயங்களும் ஏற்பட்டிருக்கிறது.

முதலில் இதை கிராமத்தினர் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. அதன்பிறகு தொடர்ச்சியாக சம்பவங்கள் நடக்க பயம் பற்றிக் கொண்டது. வளைவில் நிற்கும் கெட்ட ஆவிகள் தான் இதற்கு காரணம் என்றும், அவைதான் மனிதர்களை தள்ளி விட்டு ரத்தம் பார்ப்பதாக நம்பிய கிராம மக்கள், அந்த வளைவில் அமாவாசை நாளின் நடுநிசியில் கோழிகளை பலியிட்டு சிறப்பு பூஜை நடத்தினார்களாம். ஆனால் அதற்கும் பலன் இல்லை என்றே கூறுகிறார்கள்.

பேய் பீதி கிளப்பும் வளைவில், கீழே விழுந்து பீதி அடைந்த அந்த கிராமத்தை சேர்ந்த பழனிசாமி கூறியதாவது; ஒரு நாள் இரவு, நாமக்கல் போய்விட்டு ஊருக்கு வந்துட்டு இருந்தேன். அந்த வளைவு பாதையில் வந்த போது, யாரோ பிடிச்சு தள்ளுற மாதிரி இருந்துச்சு. என் மோட்டார்சைக்கிள் அருகில் உள்ள பாலத்தில் மோதி, கீழே விழுந்து விட்டேன். கை, கால்ல அடிபட்டது. அன்று இரவே பயங்கர காய்ச்சல் வந்து 10 நாள் படுத்துட்டேன்.

மருந்து மாத்திரை சாப்பிட்டும் குணமாகல. சேந்தமங்கலத்தில் உள்ள சாமியாரிடம் தாயத்து வாங்கி கட்டுன பிறகு தான் சரியாச்சு' என திகிலுடன் கூறி முடித்தார் பழனிச்சாமி.

நிறைவேறாத ஆசைகளோடு செத்தவங்க ஆவிதான் வளைவில நின்னு ஆட்டி படைக்கிறது என்று கிராமத்தினர் நம்பினாலும், வளைவின் மர்மம் இன்னும் நீடிக்கிறது.

இது போன்ற விடயங்கள் நமது நாட்டில் இடம்பெற்றாலும் அது தொடர்பான செய்திகளோ அல்லது மக்களின் திகில் அனுபவங்களோ எமக்கு கிடைப்பது எட்ட கனியே.

# 'யாழ் ஓசையின்' வார ஜோதிட பலன்

## [08.04.11 முதல் 14.04.11 வரை]

## கலாநிதி துன்னையூர் ராம் தேவலோகேஸ்வர குருக்கள் (சாரதாபீட ஜோதிடம்)



### * மேஷம்

மேட ராசி அன்பர்களுக்கு ஓரளவுக்கு அனுகூலமான பலன்கள் அமையும். தேவையற்ற வீண் செலவீனங்கள் எதிர்பாராத வகையிலே ஏற்படும். தொழில் நிலைகளில் அலைச்சல் இழுபறி நிலைகள் அமைந்திருக்கும். குடும்பத்தில் அனுகூலமான திடீர் நன்மைகள் அமைய இடமுண்டு. பணவரவு தேவைகளுக்கு ஏற்ப அமையும் நிலைப்பாடு உண்டு. கடன் நிலைகளில் சற்று சுமாரான பலாபலன்களே அமையும். பெண்களுக்கு சற்று சஞ்சல நிலையிருக்கும். மாணவர்கள் முயற்சி தேவை.



### * இடபம்

இடபராசி அன்பர்களுக்கு சிறப்பான பலாபலன்கள் அமையும் நிலையுண்டு. தொழில் நிலையில் முன்னேற்றகரமான விடயங்கள் அமைய இடமுண்டு.

பணவரவு மிகவும் திருப்திகரமான நிலையிலே அமையும் பலனுண்டு. மூத்த சகோதரர் மூலமாக நன்மையான பலன்கள் அமையும். கடன் நிலைகளில் சுமுகமான பலாபலன்கள் ஏற்படும் நிலையுண்டு. பெண்களுக்கு மனமகிழ்ச்சி உண்டு. மாணவர்களுக்கு வெற்றி உண்டு.



### * மிதுனம்

மிதுன ராசி அன்பர்களுக்கு ஓரளவிற்கு அனுகூலமான பலாபலன்கள் அமையும். எடுக்கின்ற முயற்சிகள் வெற்றிகளை கொடுக்கும்.

தொழில் நிலையில் முன்னேற்றகரமான பலன்கள் அமையும். திடீரென ஏதேனும் பிரயாணங்கள் அமைகின்ற நிலை இருக்கும். பண வரவு தேவைகளுக்கு ஏற்ப அமையும் நிலை உண்டு. கடன் நிலைகளில் சிறு சிறு மந்த நிலைகள் இருக்கும். பெண்களுக்கு நன்மையுண்டு. மாணவர்கள் முயற்சி தேவை.



### * கடகம்

கடகராசி அன்பர்களுக்கு சிறப்பான பலாபலன்கள் அமையும் நிலையுண்டு. தொழில் நிலைகளில் முன்னேற்றகரமான பலன்கள் ஏற்படும். குடும்பத்தில் மகிழ்வும் சிறப்பும் அமைகின்ற நிலை உண்டு. பணவரவு மிகவும் திருப்திகரமான நிலையிலே அமையும்.

தந்தை மூலமாக அனுகூலமான பலன்கள் ஏற்படும் நிலையிருக்கும். கடன் நிலைகளில் சுமுகமான பலாபலன்கள் அமையும். பெண்களுக்கு நன்மை உண்டு. மாணவர்களுக்கு வெற்றியுண்டு.



### * சிம்மம்

சிம்மராசி அன்பர்களுக்கு சற்று சுமாரான மத்திமமான பலன்களே அமையும். எடுக்கின்ற முயற்சிகளில் நிதானம் தேவை. தொழிலில் சற்று அலைச்சல் இழுபறி நிலைகள் அமையும் பலனிருக்கும். பணவரவு தேவைகளுக்கு ஏற்ப அமையும் பலன் உண்டு. உடல் நிலையில் சிறு சிறு சுகயீனங்கள் ஏற்பட்டு மறையும். கடன் நிலைகளில் இழுபறி தாமத நிலைகள் தொடரும். பெண்களுக்கு மனச் சஞ்சலமிருக்கும். மாணவர்கள் முயற்சி வேண்டும்.



### * கன்னி

கன்னி ராசி அன்பர்களுக்கு ஓரளவிற்கு அனுகூலமான பலன்கள் அமையும். தொழில் நிலையில் நற்பலாபலன்கள் ஏற்படும் நிலையுண்டு. குடும்பத்தில் மகிழ்வும் சுபகாரிய நிலைகளும் அமைகின்ற பலனுண்டு. பணவரவு அனுகூலமான நிலையிலே அமையும். மனைவி மூலமாக நற்பலாபலன்கள் அமையும் நிலையுண்டு. கடன் நிலைகளில் அனுகூலமான பலாபலன்கள் அமையும். பெண்களுக்கு நன்மையுண்டு. மாணவர்களுக்கு அனுகூல பலனுண்டு.



### * துலாம்

துலா ராசி அன்பர்களுக்கு சற்று சுமாரான பலன்களே அமையும். தொழில் நிலைகளில் அலைச்சல் இழுபறி நிலை அமைந்திருக்கும். குடும்பத்தில் ஓரளவிற்கு அனுகூலமான பலன்கள் ஏற்படும். எதிரிகளின் தொல்லை சிரமங்கள் சற்று அதிகமாய் இருக்கும். பணவரவு தேவைகளுக்கு ஏற்ப அமையும் நிலை உண்டு. கடன் நிலைகளில் இழுபறி தாமத நிலைகள் தொடரும்.

பெண்களுக்கு மத்திம பலன் ஏற்படும். மாணவர்கள் முயற்சி தேவை.



### * விருச்சிகம்

விருட்சிகராசி அன்பர்களுக்கு மிகவும் சிறப்பான அனுகூலமான பலன்கள் அமையும் நிலையுண்டு. தொழில் நிலைகளில் முன்னேற்றகரமான பலன் அமையும். பணவரவு அனுகூலமான நிலையில் சிறப்பாக அமையும் பலாபலன் உண்டு.

குடும்பத்தில் சிறப்பான நிறைவான பலன்கள் அமையும். கடன் நிலைகளில் சுமுகமான பலன்கள் ஏற்படும். பெண்களுக்கு நன்மையுண்டு. மாணவர்களுக்கு வெற்றி உண்டு.



### * தனுசு

தனுசு ராசி அன்பர்களுக்கு ஓரளவிற்கு அனுகூலமான பலன்கள் அமையும் நிலையுண்டு. எடுக்கின்ற முயற்சிகளில் நன்மையுண்டு. தொழில் நிலைகளில் அலைச்சல் இழுபறி நிலை இருக்கும். உடல் நிலையில் சுகயீனங்கள் மருத்துவ செலவுகள் ஏற்படும். தாயார் வழியில் செலவீனங்கள் அமைய பலன் உண்டு. கடன் நிலைகளில் சற்று இழுபறி நிலை இருக்கும். பெண்களுக்கு அனுகூலமுண்டு. மாணவர்களுக்கு மேன்மையுண்டு.



### * மகரம்

மகர ராசி அன்பர்களுக்கு அனுகூலமான பலாபலன்கள் ஏற்படும். குடும்பத்தில் மகிழ்வும் சுபகாரிய நிலைகளும் ஏற்படும் பலனுண்டு. தொழில் நிலைகளில் முன்னேற்றமான பலன்கள் அமையும். பணவரவு மிகவும் திருப்திகரமான நிலையிலே அமையும் பலன் உண்டு. எதிர்பார்க்கின்ற விடயங்களில் நல்ல வெற்றிகள் ஏற்படும். கடன் நிலைகளில் சுமுகமான பலாபலன்கள் ஏற்படும் நிலையுண்டு. மாணவர்களுக்கு [illegible] ளுக்கு நன்மைகள் உண்டு.



### * கும்பம்

கும்ப ராசி அன்பர்களுக்கு சற்று சுமாரான மத்திம காலமாகவே அமையும். எடுக்கின்ற முயற்சிகளில் நிதானம் வேண்டும். தொழில் நிலைகளில் அலைச்சல் இழுபறி நிலை இருக்கும். உடல் நிலையில் சுகயீனங்கள் மருத்துவ செலவுகள் ஏற்படும். பணவரவு சற்று சுமாரான மத்திமமான நிலையிலேயே அமையும். கடன் நிலைகளில் இழுபறி தாமத நிலைகள் தொடரும். மாணவர்கள் முயற்சி தேவை. பெண்களுக்கு மனச் சஞ்சலமுண்டு.



### * மீனம்

மீன ராசி அன்பர்களுக்கு ஓரளவிற்கு அனுகூல பலன் உண்டு. தொழில் நிலையில் சற்று இழுபறி தாமத பலன் இருக்கும். குடும்பத்தில் ஓரளவிற்கு அனுகூலமான பலன் அமையும். எதிர்பாராத வகையில் திடீர் செலவுகள் அமையும் நிலையுண்டு. பணவரவு தேவைகளுக்கு ஏற்ப அமையும் நிலை உண்டு.

கடன் நிலைகளில் நிதானமான செயற்பாடு வேண்டும். மாணவர்கள் முயற்சி தேவை. பெண்களுக்கு நன்மை உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈவினை அ.த.க. பாடசாலையின் உதயமும் வளர்ச்சியும்




வலிகாமம் கல்வி வலயத்திற்கு உட்பட்ட உடுவில் கோட்டக் கல்விப் பிரிவிலுள்ள ஈவினை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை நீண்டதொரு கல்விப் பாரம்பரியத்தைக் கொண்டது.

1892 ஆம் ஆண்டு ஈவினை கிராமத்தில் ஆங்கிலேயரால் ஈவினை மெதடிஸ்த வித்தியாசாலை என்ற பெயரில் ஒரு பாடசாலை ஆரம்பிக்கப்பட்டதாகவும், பின்னர் 1957 ஆம் ஆண்டு ஈவினை கிராமத்தினர் விக்னேஸ்வரா வித்தியாசாலை என்ற பெயரில் ஒரு பாடசாலையை ஆரம்பித்து இந்து போட் நிறுவனத்திடம் ஒப்படைத்ததாகவும் வரலாறுகள் கூறுகின்றன.

ஆரம்பத்தில் இரண்டு பாடசாலைகளும் நல்ல நிலையில் கல்வியை வழங்கிவந்தமையினால் அயல் கிராம மாணவர்களும் ஈவினைக்கு வந்து கல்வி கற்கும் நிலை காணப்பட்டுள்ளது. ஆனாலும், காலப் போக்கில் இரண்டு பாடசாலைகளுமே அரசிடம் ஒப்படைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இதன்பிரகாரம் 1975 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இரு பாடசாலைகளும் இணைக்கப்பட்டு ஈவினை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை என்ற பெயரில் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

அந்த ஆண்டு தொடக்கம் ஒரு பெயரில் இரு வேறு இடங்களில் இப்பாடசாலை இயங்கிவந்துள்ளது. ஏற்கெனவே இயங்கிய பாடசாலைக் கட்டடத்திலேயே 750 மீற்றர் வித்தியாசத்தில் இயங்கிவந்தன. இப் பாடசாலைகளை இணைக்கும் போது க.பரமநாதன், செ.செல்வரத்தினம் ஆகியோர் அதிபர்களாக கடமையாற்றியுள்ளனர். அரச பாடசாலையைப் பொறுப்பேற்ற பின்னர் க. பரமநாதன் தொடர்ந்து அதிபராகக் கடமையாற்றியுள்ளார். தொடர்ந்து வ. மகாலிங்கம், ந. ஜெயக்குமாரன் மற்றும் ச. சண்முகலிங்கம் ஆகியோர் அதிபர்களாகக் கடமையாற்றியுள்ளார்கள்.

கடந்த 2007 ஆம் ஆண்டு அதிபராகப் பொறுப்பேற்ற சைவப்புலவர் செ. பரமேஸ்வரன் என்பவர் இரண்டு இடங்களில் இயங்கிய இப் பாடசாலையினை ஒரே கட்டடத்தில் - ஒரே கூரையின் கீழ் கொண்டுவருவதற்கு பெரு முயற்சி எடுத்து வெற்றியும் கண்டுள்ளார். தற்போதும் இவரே அதிபராகக் கடமையாற்றி வருகின்றார்.



ஒழுங்கான நிர்வாகம் மற்றும் தரமான கல்வியை மாணவர்களுக்கு வழங்குவதற்கு வழியமைக்கும் முகமாக முன்னாள் கொத்தணி அதிபர் ஆ.சி. நடராசா என்பவர் இப் பாடசாலையை முன்னேற்றுவதற்கு ஒரு ஒரேவழி ஒரே இடத்தில் பாடசாலையை இயங்கச்செய்வது தான் என்ற கருத்தை முன்வைத்தார்.

ஈவினை கிராம மக்களை விழிப்படைய வைத்து ஒன்றுசேர்த்து வலயக் கல்விப் பணிப்பாளருக்கு முன்வைத்த போது அக் காலத்தில் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு இருந்த ப. விக்னேஸ்வரன் அதனை ஏற்றுக் கொண்டு கட்டட வளத்தினை ஏற்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்ததார்.

'யுனிசெப்' நிறுவனத்தின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதி மற்றும் கனடா வாழ் பழைய மாணவர்களின் உதவியுடன் 100'x20' வகுப்பறை முழுமுயற்சியால் இக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டது.

பாடசாலைக்கு தேவையான பல்வேறு பௌதிக வளங்கள் கிடைத்தன. 2009 ஆம் ஆண்டில் மின்சார இணைப்பு, நீர் பம்பி என்பன பொருத்தப்பட்டன. 2010 ஆம் ஆண்டில் 'யுனிசெவ்' உதவியுடன் சிறுவர் விளையாட்டு முற்றமும் அமைக்கப்பட்டது.

இப்பாடசாலை மாணவர்கள் கல்விப் பெறுபேறுகளிலும் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் பல வெற்றிகளை ஈட்டிவருகின்றார்கள். குடும்ப, கோட்ட மட்டங்களில் வெற்றிபெற்றதோடு மட்டுமன்றி வலய மட்டத்திலும் வெற்றிபெற்றுள்ளார்கள். கடந்த 2009 ஆம் ஆண்டு செல்வி அலக்ஷிகா உதயகுமார் என்ற மாணவி 142 புள்ளிகளைப் பெற்று புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளதுடன், 2010 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் செல்வி க. கஜானா, ம. மிதுஷா ஆகியோர் முறையே 145, 143 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார்கள்.

இப்பாடசாலையில் மாணவர்களின் திறமைகளை வளர்ப்பதற்கு தமிழ் மன்றம், இந்து மன்றம், ஆங்கில மன்றம், சுகாதார மன்றம் என்பன இயங்கிவருகின்றன. ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் மாணவர்களின் திறமையை வெளிப்படுத்தல், நல்வழிப்படுத்தல் மற்றும் அறநெறிப் பண்புகளை வளர்க்கும் நிகழ்ச்சிகள் காலைப்பிரார்த்தனையின் போது இடம்பெறுகின்றமை இங்கு விஷேட அம்சமாகும்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம் பாடசாலைக்கு வேண்டிய உதவிகளை செய்துவருகின்ற அதேவேளை, பழைய மாணவர் சங்கம் ஒன்று இல்லாதபோதும் பழைய மாணவர்கள் பாடசாலைக்கு பெரும் உதவி செய்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

தற்போது இங்கு தரம்-1 முதல் தரம்-5 வரை வகுப்புக்கள் இடம்பெறுகின்றன. தரம்-10 மாணவர்கள் கல்வி கற்றுவருகின்றார்கள். நன்கு பயிற்றப்பட்ட ஆரம்பக் கல்வி ஆசிரியர்களும் ஒரு ஆங்கில ஆசிரியரும் கற்பித்துவருகின்றார்கள். மாணவர் தொகைக்கு ஆசிரியர்கள் போதுமானதாக இருப்பினும் 5 வகுப்புக்கள் இடம்பெறுவதனால் மேலும் ஒரு ஆரம்பக் கல்வி ஆசிரியர் தேவை காணப்படுகின்றது. ஒரு ஆசிரியர் விடுமுறை எடுக்கும் போது ஒரு வகுப்பில் ஆசிரியர் இல்லாத நிலை காணப்படுகின்றது.

இப் பாடசாலை மேலும் வளர்ச்சியடைய வைப்பதற்கு பல்வேறு வசதிகள் ஏற்படுத்திக்கொள்ள வேண்டியுள்ளது. மாணவர்களுக்கு தளவாடங்கள் பற்றாக்குறை காணப்படுவதனால் இவை நிவர்த்திசெய்யப்பட வேண்டியுள்ளது.

பாடசாலையின் வளாகத்திற்கான சுற்றுமதில் அமைக்கப்பட வேண்டியதுடன் புதிய கட்டடத்திற்கு மின் இணைப்பும் ஏற்படுத்த வேண்டும். பாடசாலை பயன்பாட்டிற்கு ஒலிபெருக்கி, போட்டோ பிரதி இயந்திரம், ரோணியோ இயந்திரம் என்பன தேவையாகவுள்ளன. அத்துடன் மாணவர்களின் கல்விச் செயற்பாட்டுக்கு கணினி மற்றும் நூலகத்திற்குரிய தளவாடங்கள், நூல்கள் என்பன தேவைபடுகின்றன. அத்துடன், ஆசிரியர்களுக்கான மலசலகூடம் அமைக்கப்பட வேண்டியுள்ளது.

யா/ஈவினை அ.த.க. பாடசாலையின் முன்னோக்கிய வளர்ச்சி பழைய மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் கிராம மக்களின் கைகளிலேயே...!

ஞானத்தமிழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டு நிகழ்வுகள்



மாதகல் சென். ஜோசப் மகா வித்தியாலயத்தின் நுழைவாயில் வளைவுத் திறப்பு விழாவில் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொண்ட விருந்தினர்கள் அதிபர் வி. நடராசாவினால் வரவேற்று அழைத்து வரப்படுவதனைப் படத்தில் காணலாம். (படம்:- அஸ்வின்)



மத்திய சுகாதார அமைச்சு நடத்திய ஆதார - பொது வைத்தியசாலைகளுக்கிடையிலான போட்டியில் 3 ஆவது இடத்தைப் பெற்ற யாழ். சுகாதார பிராந்தியப் பணிமனை பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஆ. கேதீஸ்வரன் அமைச்சரிடமிருந்து விருதினைப் பெற்றுக்கொள்வதைப் படத்தில் காணலாம். (படம்:-வடமராட்சி நிருபர்)



மாதகல் சென். ஜோசப் மகா வித்தியாலயத்தின் உயர்தர மாணவர் மன்றத்தின் வளனார் சஞ்சிகை வெளியீட்டு விழாவில் கலந்து கொண்ட வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ . இராஜேந்திரம் சஞ்சிகையை வெளியிட்டு வைப்பதைப் படத்தில் காணலாம். (படம்:- அஸ்வின்)



கொழும்பு தமிழ்ச் சங்கத்தில்அண்மையில் நடைபெற்ற கவிஞர் துரையரின் 8 ஆக்கங்களின் அறிமுகவிழாவில் கவிஞர் துரையிடமிருந்து சமூகஜோதி எஸ். இலகுப்பிள்ளை முதல் பிரதியைப் பெற்றுக்கொள்வதைப் படத்தில் காணலாம்.



வாழ்வகம் நிறுவுனர் உதயநாளும் பரிசுத்த தின நிகழ்வு 2011 இல் யூனியன் கல்லூரியின் அதிபர் எஸ். புண்ணியசீலன் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படுவதைப் படத்தில் காணலாம். (படம்:- தெல்லிப்பழை நிருபர்)



யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற விஞ்ஞான தின நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட திருமதி நித்தியகௌரி சாஜன் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். (படம்:- வேலணை நிருபர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகர சபை, யாழ்ப்பாணம்.

# விடைபெற்றார் முரளி



சுழல்ஜாலத்தினால் இலங்கை அணியின் வெற்றிகள் பலவற்றுக்கு அடித்தளம் அமைத்ததுடன் எதிரணிகளுக்கு சிம்ம சொப்பனமாக இருந்துவந்த இலங்கை மண்ணின் முத்தான முத்தையா முரளிதரன் சர்வதேச கிரிக்கெட் அரங்கிலிருந்துவிடை பெற்றுக்கொண்டார்.

கடந்த இரண்டு தசாப்தங்களாக கிரிக்கெட் அரங்கில் பல தடங்களைப்பதிவுசெய்து நீண்டதொரு சாதனையாளராக தன்னை உலகிற்கு வெளிப்படுத்திய முரளி 10 ஆவது உலகக்கிண்ணத் தொடரில் இந்திய அணியுடனான இறுதிப்போட்டியுடன் ஒரு நாள் தொடரிலிருந்து ஓய்வுபெற்றார். இதனையடுத்து டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டிகளிலிருந்து விடைபெற்றார்.

எதிர்வரும் 17 ஆம் திகதி தனது 39 ஆவது பிறந்த தினத்தினை கொண்டாடவுள்ள முத்தயைா முரளிதரன் 1972 ஆம் ஆண்டு கண்டியில் பிறந்தார். கண்டி புனித அந்தோனியார் கல்லூரியில் தனது கல்வியைத் தொடர்ந்த இவர் பாடசாலையின் கிரிக்கெட் அணியில் இணைந்து தனது பந்து வீச்சினால் பல வெற்றிகளைத் தேடிக்கொடுத்துள்ளார்.

1992 ஆம் ஆண்டு ஆர். பிரேமதாஸ அரங்கில் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் தனது முதல் சர்வதேச டெஸ்ட்

> 10 ஆவது உலகக்கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டியுடன் சர்வதேச கிரிக்கெட் அரங்கிலிருந்து ஓய்வு பெற்ற முரளிதரன் தனது இரு தசாப்த கால கிரிக்கெட் வாழ்க்கைக்கு விடைகொடுத்தார்

போட்டியை ஆரம்பித்த முரளி கிரேக் மெக்டமர்ட்டின் விக்கெட்டை வீழ்த்தி தனது கன்னி விக்கெட்டினை பதிவு செய்ததுடன் அத்தொடரில் 141 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களை கைப்பற்றினார். இதனையடுத்து தனது விக்கெட் வேட்டையை ஆரம்பித்த முரளி 1993 ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினார் . இதுவே இவர் ஒரு போட்டியில் 5 விக்கெட்டுக்களை வீழ்த்திய முதல் சந்தர்ப்பமாக அமைந்தது. ஆரம்பமே தனது சுழலினால் எதிரணிகளுக்கு நெருக்கடியாக அமைய ஆரம்பித்த இவர் 1995 ஆம் ஆண்டு நெப்பியரில் நடைபெற்ற நியூஸிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் 64 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இதில் இலங்கை அணி வெற்றிபெற்றதுடன் வெளிநாடு ஒன்றில்இலங்கை அணி தனது முதல் வெற்றியை பதிவு செய்து கொண்டது.

இவ்வாறு விக்கெட்வேட்டைகளை நடத்தி வந்த முரளியின் பந்துவீச்சுக்கு முதலாவது சோதனை 1995 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 27 ஆம் திகதி ஆஸி. அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் காத்திருந்தது. இதில் நடுவராக செயல்பட்ட டெரல் ஹெயார் முரளி பந்தை எறிவதாக 7 தடவைகள் நோபோல் என அறிவித்தார். இது இவருக்கு மறக்கமுடியாத போட்டியாகவும் அமைந்தது. இது அடுத்த ஆண்டு ஆஸி. முக்கோண ஒரு நாள் தொடரிலும் தொடர்ந்தது. இலங்கை- மேற்கிந்தியத்தீவுகள் மோதிய போட்டியில் தனது முதலாவது சர்வதேச போட்டியில் நடுவராக பிரவேசித்த ரொஸ் இவரது பந்தினை நோபோல் என அறிவித்தார்.



இந்நிலையில் தொடர்ச்சியாக இவரது பந்து வீச்சுமீது விமர்சனங்கள் எழ ஆரம்பித்ததனையடுத்து ஆய்வு செய்த ஐ.சி.சி. இவரது பந்து வீச்சில் எந்த வித தவறும் இல்லை என அறிவித்தது. இதனையடுத்து பல சோதனைகளிலிருந்து மீண்ட முரளி 1998 ஆம் ஆண்டு தனது முதல் விக்கெட் சதத்தினை எட்டினார். ஹமில்டனில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் ஸ்டீபன் பிளமிங்கின் விக்கெட்டை வீழ்த்தியதன் மூலம் இலங்கை அணிக்காக டெஸ்ட் போட்டிகளில் 100 ஆவது விக்கெட்டினை வீழ்த்தினார்.

ஆனாலும் முரளியின் பந்து வீச்சு குறித்து குறைகூறுவதில் வெளிநாட்டவர்கள் குறியாகவே இருந்தனர். அவரது திறமைக்கு முட்டுக்கட்டை போடும் வகையில் எதிர்ப்புக்களை வெளிப்படுத்தி வந்தனர். அந்தவகையில் 1999 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 23 ஆம் திகதி அடிலைட்டில் நடைபெற்ற இங்கிலாந்துக்கு எதிரான ஒரு நாள் போட்டியில் முரளி பந்தை எறிகிறார் என மீண்டும் குற்றம் சுமத்த அப்போட்டியில் இலங்கை அணித்தலைவரான அர்ஜுண ரணதுங்க நடுவருக்கு எதிராக சுமார் 15 நிமிடங்கள் அணியை மைதானத்துக்கு வெளியே கொண்டு சென்றார். இதன் மூலம் முரளிக்கு அதிக நம்பிக்கை பிறந்தது. தனக்கு துணையாக அணியே நிற்கிறது என்றபோது அவர் தடைகளை படிக்கல்லாகவே மாற்றினார்.

இதன் விளைவாக 2002 ஆம் ஆண்டு காலியில் நடைபெற்ற சிம்பாப்வேக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் டெஸ்ட் அரங்கில் 400 விக்கெட்டுக்களை பூர்த்தி செய்த இவர் மீண்டும் அவுஸ்திரேலியாவின் சந்தேகப்பார்வையில் சிக்குண்டார். எப்போதுமே இவரது பந்து வீச்சு குறித்து சந்தேகக்கண்ணுடன் நோக்கும் ஆஸி. அணி இவரது தூஷ்ரா பந்து குறித்து சந்தேகத்தினை எழுப்பியது. இதனால் மீண்டும் ஐ.சி.சி. யின் பரிசோதனைக்கு உள்ளான முரளி அதில் வெற்றிபெற்றார்.

இதனையடுத்து தொடர்ந்து தனது பந்து வீச்சில் அதீத திறமையை வெளிப்படுத்தி வந்த முரளி 2007 ஆம் ஆண்டு பங்களாதேஷுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் 700 விக்கெட்டுக்களை எட்டினார். பின்னர் அதே உத்வேகத்துடன் தனது விக்கெட் வேட்டையை தொடர்ந்து வந்த இவர் கடந்த 2010 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 22 ஆம் திகதி இந்தியாவுடனான டெஸ்ட் தொடரில் 800 விக்கெட்டுக்கள் என்ற தனது இமாலயஉச்சத்தினை எட்டினார்.

இந்நிலையில் தொடர்ந்து ஒரு நாள் தொடர்களில் விளையாடிவந்த சாதனை நாயகனான முரளி நடந்து முடிந்த 10 ஆவது உலகக்கிண்ணத் தொடரின் இறுதிப்போட்டியினையடுத்து ஒரு நாள் தொடரிலிருந்து ஓய்வு பெற்று தனது 2 தசாப்தகால கிரிக்கெட் வாழ்கைக்கு விடைகொடுத்தார்.

இவரது இந்த ஓய்வு இலங்கை அணிக்கு மட்டுமல்ல ஒட்டுமொத்த இலங்கையர்களுக்கும் இழப்பினையே ஏற்படுத்தியுள்ளது. தனதுசுழலினால் இலங்கைக்கு பல வெற்றிகளைத் தேடிக்கொடுத்த இவர் தற்போது சர்வதேச போட்டிகளிலிருந்து விடைபெற்றிருப்பது ஜீரணிக்க முடியாதது. மேலும் இவ்வாறானதொரு நட்சத்திர வீரர் மீண்டும் கிரிக்கெட் உலகுக்கு கிடைப்பாரா என்பதும் விடையறியாக் கேள்வியாகிவிட்டது.

முரளியின் விளையாட்டு ஓய்வு பெற்றுவிட்டாலும் அவரது கிரிக்கெட் சேவைகள் கிரிக்கெட் உலகுக்கு அவசியமானதாக தென்படுகிறது. முரளியைப்போல் ஒரு முரளியை உருவாக்கிக் கொடுக்க வேண்டிய பொறுப்பு அவருடையதே.

Printed and published by Express Newspapers (Cey) Ltd. at No. 185, Grandpass Road, Colombo 14. On Friday April 08, 2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org